கல்கி


KALKI

19-10-1969

40 காசு




தாக்கர்ஸேயின்
எவர்:ப்ரெஷ்
67% 'டெரீன்' 33% காட்டன்
தி இந்துஸ்தான் ஸ்பின்னிங் & வீவிங் மில்ஸ் கோ., லிட்.,
தி இந்தியன் மான்யுபாக்சரிங் கோ., லிட்.,
16, அப்பாலோ ஸ்ட்ரீட், பம்பாய்-1.
"எவர்:ப்ரெஷ்' துணிகளுக்கு ஏஜெண்டுகள்: மெஸர்ஸ் எல். ஹர்ஜீவன் & கோ.,
114, கிருஷ்ண செளக், எம். ஜே. மார்க்கெட், பம்பாய்-2.
Madison/TT/3C TM



பெண்கள் என்றுலே
குறிப்பிட்ட சில
நாட்களில் அசௌ
கரியமும் வேதனையும்
இருக்கக்கூடும்.
ஸாரிடான் அவற்றி
லிருந்து விடுதலை
அளித்து அவர்களைப்
புத்துணர்வோடும்
மகிழ்வோடும்
இருக்கச் செய்கிறது.
ஸாரிடான்


சௌமிய, ஐப்பசி 3 :: 1969, அக்டோபர் 19

கல்கி
பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

பிரதமரின் தமிழக விஜயம்







தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 29 ★ இதழ் 12

பிரதமருக்குச் சில யோசனைகள்

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் மனம் சர்வாதிகாரத்தில் செல்வதாகத் தெரிகிறது. பல சந்தர்ப்பங்களின் சேர்க்கையே இதற்குக் காரணம். தமது மனப் போக்கை அவர் எதிர்த்துச் சமாளிக்க வேண்டும். பார்லிமெண்டுடன் கூடிய ஜனநாயக ஆட்சி முறைக்கு உரித்தான மரபுகளுக்கும், கோட்பாடுகளுக்கும் ஏற்றவாறு அவர் நல்ல பிரதம மந்திரியாகப் பணியாற்றுவதற்குத் தம்மைச் சீர்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

தமக்கு மட்டுந்தான் நவீன மனப் பான்மை இருக்கிறது, மாறுபட்ட கருத்தினருக்கு இல்லை என்று பிரதமர் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. நவீன கருத்துக்களில் நல்லவையும் உண்டு; கெட்டவையும் உண்டு. உலகம் சமீப காலத்தில் திருந்தியதாகத் தெரியவில்லை. இது தகுதியுள்ள சிந்தனையாளரின் கருத்து. சர்வதேசிய மனப்பான்மை போய், சுதேசிய வாதம் மீண்டும் முன்னுக்கு வந்து விட்டது. இரண்டு உலக யுத்தங்களின் படிப்பினையை மறந்து, அல்லது புறக்கணித்து ஒவ்வொரு நாடும் தன்னைப் பற்றி மட்டுமே சிந்திக்க ஆரம்பித்து விட்டது. இதை ஸ்ரீமதி இந்திரா காந்தி சுலபமாகக் கண்டு கொள்ளலாம். இந்த நூற்றாண்டில் அறநெறிகள் வெகுவாகப் பின்னடைந்து விட்டன. இவ்வாறு அறச் சிதைவுடன் இணைந்த நவீன மனப்பான்மை பயனற்றது. சென்ற நூற்றாண்டில் பெரிய ராஜநீதி வல்லுநர்களும் அறிஞர்களும் பிரபலப்படுத்திய தனி நபரின் வாழ்க்கை முறையும், சமுதாய வாழ்க்கை முறையும் மீண்டும் ஏற்றம் காணச் செய்ய வேண்டும். இல்லாவிடில் மனித வர்க்கத்தின் எதிர்காலம் நன்றாக இராது.

உற்பத்தியின் அபிவிருத்தியை விட, சரியான கொள்கையில் அதிக நம்பிக்கையுடன் இருப்பது இந்தியாவுக்கு அத்தியாவசியம். இன்றைய நிலைமைக்கு ஒவ்வாத சோஷலிஸம் நவீனச் சிறப்புடையதாகாது. அவ்வழி சென்று ஏழைகளுக்கு ஏற்றம் தர முடியாது. மேலே இருந்து கீழே இறக்கி விடுவது நல்வழியல்ல. மேல்நோக்கி ஏற்றிவிட வேண்டும். கீழ் நோக்கி இழுப்பது சுலபம். மேல்நோக்கி ஏற்றுவது சிரமம். ஆனால் இரண்டாவது முறையே நல்லது.

மற்றவர்களைவிடத் தமக்கு அதிக கெட்டிக்காரத்தனம் இருப்பதாக ஸ்ரீமதி இந்திரா நிச்சயமாக நம்புகிறார். அவர் தன்னம்பிக்கையுடன் இருப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அடக்கம் என்ற நற்குணமே எவருக்கும் நல்லது. காந்திஜியின் மகிமைக்குக் காரணம் அவரிடம் இந்தப் பண்பு நிறைய இருந்தது தான். சிந்தனை, அநுபவம், பகுத்தறிவு, கருத்துப் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் அடைகின்ற தன்னம்பிக்கைதான் உண்மையானது; பிறரைவிடத் தான் மட்டுமே கெட்டிக்காரன் என்று நினைப்பது பலவீனமே ஒழிய தன்னம்பிக்கை ஆகாது. ஸ்ரீமதி இந்திரா கெட்டிக்காரர்தான்; தமது தந்தையை விடக் கூடச் சில விஷயங்களில் கெட்டிக்காரர். ஆனால் இந்தியாவில் வேறு சில நல்லறிஞர்களும் இருக்கிறார்கள். அடக்கத்துடன், திறந்த மனத்துடன் அணுகினால் அவர்கள் பெரிதும் துணை புரியக் கூடியவர்கள்.

ஸ்ரீமதி இந்திரா தம்மைத் தாமே சில கேள்விகள் கேட்டுக்கொள்ள வேண்டும்: எந்த ராஜ்ய சர்க்காரையாவது நடத்திய அநுபவம் தமக்கு உண்டா? சர்க்காருக்கு வெளியே உள்ள சமூக சேவைப் பணிகளில், காதி ஸ்தாபனத்திலும், பிற விடங்களிலும், ராஜீய ஸ்தாபனப் பணிகளிலும் தமக்குள்ள அநுபவம் என்ன? இதுபற்றி அவரே சிந்திக்க வேண்டும். அவரது தந்தை எத்தனை வருஷ காலம் காரியக் கமிட்டியில் சேவை புரிந்தவர்? வல்லபபாய் பட்டேலுடைய சேவை எத்தகையது? அவற்றுடன் ஒப்பிடக் கூடிய

அநுபவம் ஸ்ரீமதி இந்திராவுக்கு உண்டா? அநுபவம் இல்லாத குறையை மேதாவிலாசத்தின் மூலம் நிறைவு செய்துவிட முடியும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியுமா?

இந்தியாவில் உள்ள ஏழை மக்களைத் தாம் நேசிப்பதாக ஸ்ரீமதி இந்திரா காந்தி அடிக்கடி அடித்துக் கூறுகிறார். மற்றவர்களுக்கு அத்தகைய உணர்ச்சி இல்லை என்று அவர் நினைத்துப் பேசுவதாகவே ஏற்படுகிறது. இது அகந்தைப் பேச்சு. அகந்தை மட்டுமல்ல. மக்களிடையே தகராறுகள் வளர்வதற்குத் தூபம் போடுவதாகவும் ஆகிறது. பணக்காரர் — ஏழை, தொழிலாளர் — நிர்வாகிகள் ஆகிய வெவ்வேறு பிரிவினரும் இந்தியாவின் நிலைமை சீர்திருந்துவதற்கு ஒத்துழைக்க வேண்டியவர்கள். அவர்களிடையே போராட்டத்தை வளர்ப்பது இப்போதைக்கு நல்ல தந்திரமாகத் தோன்றலாம். ஆனால் நீண்ட கால நலனுக்கு அது உகந்தது அல்ல. ஒரு பிரதம மந்திரிக்குக் கிடைக்கக்கூடிய அநுகூலங்களைவிடப் பின்னால் தேசத்துக்கு ஏற்படக் கூடிய நஷ்டங்கள்தான் பெரியவை. இந்தியாவின் பிரதம மந்திரி பாடுபட வேண்டியது நல்லிணக்கத்துக்காகவே ஒழியப் போராட்டத்துக்காக அல்ல. இதுவே காந்திஜி பெரிதும் விரும்பிய நன்னிலை. இதற்கு அவரது பொன்மொழிகளிலிருந்து மேற்கோள் தேவையில்லை.

வளர்ச்சிக்கான முயற்சிகளில் ஐம்பத்தைந்து கோடி பேர்களைக் கொண்ட நமது சமுதாயம் ஈடுபட்டிருக்கும் இச்சமயத்தில், அதன் பிரதம மந்திரிக்குச் சிறந்த பொருளாதார ஆலோசனை மிகமிகத் தேவை என்று விஷயமறிந்த ஒருவர் அண்மையில் கூறியிருக்கிறார். ஆலோசனை கூறுபவர்கள் சிறந்த அறிவாளிகளாகவும் பொருளாதார நிபுணர்களாகவும் இருக்க வேண்டும். அமெரிக்காவில் உள்ள பொருளாதார ஆலோசகர்களின் கவுன்சிலைப் போல் ஒரு கச்சிதமான ஸ்தாபனம் ஏற்பட வேண்டுமென்று அவர் கூறியுள்ளார். ஆலோசகர்கள் முரட்டு சித்தாந்தவாதிகளாகவோ, தீவிர பிற்போக்காளராகவோ அல்லது கம்யூனிஸ்டு புரட்சியாளராகவோ இருக்கலாகாது. சிறந்த சிந்தனையாளராக இருந்து கொண்டு பாரபட்சமற்ற சரியான யோசனையை அவர்கள் பிரதமருக்குக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். மத்திய, மாநில சர்க்கார்களின் அதிகாரத்தை மட்டும் வைத்துக்கொண்டு பெரிதாக எதையும் செய்துவிட முடியாது. மக்களிடையே நல்லிணக்கமும் இதயபூர்வமான ஒத்துழைப்பும் நமக்குத் தேவை. தகராறுகளைக் கிளப்பி விடுவது கம்யூனிஸ்டுகளின் கொள்கை. ஆனால் அது விவேகமுள்ள ஜனநாயக வழியல்ல.

ஸ்ரீமதி இந்திரா காந்தி வெற்றிகரமான பிரதம மந்திரியாக இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். தகுதி உள்ளவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதற்கு அவர் தமது மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஆலோசனை கூறத் தகுதியுள்ளவர்கள் மந்திரிகளாகவும் இருக்கலாம், நல்ல அதிகாரிகளாகவும் இருக்கலாம், சர்வாதிகாரத்துக்கு முகம்கொடுத்துத் தைரியமாக நல்லுரை சொல்லக்கூடிய பிறராகவும் இருக்கலாம். தமது இயற்கையான சுபாவத்தை மாற்றிக் கொள்வது என்று பிரதமர் முடிவு செய்தால் நல்ல ஆலோசனைக்குச் செவிசாய்க்க அவரால் முடியும். இன்றைய நிலைமையின் தேவைக்கு ஏற்ப உண்மையான நவீன மனப்பான்மை உடையவராக அவர் மாறிவிடுவார்.

நான் எந்த உணர்ச்சியுடன் இந்த யோசனைகளைக் கூறுகிறேனோ, அதே உணர்ச்சியுடன் அவை ஏற்கப்பட வேண்டும். நான் உபயோகிக்கும் சொற்கள் சிறிது கடுமையாக இருக்கலாம். ஆனால் ஒளிவுமறைவின்றி யோசனை கூற வேண்டியது என் கடமை என உணர்கிறேன்.

('ஸ்வராஜ்யா'வில் ராஜாஜி எழுதியது)

என்ன சேதி?

முதல்வரின் உறுதிமொழி

முதலமைச்சர் திரு கருணாநிதி அண்டை ராஜ்யமான ஆந்திர நாட்டில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டாலும், தமிழ் நாட்டில் ரத்து செய்யப்படமாட்டாது என்று அளித்துள்ள வாக்குறுதி தமிழகமக்களுக்குப் பெரும் ஆறுதலை அளிக்கும். மதுவிலக்கு அமலாவதில் காந்திஜியையும் ராஜாஜியையும் போலவே அண்ணாதுரையும் தீவிரமாக இருந்தார். குடிசையில் வாழும் ஏழை மக்களுக்கு மதுவிலக்கு நிரந்தரமான நலம் புரிகிறது என்பதை அண்ணாதுரை கண்டுணர்ந்து சொல்லி வந்தார். ஆகவே, அவர் நினைவைப் பசுமையாக இன்றும் போற்றி வரும் மக்கள் மதுவிலக்குத் திட்டத்தை வெற்றிகரமாக்கி, அரசாங்கத்துக்கு இதை அமல் நடத்துவதில் உள்ள கஷ்டத்தையும் நஷ்டத்தையும் குறைக்க வேண்டும்.

நல்ல ஏற்பாடு

தமிழகத்தில் மூன்றும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்றுத் தரவும், மாணவர்களின் ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கைகள் எடுக்கப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது.

தாய்மொழியான தமிழில் பேரார்வம் காட்டி வரும் இன்றைய அரசாங்கம் மறைமுகமாக ஆங்கிலத்தைப் புறக்கணிக்கிறது என்ற பழிக்கு இடமில்லாமல் மேற்கண்ட நடவடிக்கை எடுத்திருப்பது பலருக்கு மகிழ்ச்சியளிக்கும். ஆங்கிலத்தின் வாயிலாகத்தான் விஞ்ஞானம், மருத்துவம், பொறி இயல் ஆகிய எல்லாக் கலைகளையும் கற்க வேண்டியிருக்கிறது. அதைப் புறக்கணித்தால் நாட்டின் எதிர்காலம் சீர்கெடும். இந்த அபாயத்தை உணர்ந்து, தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையை வரவேற்கிறோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

மதுவிலக்கைக் கைவிடுவதென்று முடிவு செய்ததற்காக ஆந்திர சர்க்காரை ஸ்ரீ காமராஜ் அழுத்தந் திருத்தமாகக் கண்டித்திருக்கிறார். இச்செய்தி மனத்துக்குத் தெம்பூட்டுகிறது. கள், சாராயக் கடைகளை மீண்டும் திறக்கின்ற போக்கு பரவி வருவதன் மூல காரணம் என்ன என்பதை அவர் சொல்லியிருக்கிறார். "மக்களிடம் பெருகியுள்ள பணப் பேராசை சர்க்கார்களுக்கும் பரவி விட்டது" என்று அவர் கூறியிருக்கிறார்.

★

நாஸ்திக வாசகங்கள் பொறிக்கப்பட்ட திரு. பெரியாரின் சிலைகளைத் திறந்து வைப்பதில் தமிழ்நாட்டு மந்திரிகள் பங்கெடுத்துக் கொள்வது பற்றிப் பொதுவில் மிகுந்த வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற விழாக்களுக்கு மந்திரிகள் ஒத்துழைப்பு தருவது பற்றிச் சர்ச்சைக்குரியதாக ஏதும் சொல்ல நான் விரும்பவில்லை. நாஸ்திக வாசகம் பொறிப்பது பற்றி மட்டும் என் கருத்தைச் சொல்கிறேன்: முக்கியமான ஒரு மக்கள் தலைவரின் கருத்துக்களை உள்ளபடி தெளிவாகத் தெரிவிப்பது மொத்தத்தில் நல்லதேயாகும். பெரியாருடைய கருத்துக்களை எதிர்ப்பதற்குச் சிறந்த வழி யாதெனில், நம் மக்கள் பகவானிடத்தில் தமக்குள்ள நம்பிக்கையை வலுப்படுத்திக் கொண்டு தூய வாழ்வு வாழ்ந்து, தாங்கள் தெய்வ பக்தி கொண்டவர்கள், பாவத்துக்குப் பயந்தவர்கள் என்று நிரூபித்துக் காட்டுவதேயாகும். பெரியாருக்கு மக்கள் தமது வாழ்க்கை மூலமே விடை தரவேண்டும். இவ்வாறு செய்யப்படுமாயின் தற்போது நிறுவப்பட்டுள்ள சிலைகளும் பயன் தந்ததாக ஆகும்.

★

ஸ்ரீ ஜகஜீவன்ராமின் வருமான வரி விஷயமாக இந்தோரில் பேசியுள்ள மத்திய மந்திரி ஸ்ரீ பி. ஸி. சேதி, சம்பளம் வழங்கப்படும் போதே மந்திரிகளின் வருமான வரி கழிக்கப்படுவதாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் இவ்வாறு கழிக்கப்படும் தொகை மந்திரியின் சம்பளத்துக்கு மட்டுமே உரிய வரி. மந்திரிகளின் இதர வருமானங்களுக்குரிய வரியைச் சம்பளத்தில் கழிப்பதற்கில்லை. ஸ்ரீ சேதி கூறியிருப்பது பிரதமர் கூறிய 'ஞாபக மறதி' விளக்கத்தைப் போன்றதுதான்.

பத்து வருடங்களாக ஸ்ரீ ஜகஜீவன்ராம் வருமான விவரங்களைத் தாக்கல் செய்யாதது ஏன் என்பதே கேள்வி. அவருக்கு வேறு பல வருமானங்கள் இருப்பதாகத் தெரிகிறது. எனவே சம்பளத்தில் செய்கின்ற பிடிப்பு இதற்குப் பதில் சொன்னதாகாது. மற்ற எல்லாப் பிரஜைகள்போல் அவரும் தமது வருமானக் கணக்கு காட்டுவதற்குக் கட்டுப்பட்டவரே.

சம்பந்தப்பட்ட வருமான வரி அதிகாரி தான் இவ்விஷயத்தைத் தீர்க்க வேண்டியவர் என்று ஸ்ரீ சேதி கூறியிருப்பது விந்தை! யூனியன் மந்திரி பதவி வகிக்கும் ஒருவர் செய்யத் தகாத தவற்றைப் பற்றிய இப்பிரச்னை, சாதாரணக் குடிமகன் ஒருவன் கணக்குக் காட்டாதது போன்ற விஷயம் அல்ல. வருமான வரி அதிகாரியை மட்டும் இன்றி அரசாங்கத்தையே பாதிக்கும் பெரும் அவதூறு இது.

★

இந்திய சுதந்திரம் தென்னாப்பிரிக்காவில் பிறந்தது — இவ்வாறு டர்பனிலிருந்து வந்த ஒரு முக்கியஸ்தரின் கையெழுத்துப் புத்தகத்தில் சென்ற வாரம் எழுதிக் கொடுத்தேன்.

போயர்கள் பிரிட்டிஷ் சிம்மத்தை வென்று, தென் ஆப்பிரிக்க யூனியனைச் சுதந்திரக் குடியரசாக நிறுவினர். காந்திஜியும், அவர் காட்டிய வழியில் சென்ற இந்தியக் கூலிகளும் இந்தப் போயர்களை அஹிம்சா முறையில் வெற்றி கொண்டனர். இன்று தென் ஆப்பிரிக்காவில் இன்பமும் வளர்ச்சியும் பெருகும் தமிழர் குடியிருப்பாக நேட்டால் விளங்குகிறது. தென் ஆப்பிரிக்காவில் காந்திஜி நடத்திய சத்தியாக்கிரக சோதனை வெற்றி கண்டதன் மீதே அவர் இந்தியாவிலும் இதே ஆயுதத்தை வெற்றிகரமாகப் பிரயோகித்தார்.



தென் ஆப்பிரிக்காவில் இன்னமும் இன பேதக் கொள்கை உள்ளது. எனினும் ஹிந்து மதம், இஸ்லாம் இரண்டையும் சேர்ந்த தமிழர்கள் அங்கு மகிழ்ச்சியாகவே வாழ்கிறார்கள். நல்ல முறையில் கவனித்துக் கொள்ளப்படுகின்றனர். டர்பனிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்து தாயகத்தைக் கண்டு மகிழும் அனைவரும் அங்கு தாங்கள் சந்தோஷமாக இருப்பதாகவே ஒருமித்துச் சொல்கின்றனர்.

காந்தி நூற்றாண்டு விழா நினைவாகத் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் வெளியிட்டுள்ள ஒரு தபால் தலையை மேலே காணலாம்.


வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் உபயோகிப்பதால்.



உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்...இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினுலும், பெருமிதத்தினுலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினுல் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.





மற்றும் பாமாலிவ் டால்க் டீலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.G.B TAM.


மூன்றாம் பாகம் : கொலை வாள்
பொன்னியின் செல்வன்
அமரர்
கல்கி

முதல் அத்தியாயம்

கோடிக்கரையில்

கடலில் அடித்த சுழிக் காற்று சோழ நாட்டுக் கடற்கரையோரத்தில் புகுந்து தன் துரிதப் பிரயாணத்தைச் செய்து கொண்டு போயிற்று. "கல்லுளி மங்கன் போன வழி காடு மலையெல்லாம் தவிடுபொடி" என்பது போல அந்தச் சுழிக் காற்று போன வழியெங்கும் பற்பல பயங்கர நாசவேலைகளைக் காணும்படி இருந்தது. கோடிக்கரையிலிருந்து காவேரிப்பூம்பட்டினம் வரையில் சோழ நாட்டுக் கடற்கரையோரங்களில் வாயு பகவானின் லீலை செய்த வேலைகளை நன்கு பார்க்கும்படியிருந்தது. எத்தனையோ மரங்கள் வேரோடு பெயர்ந்தும் கிளைகள் முறிந்தும் கிடந்தன. வீடுகளின் கூரைகளைச் சுழிக் காற்று அப்படியே தூக்கி எடுத்துக் கொண்டு போய்த் தூர தூரங்களில் தூள் தூளாக்கி எறிந்து விட்டிருந்தது. குடிசைகள் குட்டிச்சுவர்களாகியிருந்தன. கோடிக்கரைப் பகுதியில் எங்கே பார்த்தாலும் வெள்ளக் காடாயிருந்தது. கடல் பொங்கி வந்து பூமிக்குள் புகுந்து விட்டதோ என்று தோன்றியது. ஆனால் பூமிக்கும் கடலுக்கும் மத்தியில் இருந்த வெண் மணல் பிரதேசம் அந்தக் கொள்கையைப் பொய்ப்படுத்தியது. அந்த வெண் மணல் பிரதேசத்தில் ஆங்காங்கு புதை சேறு இருந்த இடங்களில் மட்டும் இப்போது அதிகமாகத் தண்ணீர் தேங்கியிருந்தது. அப்படிப்பட்ட இடங்களில் இப்போது மனிதனோ மிருகமோ இறங்கி விட்டால், உயிரோடு சமாதிதான்! யானைகளைக்கூட அப்புதை சேற்றுக் குழிகள் இப்போது விழுங்கி ஏப்பம் விட்டு விடும்!

சுழிக் காற்று அடித்த இரண்டு நாளைக்குப் பிறகு கோடிக்கரைக்குப் பெரிய பழுவேட்டரையரும் அவருடைய பரிவாரங்களும் வந்து சேர்ந்தார்கள். பல்லக்கும் பின்தொடர்ந்து வந்தது. ஆனால் இம்முறை அந்தப் பல்லக்கில் அமர்ந்து இளைய ராணி நந்தினி தேவியே பிரயாணம் செய்தாள். மதுராந்தகத் தேவரை அந்தரங்கமாக அழைத்துப் போக வேண்டிய அவசியம் இப்போது இல்லை. மேலும் சில சமயம் இளைய ராணியையும் உடன் அழைத்துப் போனால்தானே மறுபடியும் அவசியம் நேரும் போது மதுராந்தகத் தேவரை அழைத்துப் போக அந்தப் பல்லக்கு வாகனம் உபயோகமாயிருக்கும்? — இவ்வாறு நந்தினி கூறியதைப் பழுவேட்டரையர் உற்சாகமாக ஒப்புக் கொண்டார். காமாந்தகாரத்தில் மூழ்கியிருந்த அக்கிழவருக்குத் தம்முடன் அந்தப் புவன சுந்தரியை அழைத்துப் போவதில் ஆர்வம் இருப்பது இயல்புதானே?

சுழிக்காற்றுக்கு முன்னால் அவர்கள் நாகைப் பட்டினத்துக்கு வந்திருந்தார்கள். அங்கே தனாதிகாரி தமது உத்தியோகக் கடமைகளை முதலில் நிறைவேற்றினார்.

நாகைப்பட்டினம் அப்போது தமிழகத்தின் முக்கிய துறைமுகப் பட்டினங்களில் ஒன்றாயிருந்தது. வெளிநாடுகளிலிருந்து எத்தனை எத்தனையோ பொருள்கள் பெரிய பெரிய மரக்கலங்களில் வந்து அத்துறைமுகத்தில் இறங்கிக் கொண்டிருந்தன. அப்பொருள்களை ஆயிரக்கணக்கான சிறிய படகுகள் ஏற்றிக்கொண்டு வந்து கரையில் சேர்த்தன. தரையிலிருந்து மாற்றுப் பண்டங்களை ஏற்றிக் கொண்டு போய் மரக்கலங்களில் சேர்த்தன. இவற்றுக்கெல்லாம் 'சுங்க இறை விதித்து வசூலிக்கும் அதிகாரிகள் பலர் இருந்தனர். அவர்கள் சரிவர வேலை செய்கிறார்களா என்பதை மேற்பார்வை பார்ப்பது சோழ நாட்டுத் தனாதிகாரி பெரிய பழுவேட்டரையரின் உரிமையும் கடமையும் அல்லவா?

அந்த வேலை பூர்த்தியான பிறகு பெரிய பழுவேட்டரையர் நாகைப்பட்டினத்தில் புகழ் பெற்றிருந்த சூடாமணி' புத்தவிஹாரத்துக்கு விஜயம் செய்தார். பிக்ஷுக்கள் அவரைத் தக்கபடி வரவேற்று உபசரித்தனர். புத்த விஹாரத்துக்குத் தேவை ஏதேனும் உண்டா, பிக்ஷுக்களுக்குக் குறைகள் ஏதேனும் உண்டா என்று தனாதிகாரி விசாரித்தார். ஒன்றும் இல்லையென்று பிக்ஷுக்கள் கூறி, சுந்தரசோழ மன்னருக்குத் தங்கள் நன்றியையும் தெரிவித்தார்கள்.

சில நாளைக்குமுன் இந்த விஹாரத்தைச் சேர்ந்த பிக்ஷுக்கள் இருவர் தஞ்சைக்குச் சக்கரவர்த்தியைப் பார்க்க வந்திருந்தார்கள். புத்த சங்கத்தின் சார்பாகச் சுந்தர சோழர் விரைவில் நோய் நீங்கிக் குணம் அடைய வேண்டும் என்று வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். அப்போது அவர்கள், இளவரசர் அருள்மொழிவர்மர் இலங்கையில் புத்த தர்மத்துக்குச் செய்து வரும் தொண்டுகளைக் குறித்துத் தங்கள்

பாராட்டுதலைத் தெரிவித்தார்கள். இடிந்து போன புத்த விஹாரங்களைப் புதுப்பித்துக் கொடுக்கும்படியாக இளவரசர் கட்டளையிட்டு நிறைவேற்றியும் வருவது இலங்கையில் உள்ள புத்த பிக்ஷுக்களின் மகா சங்கத்துக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளித்து வருவதாகவும் அவர்கள் கூறினார்கள். ''சக்கரவர்த்திப் பெருமானே! இன்னும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியும் நாங்கள் கேள்விப்படுகிறோம். இலங்கையின் பழைமையான சிம்மாசனத்தைத் தங்களுடைய இளைய திருக் குமாரருக்கே அளித்து இலங்கை அரசராக முடிசூட்டி விடலாம் என்று பிக்ஷுக்களில் ஒரு பெரும் பகுதியார் கருதுகிறார்களாம். அவ்விதம் தங்களுக்குள் பேசிக் கொண்டிருக்கிறார்களாம்! இதைக் காட்டிலும் நம் இளவரசரின் பெருமைக்கு வேறு என்ன சான்று வேண்டும்!'' என்றார்கள்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த பெரிய பழுவேட்டரையரின் உள்ளத்தில் ஓர் அபூர்வமான யோசனை உதயமாயிற்று. பிக்ஷுக்கள் சென்ற பிறகு அதைச் சுந்தர சோழச் சக்கரவர்த்தியிடமும் தெரிவித்தார்.

''மூன்று உலகும் ஆளும் இறைவா! தங்கள் அதிகாரம் எட்டுத் திசையிலும் பரவி நிலைபெற்றிருக்கிறது. இந்தப் பரந்த பூமண்டலத்தில் தங்கள் ஆணைக்குக் கீழ்ப்படியாதவர்கள் யாரும் இல்லை. ஆனால் தங்கள் திருப் புதல்வர்கள் இருவர் மட்டும் இதற்கு விலக்காயிருக்கின்றனர். அவர்களுக்குத் துர்ப்புத்தி புகட்டும் சிலர் சோழ மகாராஜ்யத்தில் பெரிய பதவிகள் வகிக்கிறார்கள். ஆதித்த கரிகாலர் தங்கள் விருப்பத்தின்படி இங்கு வருவதற்கு மறுத்துத் தங்களைக் காஞ்சிக்கு வரும்படி ஓலை அனுப்புகிறார். அவருக்கு இவ்வாறு துர்ப்புத்தி புகட்டுகிறவர் வேறு யாரும் இல்லை; தங்கள் மாமனாரான திருக்கோவலூர் மலையமான்தான். அவ்வாறே ஈழநாட்டிலிருந்து தங்கள் இளம் புதல்வரைத் தருவிக்கும்படியாகத் தாங்கள் பன்முறை சொல்லி விட்டீர்கள். நானும் ஆள் அனுப்பி அனுப்பி அலுத்துவிட்டேன். நமது ஆள்கள் இளவரசரைச் சந்தியாதபடியும் நம் ஓலைகள் இளவரசரைச் சேராதபடியும் அந்தக் கொடும்பாளூர் பெரிய வேளான் செய்து கொண்டு வருகிறான். இல்லாவிடில், தங்கள் அருமைப் புதல்வர் தங்கள் விருப்பம் தெரிந்த பிறகும் இத்தனை காலம் வராமல் தாமதிப்பாரா? இந்நிலைமையில் எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தாங்கள் கட்டளையிட்டால் அதைத் தெரிவிக்கிறேன்'' என்றார் பழுவேட்டரையர்.

சக்கரவர்த்தி சம்மதம் கொடுத்ததின் பேரில் தனாதிகாரி தெரிவித்தார்: ''இலங்கைச் சிம்மாதனத்தைக் கவர்ந்து முடிசூட்டிக் கொள்ளச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளை பிறப்பித்து அனுப்புவோம். அத்தகைய கட்டளையைப் பூதிவிக்கிரம கேசரி தடை செய்ய முடியாது. அன்றியும் இளவரசரிடம் நேரில் எப்படியேனும் கட்டளையைச் சேர்ப்பிக்கச் செய்து விட்டால், இளவரசர் கட்டாயம் வந்தே தீருவார்!''

இதைக் கேட்ட சுந்தர சோழர் புன்னகை புரிந்தார். விசித்திரமான யோசனைதான்; ஆயினும் ஏன் கையாண்டு பார்க்கக் கூடாது? பொன்னியின் செல்வனைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் சக்கரவர்த்தியின் மனத்தில் பொங்கிக் கொண்டிருந்தது. தம்முடைய அந்திய காலம் நெருங்கிக் கொண்டிருப்பதாக அவர் உணர்ந்தார். ஆகையால் தம் அந்தரங்க அன்புக்குரிய இளங்கோவிடம் இராஜ்யத்தைப் பற்றித் தம் மனோரதத்தை வெளியிட விரும்பினார். மதுராந்தகனுக்கே தஞ்சாவூர் இராஜ்யத்தை அளிக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தை அறிந்தால் அருள்மொழிவர்மன் மறு வார்த்தை பேசாமல் அதை ஒப்புக் கொள்வான். பின்னர் அவன் மூலமாக ஆதித்த கரிகாலனுடைய மனத்தை மாற்றுவதும் எளிதாயிருக்கும்.

இவ்வாறு சிந்தித்துத் தனாதிகாரியின் யோசனையைச் சக்கரவர்த்தி ஆமோதித்தார். அதன் பேரிலேதான் அருள்மொழிவர்மரைச் சிறைப்படுத்தி வரும்படி கட்டளை அனுப்பப்பட்டது. இளவரசருக்கு எவ்விதத் தீங்கும் ஏற்படக் கூடாது என்ற கண்டிப்பான கட்டளையும் மரக்கலத் தலைவனுக்குப் பிறப்பிக்கப்பட்டது.

மேற்கூறிய கட்டளையுடன் இரு மரக்கலங்கள் ஈழ நாட்டுக்குச் சென்ற பிறகு, பெரிய பழுவேட்டரையர் சிறிது மனக் கவலை கொண்டார். இளவரசருக்கு ஏதேனும் நேர்ந்து விட்டால் தமக்குப் பெரும் பழி நேரும் என்பதை உணர்ந்தார். ஆகையால் தாமே நாகைப் பட்டினம் துறைமுகத்துக்கு நேரே சென்றிருந்து இளவரசரைத் தக்கபடி வரவேற்றுத் தமது சொந்தப்

பொறுப்பில் அவரைத் தஞ்சாவூருக்கு அழைத்துக் கொண்டு வர விரும்பினார்.

இந்த யோசனைக்கு இன்னும் சில உப காரணங்களும் இருந்தன. இளவரசர் தஞ்சைக்கு வந்து சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு முன்னால் செம்பியன்மாதேவியோ குந்தவையோ அவரைப் பார்க்கும்படி விடக் கூடாது. அந்தப் பெண்கள் இருவரும் இளவரசர் மீது மிக்க செல்வாக்கு உள்ளவர்கள்; பழுவேட்டரையரை வெறுப்பவர்கள். ஆகையால் இளவரசரிடம் ஏதாவது சொல்லி அவர் மனத்தைக் கெடுத்து விடுவார்கள். தக்க சமயம் வருவதற்குள், அதாவது சுந்தர சோழர் மரணம் அடைவதற்குள், ஏடாகூடமாக ஏதேனும் நடந்து காரியங்கள் கெட்டுப் போகலாம்.

அன்றியும், பொக்கிஷ நிலவறையின் சுரங்க வழிக் காவலன் பின்னாலிருந்து தாக்கி வீழ்த்தப்பட்டதிலிருந்து தனாதிகாரியின் மனத்தில் ஏதேதோ விபரீத சந்தேகங்கள் உதித்திருந்தன. பொக்கிஷ சாலையில் யாராவது ஒளிந்திருக்கக் கூடுமா? அப்படியானால், அது யாராயிருக்கும்? தஞ்சைக் கோட்டைக் காவலர்களிடம் அகப்படாமல் தப்பிச் சென்ற வாணர்குல வீரனாயிருக்குமா? அங்ஙனமானால் அவன் இன்னும் பல இரகசியங்களை அறிந்திருக்கக் கூடும் அல்லவா?

சின்னப் பழுவேட்டரையர் கூறுகிறபடி நந்தினியைப் பார்க்க அடிக்கடி வரும் மந்திரவாதிக்கு இதில் ஏதேனும் சம்பந்தம் இருக்குமா? அதையும் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

இளையபிராட்டி குந்தவை தேவிதான் வந்தியத்தேவனை ஓலையுடன் இளவரசர் அருள்மொழிவர்மரிடம் அனுப்பியிருக்கிறாள் என்னும் செய்தியும் தனாதிகாரியின் மனத்தைக் கலங்கச் செய்திருந்தது. வந்தியத்தேவன் மூலம் என்ன செய்தி அனுப்பியிருப்பாள்? தாமும் சம்புவரையர் முதலியவர்களும் சோழ சிம்மாதனத்தைப் பற்றி முடிவு செய்துள்ள யோசனையைப் பற்றி அந்தப் பெண் பாம்புக்குச் செய்தி எட்டி இருக்குமோ? அதைப் பற்றி ஏதேனும் அவள் எழுதியனுப்பியிருப்பாளோ?

எப்படியிருந்த போதிலும் இளவரசர் சோழ நாட்டின் கரையில் இறங்கியதும் தாம் அவரை முதலில் சந்திப்பதுதான் நல்லது. வந்தியத்தேவனையும் இளவரசருடன் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கட்டளையிட்டிருப்பதால் அவனையும் முதலில் தாம் பார்த்தாக வேண்டும். அவனுக்கு என்னென்ன தெரியும், எவ்வளவு தூரம் தெரியும் என்பதையும் கண்டுபிடித்தாக வேண்டும்.

இப்படியெல்லாம் யோசித்துப் பெரிய பழுவேட்டரையர் நாகைப்பட்டினத்துக்குப் போய்க் காத்திருக்கத் தீர்மானித்தார். அவருக்கு இருந்த காரணங்களைக் காட்டிலும் அதிகமாகவே நந்தினிதேவிக்கும் இருந்தன. வந்தியத் தேவனை மறுபடியும் பார்க்கவும் குந்தவை அவனிடம் என்ன ஓலை கொடுத்து அனுப்பினாள் என்பதை அறிந்து கொள்ளவும் நந்தினி மிக்க ஆவலாயிருந்தாள். மந்திரவாதி ரவிதாஸன் போன காரியம் எவ்வளவு தூரம் வெற்றியடைந்தது என்று அறியவும் ஆர்வம் கொண்டிருந்தாள். ஆகையால் நாகைப்பட்டினத்துக்குத் தானும்



வருவதாகக் கூறினுள். கரும்பு தின்னக் கூலி வேண்டுமா ? கிழவர் உடனே அதற்கு இசைந்தார். கடலில் கரையோரமாக உல்லாசப் படகில் ஏறி நந்தினியுடன் ஆனந்தப் பிரயாணம் செய்வது பற்றி அவர் மனோராஜ்யம் செய்யலானுர். அவர் உள்ளத்தையும் உடலையும் எரித்துக் கொண்டிருந்த தாபம் அதன் மூலம் தீருவதற்கு வழி ஏற்படலாம் என்றும் ஆசை கொண்டார்.

பழுவேட்டரையரும் நந்தினியும் நாகைப் பட்டினத்திலிருந்த போதுதான் சுழற் காற்று அடித்தது. காற்றின் உக்கிர லீலைகளை நந்தினி வெகுவாக அநுபவித்தாள். கடற்கரையோரத்தில் தென்னை மர உயரத்துக்கு அலைகள் எழும்பி விழுவதைப் பார்த்துக் களித்தாள். ஆனுல் கடலில் உல்லாசப் படகில் ஆனந்த யாத்திரை செய்யலாம் என்னும் பழுவேட்டரையரின் மனோராஜ்யம் நிறைவேறவில்லை.

சுழிக் காற்று அல்லோலகல்லோலப் படுத்திவிட்டுப் போன பிறகு கடலிலே கப்பல்களுக்கும் படகுகளுக்கும் சேதம் உண்டா என்பதைப் பற்றிப் பழுவேட்டரையர் விசாரித்து அறிந்தார். கரையோரத்தில் அனைவரும் சுழிக் காற்று வரப் போவதையறிந்து ஜாக்கிரதையாயிருந்தபடியால் அதிக சேதம் ஏற்படவில்லை யென்று தெரிந்தது. ஆனுல் நடுக்கடலில், ஈழத்துக்கும் கோடிக்கரைக்கும் நடுவில், இரு கப்பல்கள் தத்தளித்ததாகவும், அவற்றில் ஒன்று தீப்பற்றி எரிந்து முழுகியதாகவும் கட்டு மரங்களில் மீன் பிடிக்கச் சென்றிருந்த வலையர்கள் சிலர் கூறினுர்கள். இது பழுவேட்டரையருக்கு மிக்க கவலையை உண்டாக்கிற்று. அந்த இரண்டு மரக் கலங்களும் இளவரசரைச் சிறைப்



பிடித்து வந்த கப்பல்களா யிருக்கலாம் அல்லவா? அப்படியானால், இளவரசரின் கதி யாதாகி யிருக்குமோ? இளவரசருக்கு ஏதேனும் நேர்ந்திருந்தால் தமக்குப் பெரும் பழி ஏற்படுமே? சோழ நாட்டு மக்களின் எல்லையற்ற அன்பைக் கவர்ந்தவரா யிற்றே அருள்மொழிவர்மர்? மக்களுக்கு அவரைப் பற்றி என்ன சொல்லுவது? சக்கரவர்த்திக்குத் தான் என்ன சமாதானத்தைச் சொல்வது? — நிச்சயமான செய்தி தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் பேராவல் அவருக்கு உண்டா யிற்று. கோடிக்கரைக்குப் போனால் ஒருவேளை விவரம் தெரியலாம். மூழ்கிய கப்பலை நன்றாய்ப் பார்த்தவர்கள் அங்கே இருக்கக் கூடும். மூழ்கிய கப்பலிலிருந்து தப்பியவர்கள் யாரேனும் கரை சேர்ந்திருக்கவும் கூடும். ஆம்; உடனே கோடிக்கரைக்குப் போக வேண்டியதுதான்!

இந்த எண்ணத்தை நந்தினியிடம் வெளியிட்டதும் அவள் ஆர்வத்துடன் அதை ஒப்புக் கொண்டாள். ''கோடிக்கரையை நான் இது வரையில் பார்த்த தில்லை. அந்தப் பிரதேசம் மிக அழகா யிருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இச்சந்தர்ப்பத்தில் அதையும் பார்த்து விடலாம்'' என்றாள் நந்தினி.

நாகைப்பட்டினத்திலிருந்து கோடிக்கரைக்கு இரு வழிகள் உண்டு. கடற்கரையோரமாகச் சென்ற நீண்ட கால்வாய் வழியாகப் படகில் ஏறிப் போகலாம். அல்லது சாலை வழியாகவும் போகலாம். பழுவேட்டரையரின் பரிவாரங்கள் அதிகமா யிருந்தபடியால் சாலை வழியாகவே போனார்கள். மேலும் நந்தினி கால்வாய் வழியை விரும்பவும் இல்லை. கால்வாயில் படகில் போனால் பழுவேட்டரையர் தம் காதல் புராணத்தைத் தொடங்கி விடுவார் என்று நந்தினி அஞ்சியது ஒரு காரணம். அது மட்டும் அன்று. சாலை வழியாகச் சென்றால் கடற்கரையோரத்தில் வந்து ஒதுங்கும் கட்டுமரக்காரர்களையும் படகோட்டிகளையும் விசாரித்துக் கொண்டு போகலாம் அல்லவா?

வழியில் அப்படி விசாரித்ததில் புதிய செய்தி ஒன்றும் தெரியவில்லை. நடுக்கடலில் சுழிக் காற்று பலமாக அடித்த சமயம் கப்பல் ஒன்று தீப்பற்றி எரிந்ததைப் பார்த்ததாக மட்டும் இன்னும் சிலரும் கூறினார்கள்.

கோடிக்கரையை அடைந்ததும் கலங்கரை விளக்கத்தின் காவலர் தியாக விடங்கர் தமது எளிய வீட்டைப் பழுவேட்டரையர் தம்பதிகளுக்காக ஒழித்துக் கொடுப்பதாகச் சொன்னார்; அதை ஏற்கும்படி மன்றாடிக் கேட்டுக் கொண்டார். கோடிக்கரையில் தங்குவதற்கு வேறு மாட மாளிகை இடையாது. எனினும் நந்தினி அதை மறுத்துவிட்டாள். கலங்கரை விளக்குக்கு அருகில் கூடாரம் போட்டுக் கொண்டு தங்க விரும்புவதாகக் கூறினாள்.

அவ்வாறே கூடாரங்கள் அடிக்கப்பட்டன. சற்றுத் தூரத்தில் ஆங்காங்கு பழுவூர் பரிவாரங்களுக்கும் கூடாரங்கள் போடப்பட்டன.

கூடாரங்கள் அடித்து முடிந்தவுடனே கடலில் ஒரு பெரிய மரக்கலம் காணப்பட்டது. அது கரையோரமாக எவ்வளவு தூரம் வரலாமோ, அவ்வளவு தூரத்தில் வந்து நின்றது.


அதைக் கண்டதும் பழுவேட்டரையரின் பரபரப்பு மிகுந்தது. கப்பலின் பாய் மரங்கள் சின்னாபின்னமாகி யிருந்ததிலிருந்து அது சுழிக் காற்றில் அகப்பட்டிருக்க வேண்டும் என்று தெளிவா யிற்று. அதில் இருப்பவர்கள் யார்? ஒரு வேளை இளவரசரா யிருக்கலாமோ? புலிக்கொடி காணப்படாததில் வியப்பில்லை. சுழிக் காற்றில் அது பிய்த்து எறியப்பட்டிருக்கலாம் அல்லவா?

கப்பலண்டை போய்த் தகவல் தெரிந்து கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர் அங்கிருந்த ஒரே ஒரு படகை அனுப்பி வைத்தார். கப்பலில் இருந்தவர்கள் படகுக்காகக் காத்திருந்ததாகத் தோன்றியது. உடனே இருவர் கப்பலிலிருந்து படகில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் பார்த்திபேந்திர பல்லவன்.

வந்தியத்தேவனைக் காப்பாற்றுவதற்காக மரக்கலத்திலிருந்து படகில் இறங்கிச் சென்ற இளவரசர் அருள்மொழிவர்மர் திரும்பக் கப்பலுக்கு வரவேயில்லை அல்லவா?

இதனால் பார்த்திபேந்திரன் எல்லையற்ற கவலைக்கு உள்ளாகித் தத்தளித்தான். காற்று அடங்கிப் பொழுது விடிந்த பிறகு அங்குமிங்கும் கப்பலைச் செலுத்தித் தேடினான். படகில் இளவரசருடன் இறங்கியவர்களில் ஒருவன் மட்டும் குற்றுயிராக அகப்பட்டான். அவன் வந்தியத்தேவனை இளவரசர் மிக்க தீரத்துடன் காப்பாற்றிய பிறகு படகுக்கு நேர்ந்த கதியைச் சொன்னான். இதனால் பார்த்திபேந்திரனுடைய துயரம் பன்மடங்கு ஆயிற்று. ஒருவேளை கோடிக்கரை சென்று உயிருடன் ஒதுங்கி யிருக்கக் கூடாதா என்ற ஆசை ஒரு பக்கத்தில் கிடந்து அடித்துக் கொண்டது.

ஆகவே கோடிக்கரை சென்று விசாரிப்பதென்று தீர்மானித்தான். அதற்


Godrej
Reg
NAV-TAL
8 Levers

காகவே கப்பலை அங்கே கொண்டு வந்து நிறுத்தச் செய்தான். படகில் இறங்கிய பிறகு கரையை நோக்கிப் போக ஆரம்பித்ததும் பெரிய பழுவேட்டரையர் தம் இளையராணி சகிதமாக அங்கு வந்திருப்பதை அறிந்து கொண்டான். இது அவனுக்கு மிக்க எரிச்சலை மூட்டியது.


பழுவூர் இளையராணி நந்தினியைப் பற்றி ஆதித்த கரிகாலர் கூறியவையும் நினைவுக்கு வந்தன. அவ்விதம் அந்த மகாவீரரின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவரைப் பித்துப் பிடிக்க அடித்த மோகனாங்கி எப்படியிருப்பாள் என்று பார்க்கும் சபலமும் அவன் உள்ளத்தின் அடிவாரத்தில் ஒரு மூலையில் எழுந்தது. அந்த விருப்பம் விரைவில் வளர்ந்து கொழுந்து விடத் தொடங்கியது. ஒருவேளை அவளைப் பார்க்க முடியாமற் போய் விடுமோ என்ற கவலையும் உண்டாகி விட்டது.

ஆனால் அந்தக் கவலை நீடித்திருக்கவில்லை. படகிலிருந்து கரையில் இறங்கியதும் நேரே பழுவேட்டரையரின் கூடாரத்துக்குப் பார்த்திபேந்திரனை அழைத்துப் போனார்கள். கூடாரத்தின் வாசலில் பழுவேட்டரையர் கம்பீரமான தோற்றத்துடன் நின்று கொண்டிருந்தார். ஆஜானுபாகுவான அந்த வீராதி வீரரைக் 'கிழவர்' என்று சொல்லுவது எவ்வளவு பெரிய தவறு என்று பார்த்திபேந்திரன் எண்ணினான். அவன் பார்த்திருக்கும் எத்தனையோ இளம் பிராய வாலிபர்களைக் காட்டிலும் அவர் தேகக் கட்டும் மனோதிடமும் வாய்ந்த புருஷ சிங்கமாகக் காட்சி அளித்தார்.


இவ்விதம் அவன் எண்ணிக் கொண்டிருக்கும் போதே கூடாரத்துக்கு உள்ளேயிருந்து மங்கை ஒருத்தி வெளி வந்தாள். மேகங்களுக்குப் பின்னாலிருந்து மின்னல் தோன்றுவது போல் அந்தப் பொன் வண்ணப் பூவை கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் திகழ்ந்தாள். நெடிது வளர்ந்து உரம் பெற்ற தேக்கு மரத்தின்பேரில் படர்ந்திருக்கும் அழகிய பூங்கொடியைப் போல் அவள் பழுவேட்டரையருக்கு முன்னால் வந்து நின்றாள். அந்தப் புவன மோகினியைக் கண்டு திகைத்து நின்ற பார்த்திபேந்திரன் பேரில் தனது வேல் விழிகளைச் செலுத்திய வண்ணமாக அவள், "நாதா! இந்த வீர புருஷர் யார்? இவரை நான் இதுவரையில் பார்த்ததில்லையே?" என்று சொன்னாள். பொற் கிண்ணத்திலிருந்து அருந்திய மதுபானத்தைப் போல் அவளுடைய இனி மொழிகள் பார்த்திபேந்திரனைப் போதை கொள்ளச் செய்தன.

(தொடரும்)






நெருங்கி உறவாடும்,



நெஞ்சைக் கவரும் நறுமணமுள்ள
லக்மே டால்கம்



உங்கள் இதயம் கவரும் நறுமணத்தை மணிக் கணக்கில் வீசிக்கொண்டிருக்கும் டால்கம்—நெஞ்சை விட்டகலாத லக்மே! அந்த இணையற்ற இன்பத்தை அனுபவிக்கத் தாமதமேன்? இன்றே உங்கள் மேனியின் மீது இன்மணம் கமழும் லக்மே டால்கம் தூவுங்கள். அது பட்டுப் போன்று மென்மையானது; நேர்த்தியானது; இணைபிரியாதது. ஒரு நாளை 'லக்மே' சுகமாகத் துவக்க, இதைவிட இன்பம் தருவது வேறென்ன இருக்கப் போகிறது?

இது ஐவகை மணம் வீசி, உங்களை அன்புடன் அணைய வருகிறது. லேவெண்டர், வெட்டிவேர், லிவான், சந்தனம் ஆகிய நான்கும், மீடியம் மற்றும் எகானமி சைஸ்களிலே வருகின்றன. ஐந்தாவதான ஃப்ளோரல் மிஸ்ட் பெரிய ஃபேமிலி சைஸில் வருகிறது. எல்லாமே நீங்கள் எளிதில் வாங்கக்கூடிய விலையில்; எல்லாமே இன்ப மணம்; எல்லாமே இன்ப மயம்!

ரகுபதி ராகவ

மகாத்மா காந்தி

தமிழாக்கம்:
ராஜாஜி

3

குழந்தைப் பருவம் முதற்கொண்டு உண்மையை வழிபட்டு வருகிறேன் என்று என்னைப் பற்றி நான் சொல்லிக் கொள்ளலாம். உண்மையைக் கடைப் பிடிப்பது எனக்கு ஸ்வபாவமாகவும் எளிதாகவுமே இருந்து வந்தது.

தேடித் தேடி ஒன்று கண்டேன், அந்த உண்மை என் கண்களைத் திறந்தது. சத்தியமே தெய்வம் என்பதைக் கண்டேன். சாதாரணமாகத் தெய்வமே சத்தியம் என்பார்கள். அதை நான் இவ்வாறு மாற்றிக் கொண்டேன். மெய்ம்மையே கடவுள் என்பதை அறிந்தேன். அதைக் கண்டபின் நான் கடவுளைப் பிரத்யக்ஷமாகவே கண்டேன் என்றும் சொல்லலாம். என் உடலின் ஒவ்வொரு நரம்பிலும் அவன் ஊடுருவிப் பரந்து நிற்பதை என் உணர்ச்சியில் காண்கிறேன். உணர்ச்சி முழுவதிலும் ஒரு பொருளை உணர்ந்து விட்டால் அது கண்களின் விழியால் காண்பதைவிடக் குறைவில்லை. மனமானது ஐயமறக் கண்டுவிட்டால் அதற்கும் பிரத்யக்ஷக் காட்சிக்கும் பேதமில்லை.

(ஹரிஜன் 9-8-42)

* * *

அஹிம்ஸையே என் தெய்வம், சத்தியமே என் தெய்வம். அஹிம்ஸையை நாடிச் செல்லும் போது, சத்தியம் எனக்குச் சொல்லுகிறது, ''என் வழியாகத்தான் அதைக் காண்பாய்'' என்று. சத்தியத்தை நாடித் தேடும் போது அஹிம்ஸை எனக்குச் சொல்லுகிறது, ''என் வழியாகச் செல். நீ நாடும் சத்தியத்தைக் காண்பாய்'' என்று. இரண்டும் இவ்வாறு ஒன்றுக் கொன்று பிணைந்து நிற்கின்றன. ஒன்றின்றி மற்றொன்றில்லை.

(யங் இந்தியா 4-6-25)

எங்கும் பரவி நிற்கும் மெய்ப் பொருளைக் காண வேண்டுமானால் சிருஷ்டியில் அடங்கிய ஈனப் பிராணிகளையும் தன்னுடையதைப் போல் பேணும் அன்பைப் பெற வேண்டும். இந்த அன்பைத் தன் உள்ளத்தில் காணும் ஒருவன், தெய்வத்தை நேருக்கு நேர் கண்டவன். அந்த நிலையை அடைய ஆசைப்படுகிற ஒருவன் எந்தத் தொழிலையும் வியாபாரத்தையும் 'இது எனக்குத் தகாது' என்று ஒதுக்கிவிட முடியாது. இதனாலேதான் உண்மையை வழிபடுகிற நான் அரசியலில் சம்பந்தப்பட வேண்டியதாயிற்று. 'கடவுள் வழிபாட்டுக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை, அது வேறு இது வேறு' என்று சிலர் சொல்லுவார்களே, அதை நான் ஒப்புக் கொள்வதில்லை. இதை நான் மிக அடக்கத்துடன் சொல்லுகிறேன். ஆனால் ஐயமறச் சொல்லுவேன். கடவுள் பக்தி விசாரத்துக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லுவது முற்றிலும் தவறு. கடவுள் விஷயம் சரியாக அறியாதவர்கள்தான் அப்படி வேறுபடுத்துவார்கள்.

(சுய சரிதம்)

* * *

மக்களுக்குப் பணி செய்வதில் கடவுளைக் காண நான் முயற்சி செய்து வருகிறேன். ஈசன் மேலே எங்கேயோ வானுலகத்தில் இருக்கிறான் என்றாவது அல்லது கீழே எங்கேயோ பாதாளத்தில் இருக்கிறான் என்று சொல்லுவதாவது மடமை. நாம் அறியும் ஒவ்வோர் உயிரிலும் அவன் இருக்கிறான். (சுய சரிதம்)



இயற்கை தந்த மனிதனுக்குச் செயற்கை உறுப்புக்கள்


டாக்டர் கிறிஸ்டியன் பார்னார்ட் முதல் இருதய மாற்று ஆபரேஷன் செய்த பிறகு மேலும் பலர் மாற்று இருதயம் பெற்று ஜீவிய வந்தர்களாக இருக்கிறார்கள். ஆனால் இதை விட அதிசயம் சமீப காலத்தில் செயற்கை இருதயம் பொருத்தும் சஸ்திர சிகிச்சையும் வெற்றிகரமாக நிகழ்த்தப்பட்டதுதான்.

அந்த நோயாளி ஆபரேஷனுக்குப் பின் சிறிது காலமே உயிர் வாழ்ந்தான் என்றாலும் இன்னும் ஐந்தாறு ஆண்டுகளில் செயற்கை இருதயம் சர்வ சாதாரணமாகி விடும் என்பதற்கு இந்த வெற்றி ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது.


பழுதான இருதயம் உள்ளவர்களுக்கு உடலுக்குள்ளேயே ஒரு பாட்டரியை வைத்து விடுவது இன்று சகஜமான ஓர் ஆபரேஷன். இந்தப் பாட்டரியிலிருந்து கிளம்பும் மின் அலைகள் இருதயத்தைச் சரியான அளவில் தூண்டித் துடிக்க வைக்கிறது. ஆனால் பாட்டரி பலவீனமானதும் அதை எடுத்துவிட்டு வேறு பாட்டரி பொருத்த வேண்டும். இப்படி அடிக்கடி பாட்டரியை மாற்றுவது கஷ்டமான சஸ்திர சிகிச்சை அல்ல என்றாலும் தொந்தரவு மிகுதிதான். ஆனால் சமீபத்தில் பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் அணுசக்திக் கமிஷன்கள், அணு சக்தியால் இயங்கும் இதயத் துடிப்புக் கருவி கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறியிருக்கின்றன. ஒரு சிகரெட் பாக்கெட்டை விடச் சிறியதான இந்தக் கருவியை ஒரு முறை உடலுக்குள் பொருத்தி விட்டால் பத்து வருடங்களுக்கு அதைப் பற்றிக் கவலை இல்லையாம்.

செயற்கை இருதயம் தவிர மனிதன் வேறு என்னென்ன செயற்கை உறுப்புக்களைப் பெற்றுத் தடங்கலின்றி வாழ்நாளைக் கழிக்கிறான் என்று பார்ப்போம்.

விபத்துக்களால் கை, கால் எலும்புகள் முறிந்து விட்டால் செயற்கைச் சாதனங்கள் கை கொடுத்து உதவுகின்றன. பழுதாகி விட்ட இரத்தக் குழாய்களுக்குப் பதில் செயற்கைக் குழாய்கள் பொருத்தப்படுகின்றன. உடலில் உள்ள எலும்பு மூட்டுகளில் தேய்ந்து பலவீனப்பட்ட இடங்களுக்கு டான்டலம் கிண்ணங்கள் (Tantalum Cups) பொருத்தப் படுகின்றன. அநேகமாக வயோதிகர்களுக்கு எலும்பு மூட்டுகளில் ஏற்படும் நலிவுக்கு இந்த டான்டலம் கிண்ணங்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் செயற்கைக் குழாய்களையோ, தகடுகளையோ பயன்படுத்திச் சிகிச்சை செய்கையில் இவை நிரந்தரமாக மனித உடலில் இருக்கலாம். மனித உட



❀ ஒரு விபத்தில் இரு கைகளையும் இழந்த இளைஞனுக்குச் செயற்கைக் கைகள் பொருத்தப் பட்டுள்ளன. மேற்கு ஜெர்மானிய விஞ்ஞானிகள் தயாரித்த இந்த எலக்டிரானிக் பிளாஸ்டிக் கரங்கள் நினைத்தபடியெல்லாம் இயங்கும்.





❀ செயற்கை இருதயம்.

லுக்குள் பொருத்தப்படும் இது போன்ற செயற்கை உறுப்புக்கள் கெட்டுப் போவ தில்லை. இருதயம், சிறுநீர்க் காய்கள் **(Kidneys)** போன்ற உறுப்புக்களை ஒருவரின் உடலி லிருந்து எடுத்து இன்னொருவரின் உடலில் பொருத்துவதில் ஒரு சிக்கல் உள்ளது. ஒரு மனிதனின் உடலில் உள்ள 'ஸெல்'களும் இன்னொரு மனிதனின் உடலில் உள்ள 'ஸெல்' களும் ஒரே தன்மையானவை யன்று. எனவே இந்த 'ஸெல்'கள் ஒத்துக் கொள்ளாவிட்டால் புதிதாகப் பொருத்தப்பட்ட உடலுறுப்பினை உடல் ஏற்றுக் கொள்ள மறுத்து விடுகிறது.

இருதயத்தில் செயற்கை வால்வ்கள் பொருத் தும் ஆபரேஷன்கள் இன்று உலகில் சர்வ சாதாரணமாகி விட்டன. இருதய 'வால்வு' என்பது இருதயத்தினுள் உள்ள அறைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு ரத்தத்தை ஒரு பக்கமாகவே செலுத்த உதவும் கதவு போன்ற அமைப்பு.

மண்டை ஓட்டிலும் 'டான்டலம்' தகடு களைப் பொருத்திச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது. உடலின் எந்தப் பகுதியிலுள்ள எலும்பு பழுது பட்டாலும் அதனை எடுத்து விட்டுச் செயற்கை எலும்பைப் பயன்படுத்த






❁ உடலினுள் பொருத்தப் பட்டு மின் அலைகளை எழுப் புவதன் மூலம் பழுதுபட்ட இதயத்தைச் சரியானபடி துடிக்க வைக்கும் கருவி. அணு சக்தியால் இயங்கு வது.

❁ மாஸ்கோ கண் நோய் மருத்துவமனையில், கண் ணில் இயற்கையாக அமைந்துள்ள லென்சை அகற்றிச் செயற்கை லென் ஸைப் பொருத்தும் ஆபரே ஷனைச் செய்ய டாக்டர் தயாராகிறார்.

❁ ஆப்பரேஷனுக்குப் பின் னும் முன்னும். காதில் ஸ்டேப்ஸ் என்ற நுண் ணிய எலும்பு அகற்றப் பட்டுச் செயற்கை எலும்பு பொருத்தப்பட்டுள்ளது.






ஓர் உடலில் உள்ள இருதயத்தை இன் னோர் உடலுக்குள் பொருத்தும்போது, மாற்று இருதயத்தை அந்த உடல் தற்செய லாக ஏற்றுக் கொண்டால் அதிர்ஷ்டம் என்று கூறவேண்டும். ஆனால் மேற்கூறிய செயற்கை உறுப்புக்களை உடலில் பொருத்தும்போது உடல் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுக்கும் சந்தர்ப்பமே இராது. இது காரணம் பற்றியே இருதயத்தின் 'வால்வ்'கள் பழுதானால், அவற்றுக்குப் பதில் வேறு உடல்களிலிருந்து எடுத்த வால்வுகளை விடச் செயற்கை வால்வ் களைப் பொருத்துதல் நல்ல பலனளிக்கும்.

லாம். உடலினுள் ஏற்படும் கட்டி **(Tumour)** சில சமயம் எலும்பை அரித்து விடுவதுண்டு. அரித்துப் போன அந்த எலும்புக்குப் பதில் செயற்கை எலும்பை வைத்துப் பொருத்தி விடலாம்.

பழுதான ரத்தக் குழாய்களுக்குப் பதில் 'டெப்லான்' குழாய் **(Teflon Tube)**களைப் பயன்படுத்துகிறார்கள். 'டெப்லான்' என் பது நைலான் போன்ற ஒரு பொருள். இயற்கையான இரத்தக் குழாய்கள் போலவே இவை சரிவர இயங்கும். தவிர, சொத்தைப்

பற்களைப் பிடுங்கிவிட்டுப் போய்ப் பற்கள் கட்டிக் கொள்வது பற்றி நமக்கு நன்கு தெரியும். அசல் பற்களை விட அழகான அரிசி அரிசியான செயற்கைப் பற்கள் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன. சொத்தைப் பற்கள் அபாயமானவை. பல வியாதிகளுக்கு அவை காரணமாகின்றன.

''ஒளி ஊடுருவிப் பாயும் வகையில் கண்ணின் புறப் பகுதியில் அமைந்துள்ள ஜவ்வு போன்ற மெல்லிய தோல் **(Cornea)** பலருக்குப் பழுதடைந்து விடும். கண் தானம் செய்வோர் அதிகமில்லாத காரணத்தால் செயற்கை கார்னியா தயாரிப்பதில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழுதான பார்வையைச் சரிப்படுத்தத் தனியான உபகரணமாக மூக்குக் கண்ணாடி என்று இல்லாமல் அதற்குப் பதில் கண்ணிலேயே பொருத்தி விடுகிற ''காண்டாக்ட் லென்ஸ்''கள் இப்போது ஏராளமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. மெல்லிய பிளாஸ்டிக்கினாலான இந்த லென்சுகள் கண்ணின் பாப்பாவுக்கு மேல் கச்சிதமாக அமர்ந்து விடுகிறது. அது அங்கு இருப்பதே யாருக்கும் தெரியாது. பெரும்பாலும் பெண்களே இதனை விரும்பித் தரிக்கிறார்கள். மூக்குக் கண்ணாடி லென்சு போலவே கண்ணுக்குள்ளேயும் சிறிய லென்சு உண்டு. இயற்கை அளித்த இந்த லென்சு பழுதானால் கண் பார்வை அடியோடு போய் விடும். மாஸ்கோ கண் நோய் மருத்துவமனையில் கண்ணில் பழுதுபட்டுப் போன ஒளி ஊடுருவும் இயற்கை லென்சுகளை அகற்றி விட்டுச் செயற்கையான பிளாஸ்டிக் லென்சுகளைப் பொருத்தும் அறுவைச் சிகிச்சையைக் கூடச் செய்து வருகின்றனர். இச் செயற்கை உறுப்பு கண்ணுக்குப் புலப்படுவதேயில்லை. அதன் நிறம் ஆரோக்கியமான கண்ணின் இயல்பான நிறத்தைப் போலவேயிருக்கிறது!



விழிப் பாப்பாமீது இருந்த இடம் தெரியாது அமரும் காண்டாக்ட் லென்சுகள் மூக்குக் கண்ணாடியின் பணியைச் செவ்வனே செய்கின்றன.

இன்னொரு விநோதமான சஸ்திர சிகிச்சை அமெரிக்காவில் நடந்தது. மூன்று வயதான குழந்தை பெக்கி, சதா கண்ணீர் பெருக்கிக் கொண்டேயிருந்தாள். ஏனெனில் பிறவியிலேயே அவளுக்கு நுண்ணியதான கண்ணீர்க் குழாய்கள் இருக்கவில்லை. இதனால் சதா கண்ணீரும் கம்பலையுமாக நின்று பெக்கி அடைந்த வேதனை கொஞ்ச நஞ்சமல்ல. ஆகவே பெக்கியின் கண்களில் சின்னஞ்சிறிய ஸ்டெய்ன்லெஸ் ஸ்டீல் குழாய்களைப் பொருத்தினார்கள். நாளடைவில் இக் குழாய்களைச் சுற்றி இயற்கையாகவே கண்ணீர்க் குழாய்கள் உருவாயின. பின்னர் செயற்கைக் கண்ணீர்க் குழாய்கள் அகற்றப்பட்டு விட்டன!

காதின் உட்புறம் ஒலி செல்ல முடியாமல் தடைப்படுவதால் சிலருக்குக் காது கேட்காமலிருக்கும். ஒலியைக் கேட்க உதவும் நரம்புகள் சரியாகவே இருக்கும். ஆனாலும் காது கேட்பதில்லை. இந்த நிலைக்குக் காரணம்?

காதுக்குள் மாலியஸ், இங்கஸ், ஸ்டேப்ஸ் என்று மூன்று நுண்ணிய எலும்புகள் உள்ளன. ஸ்டேப்ஸ் என்ற சிறு எலும்பு குதிரைச் சேணத்திலிருந்து தொங்கும் அங்கபடியின் அமைப்புக் கொண்டதாக இருக்கும். இதன் அடிப்பாகத்தைச் சுற்றிலும் கால்ஷியம் சத்துப் படிந்து விடுவதன் காரணமாக இவ்வெலும்பு சலனம் அற்றுப் போய் விடுகிறது. இந்தச் சலனமின்மையே காது கேளாமல் இருப்பதன் காரணம். இந்த நிலையில் ஸ்டேப்ஸ் எலும்பையே எடுத்துவிட வேண்டியதாகிறது. மூன்று மில்லி மீட்டர் நீளமே உள்ள இந்த எலும்புக்குப் பதில் செயற்கை எலும்பு ஒன்றைப் பொருத்தி விடுவதன் மூலம் காது மீண்டும் நன்றாகக் கேட்கும். இந்த நுண்ணிய எலும்பை எடுத்துவிட்டுச் செயற்கை (டெஃப்லான் பாலிஎதிலின்) எலும்பைப் பொருத்த நுண்நோக்கி **(Microscope)**யின் உதவி தேவைப்படும். இந்தக் கடினமான ஆபரேஷனுக்கு 'ஸ்டெபிடெக்டமி' **(Stapedectomy)** என்று பெயர்.

ஹார்வர்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரசாயன ஆராய்ச்சியாளர்கள் நோயாளிகள் எதிர்காலத்தில் ரத்தச் சேமிப்பு நிலையங்களை நம்பியிருக்க வேண்டியதில்லை; செயற்கை ரத்தத்தைக் கொண்டே ஜீவிக்கலாம் என்று சொல்கின்றனர். இவர்கள் தயாரித்த செயற்கை ரத்தம் உடலின் பல்வேறு உறுப்புக்களுக்கும் பிராண வாயுவை எடுத்துச் செல்வதிலும் கரியமிலவாயுவை வெளியேற்றுவதிலும் இயற்கை ரத்தத்தைப் போலவே அத்தனை திறம்பட இயங்குகிறதாம். இருநூறு எலிகள், சில நாய்கள் ஆகியவற்றிலிருந்த ரத்தத்தை முழுக்க முழுக்க எடுத்துவிட்டு இந்தச் செயற்கை ரத்தத்தாலேயே அவற்றை வாழ வைத்து வெற்றி கண்டிருக்கின்றனர்.

(பத்திரிகைச் செய்திகளை வைத்தும் டாக்டர்கள் சிலரைக் கேட்டும் எழுதியவர் : **'பாணன்.'**)

சுத்தமான
மனம் கவரும் வெண்மைக்கு



சிங்கம் மார்க்
விக்டோரியா
ப்ளூ ஓ ஓ பி (OOB)
(மிகச் சிறந்த நீலம்)

சிறிதளவே விக்டோரியா ப்ளூ
ஓ ஓ பி உபயோகித்ததில் உங்கள்
ஆடைகளுக்குத்தான் என்ன
வெண்மை! ஆடைகளை பளபளப்
பான வெண்மையாக்குகிறது.
உங்களுடைய சட்டைகள்,
வேஷ்டிகள், விரிப்புகள் முதலிய
வைகளை அதிக வெண்மையுடன்
வைக்க இதுவே சிறந்த
சிக்கனமான முறை.

தயாரிப்பாளர்கள்: அல்ட்ராமரீன் & பிக்மெண்ட்ஸ் லிமிடெட், அம்பத்தூர், மதராஸ் 53

ஏகபோக விற்பனை ஏஜெண்டுகள்: கெம்டைல் ட்ரேடிங் கம்பெனி, 318, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ் 1

விநியோகஸ்தர்கள்: மெஸர்ஸ் என். ரமண்லால் பிரதர்ஸ், 416, தங்கசாலைத் தெரு, சென்னை-1



ராமாயணம்

ராஜாஜி

31. உயிர் நீத்தான்!

“அன்று அதற்குப்பிற நடந்ததையும் சொல்கிறேன், கேள்!'' என்றான் தசரதன்.

''மகா பாவ காரியத்தைச் செய்துவிட்டு, ரிஷிகுமாரர் உயிர் நீத்ததையும் பார்த்துவிட்டு இனி என்ன செய்யலாம் என்று யோசித்தேன். சரி, இவர் சொன்னபடி செய்வதே கடமையும் நன்மையும் என்று தீர்மானித்தேன். அவருடைய குடத்தை எடுத்துச் சுத்தமான தண்ணீர் மொண்டு கொண்டு அவர் சொன்ன ஒற்றையடிப் பாதை வழியாகச் சென்று ஆசிரமத்தை யடைந்தேன். அங்கே வயது முதிர்ந்த தாயும் தந்தையும் தங்கள் மகனுடைய வருகைக்காகக் காத்திருந்ததைக் கண்டேன். சிறகிழந்த இரண்டு பட்சிகளைப்போல் சுருங்கிப்போன தேகங்களோடு இருந்த இடத்திலிருந்து நகர முடியாதவர்களாக ஆசிரமத்தில் உட்கார்ந்திருந்தார்கள். இருவரும் கண் பார்வை இழந்தவர்கள். ஏன். தண்ணீர் கொண்டு வரப் போனவன் இத்தனை நேரமாகியும் இன்னும் வரவில்லை என்று தங்கள் மகனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். 'ஐயோ! இவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பவனை நான் கொன்றுவிட்டு இவர்களை அநாதைகளாக்கிவிட்டேனே!' என்று பயமும் துயரமும் அடைந்து மெள்ள நடந்து போனேன். என் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் தந்தையானவர் 'அப்பனே! சீக்கிரம் தாகத்துக்குத் தா. ஏன் இவ்வளவு நேரம்? ஆற்றில் விளையாடிக்கொண்டு காலம் கழித்தாயா? உன் தாயார் தாகத்துக்குத் தவிக்கிறாள். அப்பனே! ஏன் பேச மாட்டேன் என்கிறாய்? நானாவது உன் தாயாராவது ஏதாகிலும் குற்றம் செய்தோமா? நீ எங்கள் பேரில் கோபம் கொள்ளலாகாது. நீ ஒழுக்கம் குறையாத தருமசீலன். நீதான் எங்களுக்குக் கதி என்பதை அறிவாய். பார்வை இழந்த எங்களுக்கு நீதான் கண்ணாவாய். மகனே! எங்கள் இருவருடைய உயிரும் நீயேதான்! ஏன் பேசாமல் இருக்கிறாய்? நான் இப்படிச் சொல்லுகிறேன் என்று கோபமா?' இப்படி அந்தப் பல்லில்லாத கிழவர் குழகுழவென்று பேசினார். நானோ சாப பயத்தால் நடுங்கினேன். மெள்ளத் தைரியப்படுத்திக் கொண்டு பேச ஆரம்பித்தேன்.

'''சுவாமி! நான் தசரதன்; உங்கள் ஆணைக்குக் கட்டுப்பட்ட க்ஷத்திரியன். உங்களுடைய குமாரன் அல்ல. என் பூர்வ ஜன்ம பாவத்தின் பயனாக யாவராலும் வெறுக்கத்தக்க பெரும் பாவச் செயலைச் செய்து விட்டு உங்கள் முன்



வணங்கி நிற்கிறேன். பகவானே! நான் யானையோ புலியோ வேறு காட்டு மிருகம் ஏதேனுமோ வரும் என்று நதிக் கரையில் இரவில் வேட்டையாடப் போனவன், குடத்தில் தண்ணீர் மொள்ளும் சப்தத்தைக் கேட்டு, காட்டு யானை தண்ணீர் குடிக்கிறது என்று எண்ணி இருட்டில் பாணத்தை எய்து உங்கள் அருமைக் குமாரனைத் தெரியாமல் கொன்று விட்டேன். எய்த சரம் மார்பில் பாய அவர் கீழே விழுந்து ரத்த வெள்ளத்தில் புரண்டு கொண்டிருந்ததை நான் போய்ப் பார்த்ததும் 'ஐயோ, என் அறியாமையால் நடந்து விட்டதே' என்று துயரமும் திகிலும் அடைந்து இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்தேன். உங்களுடைய குமாரர் வேண்டுகோளின்படி அவருடைய வேதனை தீருவதற்காக மார்பில் பாய்ந்த அம்பை நான் இழுத்து எடுத்து விட்டேன். உங்கள் குமாரர் மேலுலகம் சென்று விட்டார். நான் அஞ்ஞானத்தில் செய்துவிட்ட பாதகத்தைச் சொன்னேன். இனி உங்கள் திருவுள்ளம் எப்படியோ அப்படிச் சாபத்துக்குக் காத்திருக்கிறேன் அடியேன்' என்றேன்.

''நான் சொன்ன பயங்கர விருத்தாந்தத்தைக் கேட்ட அவர்கள் பேச்சிழந்தனர். கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாகப் பெருகிற்று. பிறகு கிழவர் சொன்னார்: 'அரசனே! நீ செய்தது மிகப் பெரிய பாவம். ஆயினும் தெரியாமல் செய்தாய். நீயே வந்து சொல்லவும் செய்தாய். ஆதலினால் பிழைத்தாய். எங்கள் இருவரையும் அங்கே கொண்டு போய்ச் சேர்ப்பாயாக. மகனைத் தொட்டுத் தடவித் தரும ராஜன் வசம் போய்ச் சேர அனுப்பி விடுவோம்' என்றார்.

''அப்படியே அவர்கள் இருவரையும் தூக்கிக் கொண்டு ஆற்றங்கரையில் ரிஷிகுமாரர் விழுந்து கிடக்கும் இடத்துக்குச் சென்றேன். உயிர் நீத்த உடலைத் தழுவி, அழுது, அவர்கள் தங்கள் துக்கத்தைத் தீர்த்துக் கொண்டு பிறகு குமாரனை ஆசீர்வதித்துத் தகனக் கிரியைகள் செய்து முடித்தார்கள்.

'''எங்களுக்கு நீ விளைத்த துக்கம் அரசனே, நீயும் அனுபவிப்பாய். புத்திர சோகத்தால் நீயும் மாள்வாய்' என்று சொல்லிவிட்டு இருவரும் சிதையிலேறித் தீக்கிரையாகிச் சுவர்க்கம் சென்றார்கள். நான் அன்று செய்த பெரும் பாவம் இன்று என்னைப் பற்றிக் கொண்டது.

''பத்தியத்துக்கு மாறான உணவையுண்ட நோயாளியின் வியாதி அதிகரித்து அவனைக் கொல்லுவது போல் அந்தப் பாவம் இப்போது என்னைக் கொல்லப் போகிறது. கண் தெரியாத அந்தக் கிழவர் தம் துக்கத்தைப்



பொறுக்கமாட்டாமல் சொன்ன சொல் உண்மையாயிற்று. என்னுலேயே என் அருமை மகன் வனத்துக்குத் துரத்தப் பட்டான். அந்தத் துக்கத்தில் இன்று யமாலயம் செல்லப் போகிறேன்.

''எதிர்பாராதபடியும் சுபாவத்துக்கு விரோதமாகவும் நிகழ்ச்சிகள் நிகழ்வ தற்கு வேறு காரணமில்லை. நான் ஏன் இப்படி மோசம் போக வேண்டும்? நான் ராமனைக் காட்டுக்குப் போ என்றாலும் அவன் ஏன் என் வார்த்தையைச் சிரமேற் கொண்டு வனம் போக வேண்டும்? கௌசல்யே, பார்வையை இழந்தேன். நீ என் கண்களுக்குத் தெரியவில்லை. மரணம் நெருங்குகிறது. அருகில் வா. எல்லாம் முடிந்தது. எமதூதர்கள் புறப்படு என்கிறார்கள். ராமன் வரு வானா? அவனைப் பார்த்துவிட்டு உயிர் நீப்பேனா? மார்பு அடைக்கிறது. இனி ஏதும் மிச்சம் இல்லை. விளக்கில் எண் ணெய் வற்றிப் போயிற்று. கௌசல்யே! சுமித்ரே!'' என்று சொல்லி வர வரப் பேச்சு அடங்கிப் போய் அன்றிரவே உயிர் நீத்தான் அரசன்.

வால்மீகி முனிவர் ராமாயணத்தை ஆரம்பிக்கும்போது, 'எல்லா வேதங் களையும், சாஸ்திரங்களையும் ஓதியவன், தீர்க்கதரிசி, தேஜஸ் அடைந்தவன், யுத் தங்களில் வெற்றி பெற்ற வீரன், யாகங்கள் செய்து முடித்தவன், தரு மத்தில் ஈடுபட்டவன், ரிஷியைப்போன் றவன், மூவுலகங்களிலும் புகழ் பெற்ற வன், பகைவர்களை ஒழித்தவன், பல அரசர்களின் நட்பை அடைந்தவன், புலன்களை அடக்கியாளும் திறமை கொண்டவன், பெருஞ்செல்வம் திரட் டியதில் இந்திரன் குபேரன் இவர்களுக் குச் சமமானவன், ராஜ்ய பரிபால னத்தில் மனுவைப் போன்றவன்' என்று சொல்லுகிறார், தசரதனைப் பற்றி. அந்தத் தசரதன் புத்திர சோகத்தால் கர்ம விதிப்படி தாங்க முடியாத துக்கத்தை அடைந்து உயிர் நீத்தான்.

அடிக்கடி மூர்ச்சை போவதும் பிறகு பிரக்ஞை வருவதுமாக இருந்த தசரதன் உயிர் நீத்த விஷயம் பக்கத்திலிருந்த கௌசல்யை, சுமித்திரைக்குக் கூடத் தெரியவில்லை. அவர்களும் சோகத் தாலும் கண் விழித்த களைப்பாலும் அந்தப்புரத்தில் ஒரு மூலையில் அயர்ந்து கிடந்தார்கள். பொழுது விடியும் காலத்தில் சூத மாகத காயகர்கள் அந்தப்புர வாயிலில் வழக்கம் போல் கூடி அவரவர்களுடைய கிரமப்படி அரசனை எழுப்ப சுப்ரபாதம் பாட வும் வாத்தியம் வாசிக்கவும் செய் தார்கள். அரசன் எழுந்திருந்ததாகக் காணவில்லை. அரசன் எழுந்ததும் அவன் தேவைகளைக் கவனிக்க வேண் டிய பணியாட்கள் வெகுநேரம் காத் திருந்து விட்டு, 'இன்று அரசன் ஏன் இன்னும் எழுந்திருக்க வில்லை?' என்று சந்தேகத்துடன் உள்ளே பிரவேசித் தார்கள். அரசன் உயிரற்றுக் கிடப்ப தைக் கண்டார்கள்.

பிறகு அரண்மனை முழுவதும் விஷயம் தெரிந்து ஒரே துயரக் கடலாயிற்று. மூவுலகும் புகழ் பெற்ற தசரத மகா ராஜாவின் மனைவியர் ஒருவர் கையை ஒருவர் பிடித்துக் கொண்டு துக்கம் தாங்காமல் அநாதைகள் போல் அழு தார்கள். (தொடரும்)

உங்களுக்கு விருப்பமான
ஹார்வி துணியைத் தேர்ந்தெடுங்கள்



ஹார்வி

டுவின் டஸ்கர்

அதிநேர்த்தியான தரமுள்ள துணிகள் — பாப்ளின்கள், டிரில் வகைகள், லாங் கிளாத் முதலியன — விலையில் நயமானவை. உறுதியானவை. நீடித்து உழைப்பவை. பல சலவைகளுக்குப் பிறகும் அவைகளின் மிருதுவான அமைப்பும் 'புதுத் தன்மையும்' குன்றுதிருக்க வேண்டி சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டவை.


ஹார்வி

ஸாராடோகா

'டெரீன்' காட்டன் ஷர்டு துணிகள்

மாசற்ற நெசவும், பகட்டான தோற்றமுமுள்ள இந்த ஷர்டு துணிகள் மனதுக்குப் பிடித்த பற்பல வண்ணங்களில் அளிக்கப் படுகின்றன.





ஹார்வி

ஸாராபாண்ட்

'டெரீன்' இணைந்த ஸூட்டிங் துணிகள்

ஆடவர்களின் சீருடைக்கு என்றைக்கும் ஏற்றவை. தேர்ந்தெடுக்க வசதியாக, நேர்த்தியான வெள்ளை நிறத்திலும் மற்றும் லேசான க்ரே முதலிய பல நிறங்களிலும் இவை வழங்கப்படுகின்றன.

Bensons-1086 ITAM

தயாரிப்போர் :
மதுரை மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
மதுரை

மதுரையைச் சேர்ந்த ஹார்விஸ்


3
சிலையைத் தேடி...
கதை: வாண்டு மாமா
சித்திரம்: ரமணி
ஃபாதர், இவர்கள் இங்கு ஒளிந்து கொண்டிருந்தது உங்களுக்குத் தெரியாதில்லையா?
எல்லோரையும் அழைத்து வா. அதிகாரியிடம் செல்லுவோம்.
கிராமத்தானின் சைக்கிளைத் திருடியவர்கள் இவ்விருவரும்தான். இவர்களுக்கு ஒளிந்து கொள்ள இடமளித்தார் இந்தப் பாதிரியார்.
ம்... ஏ, பொண்ணு பின்னால் என்னத்தை ஒளித்துக் கொண்டிருக்கிறாய்?
ஒ... ஒண்... ணும்... இல்லே என்னுடைய பொம்மை...
திடீரென்று அதிகாரியின் பரிவான குரல் பயங்கரமாக மாறியது...
அது சரி, வழியில் சந்தித்தீர்களா அந்த வேவு - காரன். அவன் எங்கே?
அவர்கள் யார், எங்கிருந்து வருகிறார்கள் என்ற தகவல்களைத் தலைமையதிகாரி கேட்டார். மீனா தன் தகப்பனாரைப் பற்றிச் சொன்னாள்....
இது ரொம்ப அழகான பொம்மை. நீ அதிர்ஷ்டக் காரப் பெண்
வேவு காரனா...? நாங்கள் சந்தித்தோமா...?


ஓஹோ! உங்களுக்கு ஒன்றுமே தெரியாதா? சரி, இந்தா உன் பொம்மையை வாங்கிக் கொள். ஓர் இந்திய வேவுகாரன் எங்களிடமிருந்து தப்பி விட்டான். வேவுகாரர்கள் பிடிபட்டால் என்ன தண்டனை கிடைக்கும் தெரியுமா? சுட்டுக் கொல்லப்படுவார்கள் நாய்களைப் போல........
தெரியும்...
அதுவும் தெரியுமா? இந்திய நாகரகத்தைச் சேர்ந்த குழந்தைகளில்லையா? சரி, போங்கள். இனி இம்மாதிரி கைதிகளைக் கடத்திக் கொண்டு ஓடாதீர்கள்....
நீலாவும் ரவியும் வெளியேறியதும் அதிகாரி கர்ஜித்தார்...
நான் இந்தப் பாதிரியாரைக் கவனித்துக் கொள்கிறேன். நீ உடனே தலைமைக்குப் போன் செய்து அந்தப் பெண்ணைத் தொடர்ந்து சென்று கண்காணிக்கச் சொல். அவளுக்கு அந்த வேவுகாரனைப் பற்றிய ஏதோ ரகசியம் தெரிந்திருக்க வேண்டும்.
நீலாவும் ரவியும் வேகமாகத் தெருவில் நடக்கிறார்கள்—தங்களைத் தொடர்ந்து ஓர் உருவம் வருவது தெரியாமல்.......
இன்னும் ஏனக்கா உனக்குப் பயம்? பொம்மையைத்தான் அவன் சந்தேகிக்கவில்லையே.
உண்மைதான். ஆனால் நம்மீது அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது ரவி...
இந்திரபால் மாமா குறிப்பிட்ட விலாசத்துக்கு நாம் போகுமுன் நம்மை யாரும் பின்தொடரவில்லை என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்.
நீலா சட்டென்று ரவியை ஒரு வீட்டின் முடுக்கில் தள்ளித் தானும் ஒளிந்து எட்டிப் பார்த்தாள்...
யாரோ ஒருவன், மறைந்து கொண்டு வருகிறான்.
தொடரும்....

பக்கத்து வீட்டுப் பிரமுகர்



பாராளுமன்ற உறுப்பினர் திரு க. அன்பழகனைப் பற்றி அவரது பக்கத்து வீட்டுக்காரரும் தமிழ்நாட்டு மேல்சபை உறுப்பினருமான திரு டி. கே. பொன்னுவேலு கூறுகிறார் :

அன்பழகன் அந்த நாளில் எனக்குத் தெரிந்து அடுத்த வீட்டு மாப்பிள்ளையாக வந்து சேர்ந்தார். இப்போது அவர் ஒரு எம். பி. யாகத் திகழ்கிறார்.

மலேயாவிலிருந்து வந்த டாக்டர் கிருஷ்ணசாமி எங்கள் வீட்டுக்கு அடுத்த வீட்டில் குடியிருந்தார். ஆசார அநுஷ்டானங்களில் மிகவும் நம்பிக்கையுள்ள குடும்பம். அந்தக் குடும்பத்தின் மாப்பிள்ளை பதவிக்கு அன்பழகனை என் தகப்பனார் கந்தசாமியும் எதிர் வீட்டுத் திருவேங்கட முதலியாரும் சிபாரிசு செய்தார்கள். அன்பழகன் அப்போதே சீர்திருத்தக் கருத்துக்கள் கொண்டவர் என்பது தெரியும். இதனால் டாக்டர் கிருஷ்ணசாமி வீட்டில் தயக்கம் ஓரளவு ஏற்பட்டது. ஆனால் மற்றப் பெரியவர்கள் கல்யாணப் பையனின் நேர்மையான குணங்களை எடுத்துச் சொல்லி விளக்கியபோது, கிருஷ்ணசாமி வீட்டினர், தயக்கத்தை விட்டு, தைரியமாக அன்பழகனை மருமகனாக ஏற்றுக் கொண்டு விட்டனர். பெரியார் ராமசாமி முன்னிலையில் சீர்திருத்த விவாகமாகவே திருமண விழா அதிக தடபுடல் இல்லாமல் நடந்தது.

அப்போது நான் பள்ளிச் சிறுவன். எட்டி நின்று அன்பழகனைப் பார்த்தவன்தான். அதே போல்தான் பல நாட்கள் எட்டி நின்றே அதே வீட்டில் அறிஞர் அண்ணாவையும் பார்த்திருக்கிறேன். அன்பழகன் வீட்டில் 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகை வாங்குவது வழக்கம். எங்கள் வீட்டில் என் தந்தை 'ஹிந்து' பத்திரிகை படிக்கும் பழக்கம் உள்ளவர். அண்ணா அன்பழகன் வீட்டுக்கு வந்து தங்கும்போது கிடைக்கும் அவகாசத்தை எல்லாப் பத்திரிகைகளையும் படித்து முடிப்பதில் செலவிடுவார். அண்ணாவுக்கு 'ஹிந்து' பத்திரிகை எங்கள் வீட்டிலிருந்துதான் போகும். நான்தான் கொண்டு போய்க் கொடுப்பேன். தூர இருந்து பெரியவர்கள் பேசுவதையும் விவாதிப்பதையும் சில நிமிடங்கள் ரசித்து விட்டுத்தான் வீடு திரும்புவேன். அப்போதெல்லாம் பிற்காலத்தில் நானும் அண்ணாவுடன் அவருடைய தொண்டர்களில் ஒருவனாக நெருங்கிப் பழக வாய்ப்பு ஏற்படும் என்று நான் நினைத்தும் பார்த்ததில்லை.



அன்பழகன்



பொன்னுவேலு

அன்பழகன் அவர்களும் என்போல் சிறுவனாக இருந்தபோதே அண்ணாவைத் தூர இருந்து பார்த்து அவரால் ஈர்க்கப்பட்டவர்தான். 1938ம் ஆண்டில் மாயூரம் நகரப் பூங்காவில் கட்டாய இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் அண்ணா பேசினார். அப்போது அன்பழகனுக்குப் பதினைந்து அல்லது பதினாறு வயதுதான். அப்போதெல்லாம் அண்ணாவை சி. என். அண்ணாதுரை என்றால்தான் பொது மக்களுக்குத் தெரியும். அண்ணாவைப் பற்றி அன்பழகன் கேள்விப்பட்டிருந்தாரே தவிர நேரில் பார்த்ததில்லை. மாயூரம் நகரப் பூங்காவில் அந்த வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அந்தக் கணத்திலேயே அவர் அண்ணாவிடம் மனத்தைப் பறி கொடுத்தார்.

அன்பழகன் அவர்களின் தந்தை அந்த நாட்களில் தீவிர காங்கிரஸ் அபிமானியாக இருந்தவர். கதர் விற்பனை செய்து வந்தார். தீண்டாமை ஒழிப்பிலும் தீவிர அக்கறை காட்டி வந்தார். அவரது தீண்டாமை ஒழிப்புத் தீவிரம் அவரது வியாபாரத்தைப் பாதித்தது. ஏகப்பட்ட பொருள் நஷ்டம். மனச் சோர்வு. இந்தச் சூழ்நிலையைச் சிறு வயதிலிருந்தே கவனித்து வந்ததினாலோ என்னவோ, அன்பழகனுக்குச் சுயமரியாதைக் கொள்கைகளில் கவனம் திரும்பியது. அண்ணா பேச்சைக் கேட்டதிலிருந்து அந்தக் கவனம் அதிகமாயிற்று.

ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு அதே அண்ணாவுடன் மேடையில் அமர்ந்து அதே இந்தி எதிர்ப்பு விஷயமாகப் பேசுவோம் என்று அன்பழகன் நினைத்திருப்பாரோ, என்னவோ அப்போது? 1947ம் ஆண்டு

செப்டம்பரில் அரண்மனைக்காரத் தெரு கந்தோனிக் சென்டர் மண்டபத்தில் இந்தி எதிர்ப்பு பற்றி அண்ணா, நெடுஞ்செழியன், அன்பழகன் மூவரும் பேசினார்கள். அரசியல் சம்பந்தமாக அவர் பொதுமேடையில் பேசியது இதுதான் முதல் தடவை. அதற்கு முன் அவர் பொது மேடைகளில் திருக்குறளைப் பற்றித்தான் பேசி வந்தார்.

காரணமில்லாமல் வெளியே போக வேண்டும் என்று நினைக்க மாட்டார். பார்வைக்குச் சற்று முன்கோபக்காரர் மாதிரித்தான் தோன்றுவார். காரணம் மனத்தில் பட்டதைப் பட்டென்று சொல்லி விடுவார். பொதுவாக நண்பர்களுடன் அபிப்பிராய பேதங்களைத் தான் முதலில் விமரிசிப்பார். அதற்கப்புறம் தான் ஒருமித்த கருத்துக்கள் பேச்சில் அடிபடும். இது அவர் சுபாவம்.

இப்போதெல்லாம் முடிந்த அளவு குறிப்பிட்ட நேரங்களில் சாப்பாட்டை வைத்துக் கொள்ளுகிறார். முன்பெல்லாம் சாப்பாடு அகாலம்தான். இந்த நல்ல பழக்கம் ஜெயில் வாசத்தில் கற்றுக் கொண்டது என்கிறார். எனக்குத் தெரிந்த அளவில் இவர் மீசை வைத்துக் கொள்ள ஆரம்பித்ததும், வெற்றிலை போடும் பழக்கத்தை மேற்கொண்டதும் ஜெயில் வாசத்தின்போதுதான்.

திரைப் படங்கள் பார்க்க ஆர்வம் உண்டு. ஆனால் திட்டமிட்டபடி அவகாசம் கிடைப்பதில்லை. ரேடியோவைச் செய்தி கேட்பதற்கு மட்டுமே பயன்படுத்துவார். இசையை ரசிப்பது என்பது அபூர்வமான விஷயம். அண்ணாவோடு சேர்ந்து சில நாடகங்களில் நடித்திருக்கிறார். அதன் பின் நாடகத்தில் அக்கறை காட்டியதில்லை.

அண்ணா உடல்நலக் குறைவுக்குச் சிகிச்சை பெற நியூயார்க்கில் இருந்தபோது இவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோஷ்டியில் இடம் பெற்று அமெரிக்கா போயிருந்தார். பத்து நாட்கள் அவருடன் தங்கியிருந்தார். ''என் இல்லத்தில் எத்தனையோ தடவை அண்ணா வந்து தங்கியிருக்கிறார். அதற்குப் பதிலாக எனக்கு அவருடன் சில நாட்கள் தங்கியிருக்க வாய்ப்புக் கொடுத்தார். அந்தச் சில தினங்கள் மறக்க முடியாத தினங்கள்'' என்று அன்பழகன் அடிக்கடி கூறுவார்.

ஆடம்பர ஹோதா, ஜபர்தஸ்து எல்லாம் இவரிடம் அணுகாத விஷயங்கள். அடுத்த வீட்டு வாசலில் நான்கைந்து கார்கள் நின்றால் இவர் ஊரில் இருக்கிறார் என்று ஊகித்துக் கொள்வேன்.

பேட்டி: **கோமதி சுவாமிநாதன்**



சிரிப்புக்கு .... என்ன பொருள் ?

மூடிய வாயின் ஓரத்துத் தசைகள் அகன்று, சற்று மேலாகச் சுருக்கம் காட்டினால் அது சாதாரணப் புன்னகை. உள்ளத்திலே ஓர் உவகை. இதை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

மேல் வரிசைப் பற்கள் வெளியே தெரியுமாறு சிரிப்பது, அடையாளம் புரிந்து கொண்டதைக் காட்டும் அறிகுறி - நண்பர்கள் சந்தித்துக் கொள்ளும்போது இப்படிக் காணலாம்.

வாய் முழுதும் திறந்து, இரண்டு வரிசைப் பற்களும் தெரியும் சிரிப்பு இருக்கிறதே, அந்த அகன்ற சிரிப்புத்தான் கவர்ச்சியான சிரிப்பு.

சிரித்தால் மட்டும் போதுமா?

வாயால் சிரிக்கும் சிரிப்பு மட்டும் சிரிப்பாகி விடாது, கண்களும் ஒத்துழைக்கவில்லையெனில்.

மெல்லிய புன்னகையானாலும் சரி, வாய் அகன்ற சிரிப்பானாலும் சரி, கண்களைச் சுற்றி ஓர் அசைவு இல்லாவிட்டால் பூரணமாகாது. வாய் அசைவுக்கு ஏற்பக் கண்கள் விரிய வேண்டும். புருவம் உயர வேண்டும்.

சிரிக்கும்போது மட்டும்தானா? இந்தப் புருவங்கள் கோபத்திலே ஒன்றை யொன்று தொடுவது போலச் சுருங்கும் என்றால், சோகத்திலோ வெகு தூரத்துக்கு அகன்று விடுகின்றன!

பிரிட்டனில் பர்மிங்ஹாமில் சில டாக்டர்கள் மனித அங்க சேஷ்டைகளை ஆராய்ந்து அவற்றை 135 பிரிவில் வகைப்படுத்தியுள்ளனர். முக அசைவுகள், கை விஷமங்கள், உடலின் அபிநயங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தால் போதும். ஒருவன் வாய் திறந்து பேசாமலே அவன் மனநிலைகளை அளந்து விடலாம் என்கிறார்கள். வாய்ப் பேச்சைப்போல் அரைகுறையோ, உள் ஒன்று வைப்பதோ இல்லையாம், இந்தப் பேசாத பேச்சில்!

குழந்தையின் விளையாட்டுப் பொருளை மற்றொரு வாண்டுப் பயல் எடுத்துவிட்டாலோ, எடுக்க வந்தாலோ, உதட்டைக் கோணி, வேதனையாக விசும்பி முகவாயை நீட்டி, பிறகு கையை ஓங்குகிறானே பயல்? அது என்ன அபிநயம்? தற்காப்புக்காக அடிக்க வரும் பாவனையாம் அது. இந்த இயக்கங்களைக் கவனித்ததும் குழந்தையைச் சீண்ட வரும் வாண்டு சாதாரணமாக விலகிப் போய் விடுகிறான். இல்லாவிட்டாலோ அடி வாங்கிக் கொள்கிறான்.

வயதானால் என்ன, ''தற்காப்புக்காக அடிக்க வரும்'' இந்த இயல்பு எல்லோரிடமும் இருக்கிறதாம். பேச்சில் சூடேறும்போது எத்தனையோ பேர் கையை அடிக்கடி உயரத் தூக்குவதைக் கவனிக்கலாம். பக்குவப்பட்ட வயதானால், உடனே வேகம் அடங்கி, கை தலையை வருடுவதிலோ சிகையைக் கோதுவதிலோ ஈடுபட்டு விடுகின்றன.

இந்த விரிவான ஆராய்ச்சி யெல்லாம் மனநோய் மருத்துவத்தில் பெரிதும் பயன்படுகிறதாம்.

''உன் முகமே ஒரு புத்தகம். அதிலே மனிதர்கள் எத்தனை விந்தை விஷயங்களைப் படிக்கிறார்கள்'' என்ற ஷேக்ஸ்பியர் வாக்கை இன்றைய மருத்துவர்கள் நிரூபிக்கின்றனர்.

ஆதாரம்: டைம் --சிரி-வாசன்



லின்டாஸ்-INC-3-140TM

வஞ்சம் அறியா நெஞ்சம்

ரா. கணபதி



மெய்யடியார்களின் குண நலன்களில் ஒன்றாகக் கபடமறியாத வெள்ளை உள்ளத்தைக் கூறுகிறார் நரஸி மேதா. சூதும், வாதும், வஞ்சனையும், கபடமும் சுற்றிச் சூழ்ந்து நெரிக்கும்போதே இவற்றின் பிடிப்பில் சிக்காமல் சத்தியமும், தர்மமும்; அன்பும், உள்ளத் தூய்மையும் நிறைந்து வாழ்ந்த தருமபுத்திரனை இந்தப் பக்த லட்சணத்தின் மூர்த்தியாக வழங்குகிறார் ஓவியர் கனுதேசாய்.

இல்லற இன்பம் நுகர்ந்தால் பாண்டுவுக்குச் சாவு ஏற்பட்டுவிடும் என்பது கிந்தம ரிஷியின் சாபம். எனினும் இளைய மனைவி மாத்ரியுடன் தனித்திருக்கையில் பாண்டுவைப் பகவேகம் இழுத்துச் சென்று விடுகிறது. அதன் விளைவாகச் சாபம் பலிக்கிறது. மாண்டு போகிறான் பாண்டு. அவனது மரணத்துக்குத் தானே காரணம் என உணர்ந்த மாத்ரி தேவி அவனோடு உடன்கட்டை ஏற முடிவு செய்கிறாள்.

இச்சம்பவம் நடக்கும்போது பாண்டவர்கள் இளம் பருவத்தினரே. எனினும் அப்போதே யுதிஷ்டிரனின் கபடமற்ற மனப்போக்கில் அசையாத நம்பிக்கை மாத்ரிக்கு ஏற்பட்டு விட்டது.

அவள் உயிர் துறக்குமுன் தன் குழந்தைகளான நகுல சகாதேவரைப் பார்த்து மனம் கலங்காமல் நிம்மதியுடன் சொல்கிறாள்: "யுதிஷ்டிரன் உங்களுக்குத் தீங்கு நேராமல் ரட்சிப்பான் என்ற உறுதியில் உயிர் விடுகிறேன்."

ராஜவம்சத்தினரிடையே நிலவும் பங்காளிக் காய்ச்சல் மிகவும் பிரசித்தம். பிற்பாடு பாரத யுத்தமே இதனால்தான் ஏற்பட்டது. எனினும் மாற்றாந்தாய் மக்களிடம் மன வேறுபாடு இன்றித் தருமன் நடந்துகொள்வான் என்று மாத்ரி சர்வ நிச்சயமாகக் கருதியிருக்கிறாள்.

சூது அறியாத தருமன் சூதாட்டத்தில் இறங்க நேர்ந்ததற்கு அவனது அன்பு உள்ளமே காரணம். ராஜசூய யாகத்தில் சிசுபாலனைக் கண்ணன் வதைத்த பின் வியாஸ மகரிஷி தர்மபுத்திரனிடம், "இது ஒரு தொடக்கமே. இன்னும் பயங்கரமான யுத்தம் இனி வரப் போகிறது" என்கிறார்.

யுத்தத்துக்குத் தான் காரணமாக இருக்கக் கூடாது என்று உறுதி கொள்கிறான் யுதிஷ்டிரன். "இனி வேறுபாட்டுக்கு இடமே தர மாட்டேன். யாரிடமும் இதமாக நடந்து கொள்வேன்" என்று சபதம் செய்கிறான்.

இதைப் பயன்படுத்திக் கொள்கிறான் சகுனி. யுதிஷ்டிரனைச் சூதாட்டத்துக்கு அழைக்கிறான். அதற்கு ஒப்பாவிடில் மனோபேதம் உண்டாகி விடும் என்று கண்ட யுதிஷ்டிரன் வேறு வழியின்றி இசைகிறான். தோற்று, வனம் புகுகிறான்.

இதற்குப் பின் நடந்த ஒரு நிகழ்ச்சி யுதிஷ்டிரனின் உள்ளப் பான்மைக்கு இணையற்ற உதாரணமாகும். பாண்டவர் வனம் புகுந்த பின், அவர்களது சிறுமையை நேரில் கண்டு கொக்கரிப்பதற்கே துரியோதனாதியர் வேட்டை என்ற வியாஜத்தில் அக்காட்டுக்குச் செல்கின்றனர். மனைவியரையும் உடன் அழைத்துச் செல்கின்றனர்.

கெடுவான் கேடு நினைப்பான் என்பது அங்கு நிரூபணமாகிறது. சிறுமைப்படுத்த வந்தவர்களே சிறுமை அடைகிறார்கள். அவர்கள் வனத்தில் கந்தர்வ ராஜனிடம் மரியாதை இன்றி நடந்ததால் கந்தர்வர்கள் சீற்றமுற்று அவர்களைச் சிறைப் பிடிக்கின்றனர். துரியோதனாதியரின் மனைவியரையும் தொட்டிழுத்துச் செல்கின்றனர்.

துரௌபதியின் கூந்தலைப் பற்றி இழுத்து வந்த பாதகர்களின் மனைவியர் இவ்வாறு பற்றி இழுக்கப்படும்போது யுதிஷ்டிரன் கெக்கலி கொட்டி மகிழ்ந்தானா? அல்ல. ரத்தக் கண்ணீர் வடித்தான். 'கௌரவர்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்' என்று கருதிய தம்பியரைக் கடிந்து கொள்கிறான். "நம்மிடையே பகை ஏற்படுகையில் நாம் ஐவர், அவர்கள் நூற்றுவர். ஆனால் அந்நியப் பகைவன் ஒருவன் வருகையில் நாம் நூற்று ஐவர்" என்று மொழிகிறான்.

பீமனையும் உலுக்கி விடுகிறது அவனது அன்புணர்ச்சி. அவன் துரியோதனாதியரைக் கந்தர்வர்களிடமிருந்து மீட்கிறான்.

சூது ஆடிக் கபடமாக ராஜ்யத்தைக் கவர்ந்தவர்களிடம் பதிலுக்குக் கபடம் செய்து ராஜ்யத்தைப் பெறுவதில் தவறில்லை என்று ஒருமுறை கண்ணனே சொல்லியும் தருமன் அதற்குச் செவி சாய்க்கவில்லை.

துரௌபதியால் இந்த மனப் போக்கைப் பொறுக்க முடியவில்லை.

"என்னையும் தம்பிமாரையும் விட்டாலும் விடுவீர்; தர்மத்தை விட மாட்டீர். ஆனால் தர்மிஷ்டராக இருப்பதன் பயன் என்ன? துன்பம், துன்பம், மீளாத் துன்பம்தான்" என்கிறாள்.

"கிருஷ்ணையே! நீயுமா இப்படிப் பேசுகிறாய்? தர்மம் என்பது வியாபாரமா என்ன? தர்மத்துக்காகவே தர்மமாக இருக்க வேண்டுமே அன்றி, பயன் கருதியா தர்மத்தை அநுஷ்டிப்பது?" என்கிறான் யுதிஷ்டிரன்.

பொது தர்மத்திலிருந்து சிறிதே மாறுபட்ட ராஜ தர்மத்தை எடுத்துக் காட்டி யுதிஷ்டிரனைப் போரில் ஈடுபடுத்த முயல்கிறான் பீமன்.

''எனக்கு ராஜ்யத்தை விடத் தர்மமே மேல். 'ராஜ்யம் வேண்டும்' என்னும்போது தான் ராஜ தர்மம் தேவை. ராஜ்யம் தேவைப் படாதபோது அந்தத் தனிப்பட்ட தர்மம் இல்லை. உண்மையைக் கூற வேண்டுமாயின் அரச தர்மம் என்கிற பேரில் தர்மத்தைக் கபடமாகக் கடைப்பிடிப்பதை நான் ஏற்க வில்லை'' என்கிறான்.

நச்சுப் பொய்கையில் நீரெடுக்கச் சென்ற பீமார்ச்சுனர்களும், நகுல சகாதேவரும் மாண்டு போகின்றனர். அங்கு யட்சனாக வந்து வினா விடுக்கும் தன் தந்தையான தரும தேவதைக்குச் சிறப்பாக மறுமொழி கூறுகிறான் யுதிஷ்டிரன். அகமகிழ்ந்த யட்சன் ''உன் தம்பிகளில் ஒருவனுக்கு உயிர் தருகிறேன். எந்தத் தம்பி உயிர்த்தெழ விரும்புகிறாய்?'' என வினவுகிறான்.

இதுகாறும் அவன் விடுத்த வினாக்களை விட இது சிக்கலான வினா. அந்த வினாக்களுக்கு அறிவாலும் அநுபவத்தாலும் விடை சொன்ன யுதிஷ்டிரன் இந்த வினாவுக்குத் தன்னையே விடையாகத் தந்து கொள்ள வேண்டும். தரும தேவதையின் சோதனையே அந்த வினா.

''அகன்ற மார்பும் நீண்ட கைகளும் படைத்த நகுலனை உயிர்ப்பித்துத் தருக'' என வேண்டிக் கொள்கிறான் தருமபுத்திரன்.

''மாவீரர்களான பீமனும் அர்ஜுனனும் இருக்க நகுலனை ஏன் விரும்புகிறாய்?'' என்று கேட்டு மீண்டும் சோதிக்கிறான் தரும தேவன். யுதிஷ்டிரன் அமர வாசகத்தைக்



காந்திஜி விரும்பிய கீதம்

கூறுகிறான்: ''தர்மத்தைக் கொன்றால் அப்படிக் கொல்பவனை அந்தத் தர்மம் கொன்று விடுகிறது. தர்மத்தை ஒருவன் ரட்சித்தால் அந்தத் தர்மமே அவனை ரட்சிக்கிறது. நான் தர்மத்தை மீற மாட்டேன். என் பிதாவுக்குக் குந்தி மூலம் பிறந்த வாரிசுகளில் நான் ஒருவன் மிஞ்சி யிருக்கிறேன். மாற்றுத்தாய் மாத்ரியின் வயிற்றுப் பிள்ளைகளில் ஒருவரேனும் உயிருடன் இருக்க வேண்டும். அதனால் தான் நகுலனைக் கேட்டேன்'' என்கிறான்.

ஆதியில் உடன்கட்டை ஏறுமுன் மாத்ரி அவனிடம் வைத்த நம்பிக்கை அன்று நிரூபணமாகிவிட்டது!

தர்மதேவன் அவனது சத்திய நாட்டத்தில் மகிழ்ந்து நால்வருக்கும் உயிர் தருகிறான்.

கபடமே அறியாத யுதிஷ்டிரன் அக்ஞாத வாசம் செய்கையில் மாறுவேஷம் போட வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது. மாறுவேடமும் கபடம்தானே என வினவலாம்.

ஆனால் தவிர்க்க முடியாத இந்தக் கபடத்தை அவன் தாண்டுவதற்குத் தர்மதேவனே துணை நிற்கிறான்.

கங்கன் என்ற சந்நியாசியாக மாறுவேடம் பூண்டு விராட மன்னனை அடைவதற்கு முன் தருமபுத்திரன் கங்கையில் நீராடிக் கிழக்கு முகமாக அமர்ந்து, அறக் கடவுளை உள்ளுருகித் தியானிக்கிறான். உடனே தர்மதேவனின் அநுக்கிரகத்தால் அவனது தோற்றமும் ஆடை அணிகளும் தாமே மாறி விடுகின்றன. காஷாயமும் திரிதண்டமும் தரித்த அந்தண சந்நியாசியின் உருவம் யுதிஷ்டிரனுக்கு உண்டாகி விடுகிறது.

தருமபுத்திரன் கபடமாக மாறுவேடம் போட அவசியமில்லாமல், மெய்யாகவே மாறி விடுகிறான்.

இப்பேர்ப்பட்ட தருமனும் ஒரு கபடமான காரியம் செய்ய நேர்ந்தது. உலகில் குற்றம் இழைக்கும் மக்கள் அடியோடு மனம் தளர்ந்து விடாமல் இருக்கும் பொருட்டோ என்னவோ அவதார புருஷர்களின் வாழ்விலும் ஓரிரு குறைகள் சம்பவிப்பதுண்டு.

பாரத யுத்தத்தில் துரோணரை வெல்ல வேறு வழி இல்லாதபோது, கண்ணன் தூண்டியதன் மீது ''அசுவத்தாமன் இறந்தான்'' என்று தருமன் கபடமாகச் சொல்ல நேர்ந்தது.

யுதிஷ்டிரனின் வெள்ளை வாழ்வில் ஓர் ஆழ்ந்த கறை பட்டது; மனத்தில் ஓர் ஆறாத வடு ஏற்பட்டது.

தர்மத்துக்கே தன்னை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்கிறான். அதன் விளைவாக, யுத்தத்தின் இறுதியில் துரியோதனன் தன்னந் தனியனாக விடப்பட்டபோது அவனுக்கு எல்லையில்லாத சலுகை தருகிறான் தருமபுத்திரன். ''நீ எங்களில் எந்த ஒருவரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துப் போர் செய்யலாம். எந்த ஆயுதத்தைக் கொண்டும் போர் செய்யலாம். அவ்வாறு எங்களில் ஒருவனை வென்றாலும் போதும், ராஜ்யம் உனக்கே'' என்கிறான்.

பாரதப்போரில் பாண்டவருக்கே வெற்றி கிடைக்கிறது. ஆனால் இதன் பின் தருமன் அடைந்தது எல்லாம் வேதனை ஒன்றே. உற்றத்தையும் சுற்றத்தையும் அழித்து அரசு பெற்றதற்காக ஓயாமல் உள்ளத்தை உளைந்து கொள்கிறான் தருமன். வனவாசத்தின் போதும், மற்ற சோதனைகளின்போதும் நாம் கண்டதை விட ராஜ்யாதிகாரம் பெற்ற யுதிஷ்டிரனே பெரிய துரதிருஷ்டசாலியாகத் தோன்றுகிறான்.

கடைசியில் அரசைத் துறந்து சுவர்க்கத்துக்குப் புறப்படுகிறான். அவனைத் தொடர்ந்து தாரமும் தம்பியரும் வடக்கு முகமாக நடக்கின்றனர்.

நாய் ஒன்றும் பின்தொடர்கிறது.

வழியில் பாஞ்சாலியும் மற்றவரும் ஒவ்வொருவராகச் சுருண்டு விழுந்து மடிகின்றனர். தருமன் அவர்களைத் திரும்பியும் பாராமல் தான் செய்த தர்மமொன்றே துணை என்ற உறுதியுடன் நடக்கிறான்.

இந்திரன் தேருடன் வந்து அவனை எதிர்கொண்டு அழைக்கிறான்.

யுதிஷ்டிரன், உடன் வந்த நாயை ரதத்தில் ஏற்றிக் கொண்டாலே தானும் சுவர்க்கத்துக்கு வர முடியும் என்கிறான்.

''மனைவியையும் உடன் பிறந்தோரையும் விட்டு வந்த உன்னால் இந்த நாயை ஏன் விட முடியவில்லை?'' என்கிறான் தேவராஜன்.

''அவர்கள் விஷயம் என் கைமீறிப் போனது. ஆனால் என்னை விடாமல் தொடர்ந்து வந்த நாய்க்குத் துரோகம் செய்ய என்னால் ஆகாது. இதற்குச் சுவர்க்கத்தில் இடம் இல்லை எனில் எனக்கும் அங்கு இடம் இல்லை'' என்று நிர்மானமாகக் கூறிவிடுகிறான் தருமன்.

நாய் மறைகிறது. தர்மதேவனே அங்கு நிற்கிறான். 'தர்மமே துணை' எனக் கருதிய யுதிஷ்டிரனுடன் தர்மநாயகனே நாயாக வந்திருக்கிறான்!

சுவர்க்கத்தில் இந்திர சபையில் யுதிஷ்டிரனுக்குப் பெரிய வரவேற்பு அளிக்கப்படுகிறது. ஆயினும் அவனது உள்ளம் துயரத்தில் வெடிக்கிறது. அந்த அவையில் துரியோதனுதியர் மாண்புடன் வீற்றிருக்கின்றனர்; பாண்டவரைக் காணவில்லை.

''என் சகோதரர் உள்ள இடமே எனக்குச் சொர்க்கம்; அங்கு செல்லப் பிரியப்படுகிறேன்'' என்கிறான்.

அவ்விடத்துக்கு யுதிஷ்டிரனை இட்டுச் செல்கிறான் தேவதூதன். நிணமும் குருதியும் ஊனீரும் துர்க்கந்தமும் வீசும் நரகுக்குத் தருமனை அழைத்துச் செல்கிறான் தேவதூதன். அருவருப்புத் தாளாது அங்கிருந்து திரும்புகிறான் தருமன். அப்போது பீமார்ஜுனர்களும், நகுல சகதேவரும், திரௌபதியும், கர்ணனும் யுதிஷ்டிரனைக் கதறிக் கதறி அழைக்கின்றனர்.

அவர்களுடன் நரகிலேயே வசிக்க முடிவு செய்கிறான் தருமன்.

இந்திரனும், தர்மதேவதையும் பிரசன்னமாகின்றனர். நரகம் சுவர்க்கமாகிறது.

ஆதியில் யுதிஷ்டிரனும் கபடத்தை மேற்கொள்ள வேண்டி யிருந்ததன்றோ? அதற்குத் தண்டனையாகவே அவனுக்கு 'முகூர்த்த காலம் நரக வாசத்தை விதித்ததாக அறக் கடவுள் கூறுகிறார்.

நரக அநுபவமே தருமனுக்குக் கழுவாயாகி அவனது சிறிய கபடத்தைக் கழுவுகிறது.

மாசற்ற பத்தரை மாற்றுப் பொன்னாக என்றென்றும் பொலிகிறான் யுதிஷ்டிரன்.

அத்தியாயம் 3

எழிலரசிக்கு ஓர் ஏமாற்றம்!

சாப்பாட்டு மேஜையும் அதைச் சுற்றி இருந்த நாற்காலிகளும் மிருந்த வேலைப்பாடுகளுடன் கூடியவை. தொல் பொருள் கண்காட்சியில் இடம் பெற வேண்டியவை. அந்தப் பங்களாவின் மற்ற அறைகளைப் போலல்லாது சாப்பாட்டு அறை மட்டும் பழங்காலப் பொருள்களாலேயே அலங்கரிக்கப்பட்டிருந்தது.

சாருவுக்கு வசதியாக நாற்காலியை இழுத்துப் பிடித்து, அவள் அமர்வதற்கு முன்னால் மேஜைக்கருகே அதைத் தள்ளி உதவி செய்த ஜெர்மானியன் காஃப்மன், அவள் பக்கத்திலேயே மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்தான்.

''சாரு! இந்த அறையில் நீ இருப்பது பொருத்தமாகவே இல்லை'' என்றான் ரோஜர்ஸ். அவன் ஒரு பிரிட்டிஷ் பிரஜை. இந்தியப் பிரஜைகள் ஓரிருவரும் சாப்பிட அமர்ந்திருந்தார்கள்.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?'' என்றாள் சாரு, 'நாப்கின்'னை எடுத்து மடியில் விரித்தவாறே.

''உன்னை இந்தியாவின் நவீன கால நங்கைக்கு ஓர் உதாரணமாகக்கூட நான் கருதவில்லை. எதிர்கால இந்தியாவில் பெரிய சாதனைகளைப் புரியப் போகிற பெண் இனத்தின் பிரதிநிதியான ஓர் எழிற் பாவையாகவே நினைக்கிறேன்'' என்று மனப்பூர்வமாகக் கூறிய அவன் தொடர்ந்தான்: ''அப்படிப்பட்ட நீ சரித்திரகாலப் பொருள்கள் நிறைந்த இந்த அறையில் உட்கார்ந்திருப்பது விநோதமாக இருக்கிறது.''

சாரு சிரித்தாள். ''உங்களுக்கு இந்த அறையின் அலங்காரம் பிடித்திருக்கிறதா? இந்த எஸ்டேட்டை வாங்கிய சமயம் பம்பாயிலிருந்து ஒரு பார்ஸிப் பெண் என்னைக் காண வந்திருந்தாள். 'இன்டீரியர் டெகரேஷ'னில் அவள் நிபுணத்துவம் பெற்றவள். 'உன் திறமையைக் காட்டு' என்று சொல்லி அவளை இங்கு அனுப்பி வைத்தேன். சாப்பாட்டு அறையை இப்படிப் பழங்காலப் பாணியில் அமைப்பதுதான் இன்றைய நவீன நாகரிகமாம். இந்த அறைக்கு மட்டும் பத்தாயிரம் ரூபாய் 'எஸ்டிமேட்' போட்டாள்.''

''கொடுக்கலாம், தகும்'' என்றான் காஃப்மன்.

அப்போது சாருலதாவின் பட்லர், ரொட்டிகள் அடங்கிய அழகிய சிறு கூடை ஒன்றை எடுத்துக் கொண்டு வந்தான்.

''மோகன்! ஏன் டாக்டர் வேணு கோபாலுக்குத் தட்டு வைக்கவில்லை? அவர் அறைக்குப் போய் நாங்கள் சாப்பிடக் காத்திருக்கிறோம் என்று சொல்லு!'' என்று உத்தரவிட்டாள் சாரு.

பட்லருடன் அவள் தமிழில் பேசவே, ''வேணுகோபாலைப் பற்றியா அவனைக் கேட்கிறாய்?'' என்றான் ரோஜர்ஸ்.

''இன்னும் இரண்டு நிமிடங்களில் வந்துவிடுவார்; நாம் காத்திருக்க வேண்டாம். ஆரம்பிக்கலாம்'' என்றாள் சாரு.



சாருலதா

கீ.ராஜேந்திரன்

''என்ன? உனக்குத் தெரியாது? அவர் சென்னைக்குக் கிளம்பிப் போய் விட்டாரே! உன்னிடம் சொல்லிக் கொண்டுதான் புறப்பட்டார் என்று நினைத்தோம்!''

''ஓ! என்ன முட்டாள் நான்! மறந்தே போனேன்!'' என்று நெற்றியில் கையை வைத்து மென்னகை புரிந்தாள் சாரு. ''அவருக்கு டிரங்கால் வந்தது. பேஷண்ட் ஒருவனுக்குத் திடீரென்று நிலைமை கவலைக்கிடமாகிவிட்ட

தாம். அவசரம் அவசரமாகக் கிளம்பினர். அது சரி, உங்களுக்கு வேண்டிய அளவு ஓய்வு கிடைத்ததா? நாளைக்கு 'கால்ஃப் லிங்க்ஸ்' போகலாம். கால்ஃப் கிளப்பில் செயற்குழு அங்கத்தினர் நான். அல்லது 'ரோயிங்' உங்களுக்குப் பிடிக்குமானால் இரண்டு படகுகளை ரிசர்வ் செய்து விடுகிறேன்...''

பனிக்கட்டியாக இருதயம் உறைந்து போன பிறகும் கைகால்கள் சில்லிட்ட பின்பும் எப்படித் தன்னால் அவற்றையெல்லாம் மறைத்துக் கொண்டு பேச முடிகிறது என்பது சாருலதாவுக்கே ஆச்சரியமாக இருந்தது. அப்படியே தொடர்ந்து சாப்பாடு முடியும்வரை அரை மணி நேரம் அழகாகப் பேசிச் சிரித்தான்; சாப்பிடவும் செய்தாள். விருந்தினர் உண்ட களைப்புடன் சிகரெட், சிகார் சகிதம் 'டிராயிங் ரூமில்' உட்கார்ந்தார்கள். அருமையான பட்லரைக் கண்டுபிடித்து நியமித்ததற்காகச் சாருலதாவைப் பாராட்டினார்கள்.

''இஃப் யூ வில் எக்ஸ்கியூஸ் மி'' என்று பண்பு குலையாமல் இப்போது சொல்லிக் கொண்டு தன் அறைக்குச் சென்றாள் சாரு. ஒரு நிமிஷம் அங்கு நாற்காலியில் விறைப்பாக நிமிர்ந்து உட்கார்ந்தான். 'ஒரு வார்த்தை போய் வருகிறேன் என்று சொல்லிக் கொண்டு கிளம்ப முடியாமல் அப்படி என்ன நடந்து விட்டது இங்கே?'

அவளுக்கு உள்ளத்தை — உடலை என்னவோ செய்தது. என்ன செய்கிறது என்று அவளுக்கே புரியவில்லை. இப்படி எதுவுமே ஓடாமல் ஒன்றிலும் ஒட்டாமல் எதுவுமே பிடிக்காமல் எதிலுமே நாட்டமில்லாமல் ஓரிடத்தில் தான் அசைவற்று அமர்ந்திருந்ததே கிடையாது. இது தன் சுபாவத்துக்கு மாறுபட்டது என்பது திடீரென்று அவளுக்கு நினைவு வந்தது! விருட்டென்று எழுந்தாள். டிரெஸிங் டேபிள் மீது இருந்த அலங்கார டம்பப் பையை எடுத்துக் கொண்டாள். அறைக் கதவைச் சாத்திவிட்டுப் பங்களாவின் பக்கவாட்டில் இருந்த வாசல் வழியாக 'ஷெட்'டை அடைந்தாள்.

அடுத்த இரு விநாடிகளில் அவள் கார், தோட்டத்தின் தார் போட்ட சாலையை அரைத்துத் தள்ளும் சீற்றத்துடன் கிளம்பியது. சாதாரணமாக முக்கால் மணி நேரத்தில் உதகை நகரைச் சென்றடைய வேண்டிய கார் அரை மணியில் அதைச் சாதித்துவிட்டது.

இருள் கவிந்து கொண்டு வந்தது. வழியில் ஆள் நடமாட்டம் இல்லை. ஒரே ஒரு காரை முந்திக் கொண்டு சென்றதாக ஞாபகம். 'அவர் உதகைக்கு எப்படிப் போயிருப்பார்? பஸ்ஸிலா? ஏதாவது லாரியில் தொத்திக் கொண்டிருப்பாரோ? அவசரமானால் காரை எடுத்துக் கொண்டு போகக் கூடாது? டிரைவர் தேவை என்றாலும் அனுப்பியிருக்கலாமே?'

பஸ் ஸ்டாண்டை நெருங்கியதும் காரை நிறுத்தி விட்டுப் பிரயாணிகள் இங்குமங்குமாக நின்று கொண்டிருந்த இடங்களிலெல்லாம் தெரு விளக்கின் மங்கிய ஒளியில் வேணுகோபாலைத் தேடினாள் சாரு. ''ஜட்கா வேணுமா, அம்மா?'' என்று கேட்டான் ஒருவன். நின்று கொண்டிருந்த பஸ்களுக்குள்ளும் ஏறித் தேடித் துருவினாள். அவள் இப்படி யாரையோ தேடி அலைவது அவளுடைய செல்வச் செழிப்பான தோற்றத்துக்கு ஒத்து வராத காரணத்தாலோ என்னவோ, ஒரு விசித்திரப் பொருளை நோக்குவது போல் பலர்



அவளைப் பார்த்தார்கள். ஆயினும் ஜட்காக்காரன் ஒருவனைத் தவிர வேறு யாருக்கும் அவளிடம் பேசும் துணிவு கூட ஏற்படவில்லை. பஸ் ஸ்டாண்டில் வேணு இல்லை என்பது பத்து நிமிஷங்களில் வெட்ட வெளிச்சமாகி விட்டது. மேட்டுப்பாளையம் போகும் ரயில் ஏதும் அப்போது கிளம்பாது என்று சாருவுக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும் ஸ்டேஷனுக்குப் போய்த் தேடினாள். திடீரென்று ஒரு சந்தேகம். ஏதாவது ஹோட்டலில் போய்த் தங்கியிருப்பாரோ? சவாய் ஹோட்டலுக்குப் போய் விசாரித்து விட்டு, அங்கிருந்து மற்ற ஹோட்டல்களுக்கு டெலிபோன் செய்து கேட்டாள். வேணுகோபால் என்ற பெயர் கொண்ட யாருமே அங்கெல்லாம் அன்று வரவில்லை.

'ஒரு வேளை அவர் உதகை நகருக்கு வந்து சேரு முன்




சாதாரண ஜலதோஷம் சிலரை உடனே பற்றிக் கொள்ளுகிறது. மற்றவர்களைப் பற்றுவதில்லை. ஏன் ?



சாதாரண ஜலதோஷத்தால் எளிதில் பாதிக்கப்படுதல் மற்றும் இதர உடற்பிணிகள், அதாவது பசியின்மை, சோர்வு, சரும மற்றும் பற் கோளாறுகள் இவற்றிற்கு காரணம், விடமின்கள் மற்றும் தாதுச் சத்துக்களின் பற்றாக்குறையாக இருக்கக்கூடும். எனவே, போதிய அளவு விடமின்களும் தாதுச் சத்துக்களும் உங்கள் உடலுக்கு ஒழுங்காகக் கிடைப்பதற்காக நீங்கள் நாள் தோறும் ஒரு விம்க்ரான் சாப்பிடுங்கள். விம்க்ரானில் 11 அத்தியாவசிய விடமின்களும், 8 முக்கியமான மினரல்களும் அடங்கியுள்ளன. அதனால் உங்களுக்கு ஆரோக்கியம், வலிமை, ஆற்றல், மற்றும் நோய்களை எதிர்க்கும் சக்தி கிடைக்கும்.

விம்க்ரான்®

மல்டிபிள் விடமின்-மினரல்
டேப்லெட்டுகள்





நாள் முழுவதும் உங்களை சக்தியுடன் வைத்திருக்க ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை போதுமானது.

SQUIBB® SARABHAI CHEMICALS

® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட்டின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்கைக் குறிக்கிறது. கரம்சந்த் ப்ரேம் சந்த் ப்ரைவேட் லிட்., இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

Shilpi SC 4A/69 Tam

நாம் வந்து விட்டோமோ? இனிமேல் தான் பஸ் ஸ்டாண்டுக்கு அவர் வந்து சேர்வாரோ?' மறுபடியும் பஸ் ஸ்டாண்டுக்குப் போனான் சாரு. அரை மணி நேரத்துக்குப் பின். வேனும் ஊட்டியிலிருந்து கீழே இறங்கியாகி விட்டது என்பதை அவள் மனம் வேதனையுடன் ஒப்புக் கொண்டது. இரவோடு இரவாகவே அவர் சென்னை திரும்பலாம்; அல்லது மேட்டுப்பாளையத்திலோ கோவையிலோ தங்கி, நாளைக் காலை போகலாம். 'எப்படியானால் என்ன? எனது விருந்தினராக வந்தவர் என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் என்னை விட்டுப் பிரிந்து போய்விட்டார்!'

பஸ் ஸ்டாண்டிலிருந்து ஏரிக்கரை ஓரமாகச் செல்லும் சாலையில் காரை மெதுவாக ஓட்டிச் சென்றாள் சாரு. ஏன், எதற்கு என்று தெரியாமலேயே போட் ஹவுஸ் அருகில் கார் நின்றது. 'மாலை நாலு மணி சுமாருக்குப் படகிலேறி ஏரியைச் சுற்றிவிட்டுக் கரையோரம் ஒதுங்கியபோது நான் படகை விட்டு இறங்க வசதியாகக் கரையிலிருந்தபடி கைநீட்டி உதவினாரே! தரையில் நான் இரண்டு கால்களையும் ஊன்றிய பிறகும் என் கரத்தை விட மனமில்லாதவராக — ஆனால் மறந்துவிட்டவர்போல் நடித்து — சற்று நேரம் சிரித்துப் பேசியபடியே பிடித்துக் கொண்டிருந்தாரே! அதற்குள் அவருக்கு என்ன வந்து விட்டது?'

காரை நிறுத்தி விட்டு இறங்கினாள் சாருலதா. அதே விநாடியில் சொல்லி வைத்தாற்போல் மின்சார விநியோகக் கோளாறினால் தெரு விளக்குகள் சட்டென்று அணைந்து விட்டன.

சுற்று வட்டாரத்தில் யாருமில்லை — ஒருவர்கூட இல்லை. 'டூரிஸ்டு'களை விளையாட்டாக ஏற்றிச் செல்லும் குதிரைகள், அவர்கள் விட்டெறியும் தின்பண்டத்தைக் கௌவிச் செல்லக் காத்திருக்கும் நாய்கள் - இவற்றில் மாதிரிக்கு ஒன்றைக்கூடக் காணோம். பட்சிஜாலங்களின் குரலொலிகள் முழுமையாக அடங்கி விட்டிருந்தன. வானில் சந்திரன் இல்லை. ஒரு சில நட்சத்திரங்கள் அவளைப் பரிகசிப்பதுபோல் கண் சிமிட்டின. மற்றவை அவளைப் பார்க்கவே கூச்சப்பட்டு மரங்களின் பின்னால் மறைந்து கிடந்தன. நெடிதுயர்ந்த மரங்களின் உச்சாணிக் கிளைகளும் இருளோடு இருளாகக் கலந்து கரிய பெரிய பேயுருவங்களாகத் தோன்றின. சலனமற்ற ஏரி நட்சத்திர ஒளியைப் பிரதிபலித்து, பிரித்துப் போடப்பட்ட வெள்ளித் தகடாக மங்கலாய் ஒளிர்ந்து சுற்றிலும் சூழ்ந்திருந்த மையிருட்டின் பயங்கரத்தை அதிகரித்துக் காட்டியது. அந்த ஏரியிலும், மரங்களின் கரிய நிழல்கள் இருளையே இருட்டடிப்புச் செய்வது போல அப்பிக் கிடந்தன.

உயிரற்ற பாலைவனத்தைக் காட்டிலும் இரக்கமற்றதான ஒலியும் ஒளியுமற்ற ஓர் உலகில் தன்னந் தனியளாய்த் தான் தவிக்க விடப்பட்டது போல் சாருவுக்கு ஒரு பிரமை. உலகின் இருளெல்லாம் — மூலை முடுக்குகளில் முடங்கிக் கிடக்கும் இருள் உட்பட—ஒன்றாய்த் திரண்டு அவள்மீதே கவிந்துவிட மூச்சு முட்டித் திக்கித் திணறினாள் அவள்.

தன் சக்தியை யெல்லாம் ஒன்று திரட்டி ஓடினாள். தலையிலிருந்து கால் வரை நடுங்கிக் கொண்டிருக்க எப்படிக் காருக்கு வந்து சேர்ந்தோம்? எப்படி அதை ஓட்டினோம்? எப்படிப் பங்களாவுக்கு வந்து சேர்ந்து தனது தனி அறையை அடைந்தோம் என்பதொன்றும் அவளுக்குத் தெரியவில்லை.

படுக்கையில் விழுந்து பிழியப் பிழிய அழுதது தெரிந்தது. அந்தக் கண்ணீர் உண்மை என்பது புரிந்தது. சாருலதா அழுவது நிஜம். பெரியதொரு தொழில் வர்த்தக சாம்ராஜ்யத்தின் தலைவி, ஐந்து கோடிக்கும் மேற்பட்ட சொத்துக்களுக்கு அதிபதி; ஈடும் இணையும் அற்ற பேரழகி என்று அனைவராலும் கருதப்படுகிற எழிலரசி — இங்கு பச்சைக் குழந்தையைப் போல் விசும்பி விசும்பி அழுவது சத்தியம்!

'ஏன் எதற்காக நான் அழ வேண்டும்?' என்று ஒரு வீம்புடன் நினைத்தாள் சாருலதா. அப்படி நினைத்த மாத்திரத்தில் அவள் அழுகை கட்டுக்கடங்காமல் மீண்டும் பெருக்கெடுத்தது!

அத்தியாயம் 4

அறிமுகம்: சாரங்கன்

மறுநாள் காலை குளித்து விட்டு வந்து அலங்காரம் செய்து கொள்ள மேஜை எதிரே அமர்ந்து கண்ணாடியைப் பார்த்த போது சாருலதா திடுக்கிட்டாள்.

'இது என்ன? நான் திடீரென்று இரவோடு இரவாகக் கிழவியாகி விட்டேனா? நான் காண்பது முதுமையின் ரேகைகளா? விசனத்தின் சாயலா?



ஜப்பானியப் பிரதமர் ஒரு நெடுஞ்சாலையைத் திறப்பதாக இருந்தது. "நீங்கள் திறப்பதைவிட அந்தச் சாலையைப் போட்ட ஒருவர் திறந்துவைத்தால் நன்றாக இருக்குமே?" என்று பிரதமருக்குப் பள்ளிச் சிறுவன் ஒருவன் கடிதம் எழுதினான். சாலையைத் தொழிலாளி ஒருவர் திறந்து வைத்தார்.

தகவல்: 'நாயக்' — ஆதாரம்: ஹிம்மத்

அல்லது கண் சிவக்க அழுததன் பலனா?' தன் முகத்தையே பார்க்கப் பிடிக்காமல் அவள் வேறுபுறம் திரும்பிக்கொண்டாள். சற்று நேரத்துக்குப் பிறகு வைராக்கியமான ஒரு பிடிவாதத்துடன் மீண்டும் நிலைக்கண்ணாடியைச் சந்தித்தாள். அதில் தெரிந்த தன் உருவத்துடன் போராடத் தொடங்கினாள்.

வழக்கத்தை விட அதிகமான நேரத்தை ஒப்பனையில் செலவழித்த போது பலன் கிட்டாமல் போகவில்லை. குதிரை ஓட்டுவதற்கான பிரத்தியேக உடை தரித்து அவள் வெளியே வந்த சமயம் எஸ்டேட்டில் வளர்த்து வரப்பட்ட நாலு குதிரைகளுள் ஒன்று முன்னமேயே உத்தரவிடப்பட்டிருந்தபடி வாசலில் கம்பீரமாகக் காத்திருந்தது.

அதனைக் கவனித்து வளர்ப்பவன் ஏற்கனவே பளபளவென்று இருந்த அதன் மேனியை பிரஷ் போட்டு நீவிவிட்டு மேலும் தகதகக்கச் செய்து கொண்டிருந்தான். குதிரை ஒரு முறை தும்மிச் சிலிர்த்தது.

சாருலதா அருகில் வந்தபோது சலாம் போட்ட பணியாள், அவள் குதிரையின்மேல் ஏற வசதியாகக் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு நின்றான். "நம்மகிட்டே உள்ள குதிரைங்களிலே ரொம்பச் சாதுவானது இது தான்; தைரியமாக ஏறுங்க" என்றான்.

சாருலதா தனக்குள் சிரித்துக் கொண்டாள். 'நாடு முழுவதும் பல ரேஸ் கோர்ஸ்களில் பிரபலமான ஜாக்கி, ஃபெர்னாண்டஸ்ஸிடம் தான் குதிரை ஏற்றம் கற்றுக் கொண்டது, பாவம், இவனுக்கு எங்கே தெரியப் போகிறது?' நீளமான லகானை இலேசாகப் பற்றி இடது பாதத்தை அங்குபடியில் ஊன்றி லாகவமாக எம்பிக் குதிரை மேல் ஆரோகணித்த சாருலதா, இரண்டு கால்களாலும் அதன் வயிற்றை இடுக்கி போல் பிடித்து, விசையுடன் அழுத்தினாள். அடுத்த கணம் குதிரை குளம்பொலி எழுப்பிக் குதிநடை போட்டுக் கனவில் தோன்றும் ஓர் எழில் காட்சி போல் பாய்ந்து சென்றது. திகைத்துத் திறந்த வாய் மூடாமல் நின்று கொண்டிருந்தான், அதன் காப்பாளன். 'டர்ப் கிளப்' அங்கத்தினர்களில் சாருலதா உயர் அந்தஸ்து பெற்ற ஒருத்தி; இரண்டு ரேஸ் குதிரைகளின் சொந்தக்காரி என்பதையெல்லாம் அறிந்தானா அவன்? இன்றுதானே எஜமானி அம்மாளை முதன் முதலாகச் சந்திக்கிறான்?

எதிரே பட்லரைக் கண்டதும் குதிரையை இழுத்துப் பிடித்து நிறுத்தினாள் சாரு. "நான் காப்பி சாப்பிட்டாச்சு. அறையிலிருந்து டீ ஸெட்டை எடுத்துக் கொண்டு போகலாம். விருந்தாளிங்க யாராவது எழுந்தாங்களா?" என்று கேட்டாள்.

'இல்லை' என்பதற்கு அடையாளமாக அவன் தலையசைத்தான்.


"யாரையும் எழுப்பக் கூடாது. ஆனால் அவங்க எழுந்ததும் பெட் காப்பி தரணும் சூடாக. எட்டரை மணிக்கு 'பிரேக் ஃபாஸ்ட் டேபிள்' தயாரா யிருக்கணும்!"

பதிலுக்குக் காத்திராமல் மேலே சென்றவள், தேயிலைத் தோட்டத்தினுள்ளேயே ஊடுருவிய பல மைல் நீளமுள்ள பாதைகள் சிலவற்றில் சுற்றி வந்தாள். குதிரைச் சவாரி செய்து தேகப்பயிற்சி பெற்றதன் காரணமாகச் சாருலதா பங்களாவுக்குத் திரும்பிய போது காலை இளஞ் சூரியனின் பொன்னிறக் கிரணங்கள் உதகையின் குளிர்ந்த சூழ்நிலையிலும் சுள்ளென்று உறைத்தன.

கீழே இறங்குவதற்கு முன்னால் அவள் குதிரையின் கழுத்தை நாலு தடவை தட்டிக் கொடுத்தாள்.


அதே சமயம் யாரோ கைதட்டிப் பாராட்டுவது கேட்கவே, வியப்பும் சினமும் ஆவல் குறுகுறுப்பும் ஒருங்கே எழ நிமிர்ந்து எதிரே பார்த்தாள். அந்த எஸ்டேட்டில் இதுவரை அவள் பார்க்காத ஒரு புதிய உருவம் கொஞ்சம் தாழ்ந்த மட்டத்தில் அவள் கண்களுக்குத் தட்டுப்பட்டது. உருண்டையான முகம். உதட்டுக்கு வேலி போட்டாற்போல் கருகருவென்று வளர்ந்

மிகவும்



ப்யூரிடியன்
மீடியம் வேவ்
ரூ. 125.00


சிறந்த




டிரான்ஸிஸ்டர்

டிரீனி டாப் 2
2 பாண்ட்
ரூ. 175.00

பிரபல




நண்பன்
மீடியம் வேவ்
ரூ. 110.00



மர்பி

டிரினி மாஸ்டர் 4
2 பாண்ட்.
ரூ. 220.00



டிரான்ஸிஸ்டர்

ஜூபாபிச்
3 பாண்ட்
ரூ. 283.00

மர்பி டிரான்ஸிஸ்டருக்கு, பெரிய அளவு டார்ச் பாட்டரிகள் போதும்
விலைகள் எக்ஸைஸ் தீர்வை உள்ளிட்டவை. விற்பனை வரி தனி.

உன்னத ஒலிநயம், சிறந்த அமைப்பு, சகாய விலை

மர்பி ரேடியோ இந்தியாவின் மிகப் பெரிய அதிநவீன டிரான்ஸிஸ்டர் பாக்டரியில் தயாரிக்கப்பட்டது. ரேடியோ தயாரிப்பில் 20 வருட ஆராய்ச்சி அனுபவம் மற்றும் தொழில்நுட்பத்திறனே பின்பலமாகக் கொண்டிருப்பதால், ஒவ்வொரு மர்பி டிரான்ஸிஸ்டரும் சிறந்த டிரான்ஸிஸ்டராக விளங்குகிறது. இதுவரை 75,000க்கும் அதிகமான மர்பி டிரான்ஸிஸ்டர்களும், ரேடியோக்களும் வெளி நாடுகளில் மட்டுமே விற்கப்பட்டுள்ளன. மர்பியின் உயர்ந்த செயலாக்கத்துக்கும், மக்கள் விரும்புவதற்கும் இதைவிடச் சிறந்த அத்தாட்சி வேறென்ன வேண்டும்?



மர்பி இல்லத்தை மகிழ்விக்கிறது!

MAS 1338



அவள்
சிரமமின்றி
கவலையற்று
இருப்பதை
பாருங்கள்
உங்களுடைய சலவை செய்யப் படவேண்டிய துணிகளை சுலப மாகவும், சிரமமில்லாமலும் சலவை செய்ய "கேரளா வாஷ்வெல்." அது துணிகளை குறுகிய நேரத்தில் இருமடங்கு வேகத்தில் சலவை செய்கிறது.
கேரளா
வாஷ்வெல்
சோப்
WASHWELL SOAP
KERALA WASHWELL SOAP
கேரளா சோப்ஸ் & ஆயில்ஸ் லிட்.,
சோப் டிவிஷன், கோழிக்கோடு-11
(கேரள அரசின் ஒரு நிறுவனம்)
SISTA'S-KSO 258-TA

திருந்த மீசை. பொன்னரளி வேலியை வெட்டுவது போல் மீசையும் அளவாகக் கத்தரிக்கப்பட்டிருந்தது. நீங்காத புன்னகை. நிலையான பார்வை. அழுத்தமான நிறத்தில் டைட் பாண்ட்ஸ், கிரீம் கலரில் ஸில்க் சட்டை. கரும் புள்ளிகளுடன் கூடிய கண்ணைப் பறிக்கும் மஞ்சள் நிறத்தில் ஒரு மிருதுவான 'ஸ்கார்ப்' அவன் கழுத்தைச் சுற்றி வந்து முன்புறம் அடக்கமாகச் சட்டைக்குள் பதுங்கிக் கிடந்தது. அழகாக வாரி விடப்பட்டிருந்த அலை அலையான கேசத்தைத் தாங்கும் இரு தூண்களைப் போல் நீண்ட கிருதாக்கள் அவனுக்கு இருந்தன.

அவன் கைதட்டிப் பாராட்டியபடியே சுற்று முற்றும் பார்த்து, ''டைரக்டர் எங்கே? காமிராமேனைச் சட்டென்று கூப்பிட்டு இந்த ஃபிரேமைப் பார்க்கச் சொல்லுங்கள். இந்த 'டாப் ஆங்கி'ளில் 'டேக்' பிரமாதமாக அமையும்'' என்று சொன்னான்.

''டைரக்டராவது காமிராமேனாவது? என்ன உளறுகிறாய்?'' என்றாள் சாரு.

''அப்படியானால் நீங்கள் சினிமா நட்சத்திரம் இல்லையா?''

''நான்ஸென்ஸ்!''

''ஓ! ஐ ஆம் ஸாரி! இப்போதெல்லாம் ஊட்டிக்கு சினிமா தயாரிப்பாளர்கள் ஏராளமாகப் படையெடுக்கிறார்கள். நீங்கள் ரொம்ப அழகாக இருப்பதோடு படு அலட்சியமாகக் குதிரை ஓட்டுகிறீர்களா? ஏமாந்துவிட்டேன்.'' வலக்கரத்தில் இருந்த பிரம்பால் இடது உள்ளங்கையில் தட்டிக்கொண்டே பேசினான் அவன்.

சாரு தனக்கு ஏற்பட்ட பெருமித உணர்ச்சியை வெகு சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு கீழே இறங்கினாள்.

''நீங்கள் சினிமா நட்சத்திரம் இல்லையென்றால் என்னுடைய 'பாஸ்' ஆகத்தான் இருக்க வேண்டும்.''

'' நீங்கள்தான் சாரங்கபாணியா?''

''கரெக்ட்! எஸ்டேட் மானேஜர் அட் யுவர் சர்வீஸ்!'' ராணுவ பாணியில் அவன் கால்களை ஒன்றுசேர வைத்து 'டக்'கென்ற ஒலியெழுப்பி விளையாட்டாக 'ஸல்யூட்' செய்தான். ''சாரங்கன்'' என்று அழைத்தால் போதும்; கலைபம்!''

'' நேற்றே உங்களை எதிர்பார்த்தேன்.''

''நேற்று ஞாயிற்றுக்கிழமை; விடுமுறை தினங்களிலும் நான் உழைக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்!''

களங்கமில்லாமல் அவன் சிரித்த போது அவன் உதடுகளில் மட்டுமல்ல, அகன்ற கண்களிலும் குழிந்த கன்னங்களிலும் நெரிந்த புருவங்களிலும் சிரிப்பின் சாயல் மினுமினுத்தது. தொத்து நோய் போல் பரவுகிற சிரிப்பு அது. அவன் தைரியமாய்ப் பேசியது சாருவுக்குப் பிடித்திருந்தது.

புன்னகையுடன் அவள், ''எஸ்டேட்டைச் சுற்றிப் பார்ப்போமா?'' என்று கேட்டாள்.

''ஸர்ட்டன்லி! உங்கள் குதிரையிலேயே போவோமா? என் ஜீப்பில் செல்வோமா?''

சாருலதா அடக்கமாட்டாமல் சிரித்தாள். ''ஜீப்பிலேயே போகலாம். ஆனால் முதலில் டிபன் காப்பி சாப்பிட்டு விட்டுக் கிளம்புவோம்; வாருங்கள்'' என்றாள்.

நடிப்பான ஒரு மரியாதையுடன் ஜப்பானியப் பாணியில் குனிந்து நிமிர்ந்த சாரங்கன், ''ஆஃப்டர் யூ!'' என்றான் பங்களாவை நோக்கிக் கைநீட்டியபடி.

அவள் முன்னே செல்ல, அவளிடமிருந்து ஒதுங்கியும் ஒதுங்காமலும் மரியாதை காட்டுவது போலும் ஆனால் அதை மிகைப்படுத்தாமலும் நடந்து சென்றான் அவன். (தொடரும்)

மலராடும் பூந்தென்றல் மகிழ்ந்தது போதுமென்று புனலாடச் செல்லும் பொழுது படர்ந்து கொண்டிருந்தது. வண்ணக் கதிர வனை வழியனுப்பி, வளர்பிறையாய் வருகை தந்த நிலா மங்கை, பூமகளுக்கு வணக்கம் சொன்னாள். இராப் போதின் அந்தத் தொடக்க நேரம் சுகமான காவியத்தின் கலையான முன்னுரை போல் விளங்கியது.

அதோ...

அன்புக் காதலர் அடலேறு நடை போட்டு வருகிறார்!

மோகன நகை மறைந்தது; முத்துநகை மலர்ந்தது.

அகம் குளிர்ந்தும் முகம் வெப்பானேன்? ஆசைக்கு அப்படியோர் அதிசய மாறுதலோ? ஒளிந்து ஓரக் கண்ணால் நோக்கினாள் முத்து நகை. அந்தப் பார்வையின் கூர்மையைத் தாள மாட்டாதவனாய், தவித்துப் போய் விட்டான் வேல் தாங்கி வந்து நின்ற வீரன் வீரய்யன். வெஞ்சமரில் வேல் தாங்கி அஞ்சாமல் போர் புரியும் அவனால் கஞ்ச மலர் முகத்திரண்டு கரிய பெரிய விழி வேல்களின் தாக்குதலைப் பொறுக்க மாட்டாமல் போனதென்னே?

முத்துநகை கலகலவென்று சுநாதக் குரல் எழுப்பினாள். ''வந்ததும் வராததுமாக வாசற்படியில் வடித்த சிலை போல் நிற்பானேன்? வாருங்கள் உள்ளே!''

யாழோடு இணையும்போதுதான் தமிழ், இசையாக ஒலிக்க வேண்டு மென்பதில்லை. கற்புடைய மகளிர் கண்டத்திலும் அது இசையாகத்தான் வாழ்கிறது. இந்த உண்மை வீரய்யனுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே! அவன் ஆந்திரன்; எப்படியோ ஒரு தமிழ்ப் பெண்ணின் காதலைப் பெற்று விட்டான்.

கூடத்து ஒளிவிளக்கின் சுடர் நடம் புரிந்து கொண்டிருந்தது.

''அம்மா எங்கே, முத்துநகை?''

''கோவிலுக்குச் சென்றிருக்கிறார்கள்.''

இருவரும் புறக்கடைப் பக்கமாகச் சென்றனர். சின்னஞ் சிறிய தோட்டம் போல் விளங்கிய புறக்கடையில் புற்கள் மண்டிக் கிடந்த ஓரிடமாகப் பார்த்து அமர்ந்தனர்.

அலங்காரத் திருமுகத்தை அண்ணாந்து நோக்கினாள் முத்துநகை.


''முத்து! உன் வேதனையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. அடுத்த வளர்பிறையில் நம் திருமணம் நிச்சயம்!''

தெளிந்த தெலுங்கினூடே தெரிந்தவரை தமிழைக் கலந்துதான் சொன்னான் வீரய்யன். முத்துநகையும் ஓரளவு தெலுங்கு மொழியைத் தெரிந்து வைத்திருந்தாள்.



போர்வீரன் காதலி

கோவி.மணிசேகரன்



முத்தின் பகட்டற்ற ஒளிபோல் அவனுடைய முகம் பிரகாசத்தில் மலர்ந்தது.

''நிச்சயம்தானா?''

''சந்தேகமே இல்லை. நாளையக் கழித்து மறுநாள் நமது மன்னர் அச்சுதப்பருக்குப் பிறந்த நாள் விழா. அந்த விழாவுக்கு அடுத்து நமது திருமண விழா தான்!''

எல்லையற்ற பெரு மகிழ்ச்சியுடன் விழுப்புண் விருந்துண்டு மகிழும் காதலனுடைய பரந்த மார்பில் தலை புதைத்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் முத்துநகை. அப்போது...

பக்கத்து வீட்டு இலுப்பை மரத்திலிருந்து ஆந்தையொன்று அலறியது. அந்த அபசகுனமான குரல் காதல் மயக்கம் கொண்ட அவர்களின் செவிகளில் கொஞ்சமாவது விழ வேண்டுமே!

கி. பி. பதினாறும் நூற்றாண்டு.

தலைமிக்க சோழர்கள் ஆட்சி களையற்று வீழ்ந்த பின்னர், தரணி புகழ் தஞ்சை நிலம் நாயக்கர்பால் தஞ்சமடைந்தது. நலமிக்க நாயக்கர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். அவர்களுள் குலம் புகழ — கொடி புகழ அரசாண்டவர் அச்சுதப்ப நாயக்க மன்னர்.

அருமைக்கும் பெருமைக்கும் உரிய சகல கலா மைந்தன் ரகுநாத நாயக்கனிடம் ஆட்சியை ஒப்படைத்த பின்னர் குலம் வாழ்ந்த மண்ணுக்கே குடிபெயர்ந்து, காலத்தின் கடைசிப் படலத்தை முடித்துக் கொள்ள ஆசைப்பட்டார் அச்சுதப்ப நாயக்கர்.

அவருடன் புறப்பட்ட போர்வீரர்களுள் வீரய்யனும் ஒருவன். அந்தச் சமயத்தில்தான் தன்னுடைய அருமைக் காதலி முத்து நகையைத் தஞ்சையில் விட்டுச் செல்ல மனமில்லாமல், தன்னுடன் அழைத்துச் செல்ல முடிவு செய்தான். சென்ற ஆண்டுதான் முத்துநகையின் தந்தை பாவலர் பலராம முதலியார் காலமானார். வயதான தாயாருடன் தஞ்சையில் இருக்க மனமில்லாமல், காதலனுடன் புறப்படுவதே சாலச் சிறந்தது என்று புறப்பட்டு விட்டாள் முத்துநகை!

மன்னர் அச்சுதப்ப நாயக்கருக்கு அன்று பிறந்த நாள்!

வழக்கமாக தஞ்சையம்பதியில் அலங்காரத் திருக்கோலம் பூண்டு பொன் முகபடாம் அணிந்த பட்டத்து யானைமீது அமர்ந்து நகர் வலம் வருவார். இவ்வாண்டு இந்தப் பேற்றினைப் பெறுகுண்டா பெற்

நிருந்ததை நினைத்து ஆந்திர மக்கள் பொங்கிப் பூரித்துப் போயினர்.

நகர் வலம் ஆரம்பமானது. வீதி நெடுக அலங்காரத் தோரணங்கள்! பாதைகளின் இருமருங்கிலும் ஆந்திர மக்கள் நின்று தங்கள் அரசப் பெருமானைக் கண்டு களிக்கக் காத்திருந்தனர்.

முன்னே வந்த யானைப் படையின் நடுவே வீரய்யன் வேல் தாங்கி வந்து கொண்டிருந்தான். அவனுடைய கண்கள் பாதையின் இருமருங்கிலும் அலைமோதிக் கொண்டிருந்தன. தன்னுடைய அருமைக் காதலி—அழகுக் காதலி எங்கு நின்று வேடிக்கை பார்க்கிறாள் என்று ஆராய்வதில் அந்தக் கண்கள் அலைமோதின போலும்!

அதோ, அந்தப் பெண்கள் வரிசையில் நடுவில் நிற்பவள் முத்துநகைதான்! எத்துணை அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு நிற்கிறாள் அவள்! கொள்ளையழகு அவளிடம்தானே கொடி கட்டிப் பறக்கிறது!

மைவண்ணக் கருவிழிகளில் பொன் வீட்டு பண்ணிசைக்கிறதே! பொங்கிப் புளகித்துக் காதலியைப் புன்முறுவலுடன் நோக்கிய வண்ணம் யானையை நடத்திக் கொண்டிருந்தான் வீரய்யன். அவனைக் கண்டதும் மெய்யெல்லாம் வாயாகிப் புளகச் சிரிப்புப் பூத்தாள் முத்துநகை! மாசு மறுவற்ற அந்தச் சிரிப்பில் ஒரு மகா காவியமே அடங்கிக் கிடப்பதைப் பட்டத்து யானை மேல் பவனி வந்த மன்னர் அச்சுதப்ப நாயக்கரும் பார்த்து விட்டார். அப்பப்பா! அவருடைய கண்கள் அப்படி நிலைகுத்தி நின்று, பின்னர் அலமருவானேன்? யார் இந்த அழகுத் தேவதை?

அடுத்துக் கொஞ்சமும் தாமதியாமல் அருகில் வந்து கொண்டிருந்த மந்திரிப் பிரதானியை அழைத்துக் காதில் ஏதோ முணுமுணுத்தார்: "பிரதானியரே! ஐந்து அவள் மணமாகாத கன்னிப் பெண்ணாக இருந்தால், தக்க முறையில் தகுந்த மரியாதையுடன், மாலை அரண்மனைக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யுங்கள்!"

பிரதானியாரும், 'அவ்வண்ணமே செய்து முடிப்பேன்' என்பது போலத் தலையசைத்து மூக்கின் மேல் வலக்கரம் வைத்துப் பணிவைத் தெரிவித்தார்.

பொழுது பலபலவென்று விடியும்போதே செய்தியைக் கேட்ட போர்வீரன் வீரய்யன் பொங்கிப் புயலென எழுந்து விட்டான். விதி இப்படி விளையாடிவிடும் என்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. ராஜ விரோதம் எவ்வளவு சீக்கிரத்தில் முளைத்துவிட்டது! இடுகாட்டுக்குப் போக வேண்டிய கிழவன் அச்சுதப்ப நாயக்கன், வாலிபத்து நடுக்காட்டில் நின்று வாழ்வை யாசித்துக்கொண்டிருக்கும் ஓர் அபலைப் பெண்ணை மணந்து கொள்வதா? இது என்ன வேண்டாத புத்தி; விளங்காத கொள்கை?

வெறி கொண்ட வேங்கையைப் போல் அரண்மனையை நாடி விரைந்தான் வீரய்யன். பைத்தியக்காரன் அவன்!

அரண்மனையின் தந்தக் கூடத்தில் மன்னர் அச்சுதப்ப நாயக்கர் அமர்ந்து கொண்டிருந்தார். எதிரே பெனுகொண்டாவின் அரசர் வேங்கடபதி ராயர் அமர்ந்து, அழிந்து போன விஜயநகரத்துக்கு ஏதேனும் மாற்றம் காண முடியுமா என்பது பற்றி ஆலோசித்து உரையாடிக் கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் அங்கு வந்து வணங்கி நின்றான் போர் வீரன் வீரய்யன்.

"என்ன வீரய்யா? ஏதேனும் முக்கிய விசேஷமுண்டா?"

"உண்டு, மகாராயனே! என் இதயத்தை யாசிக்க வந்தேன்!"

"உன் இதயம் உன்னிடம்தானே இருக்கிறது?"

"நேற்று மாலை முதல் உங்களிடம் இருக்கிறது!"

அச்சுதப்ப நாயக்கருக்கு திடுமென்று ஒரு நினைவு வந்தது. நேற்றிரவு முத்துநகையை அவர் எவ்வளவோ சமாதானம் செய்த போது, அழுத கண்ணீர் அடங்காமல் அவள் கூறிய ஒரு செய்தி நினைவு வந்தது. "என் இதயத்தில் தன் இதயத்தை இட்டு ஏற்கெனவே ஒருவர் நிரப்பி விட்டார். அங்கு இடம் காலி இருந்தால்தானே உங்களுக்கு?"

'ஓ...! அவன்தானா இவன்?' மன்னர் சொன்னார்:

"அதை மறந்துவிடு வீரய்யா! வேண்டுமானால் ஒன்று செய்! முத்துநகையிடம் சென்று உன்னையும் மறக்கச் செய்! இதனால் இருவருக்கும் நன்மை உண்டு!"

"நீங்கள் எங்களுக்குத் தெய்வம் போன்றவர். இப்படி...."

"அதனால்தான் சொல்லுகிறேன். சில சமயம் நாம் சூடிக்கொள்ள நினைத்த புஷ்பம் தெய்வச் சாற்றுப்படிக்குப் போய்விடுவதில்லை? தெய்வச் சாற்றுப்படிக்குப் போனால் யாரும் வருத்தப்பட மாட்டார்களே!"

"ஒரு நாள் வாழ்வோடு உதிர்ந்து போகும் புஷ்பமல்ல வாழ்வு!"

"அந்த ஒரு நாள் வாழ்வோடு உதிர்ந்து போனாலும் அந்த புஷ்பத்துக்கு எப்படி மோட்ச மரியாதை நடக்கிறதோ, அப்படித்தான் முத்துநகை என்ற அழகுத் தேவதை பலநாள் உன்னுடன் வாழ்ந்து கஷ்டப்படுவதை விட, ஒரு நாள் வாழ்வோடு அவள் என்னுடன் வாழ்வை முடித்துக் கொண்டாலும் 'நாயக்க மாதேவி' என்ற புகழ் மரியாதை அவளுக்குக் கிடைத்து விடுகிறது. மீண்டும் அதைப் பற்றிப் பேசாமல் இங்கிருந்து போய்விடு."

"இதுதான் உங்கள் முடிவா?"

"அசைக்க முடியாத முடிவு!"

"ஓர் ஏழைப் போர்வீரன் வாழ்வில் குறுக்கிடுவது தர்மமல்ல, மகாராயனே!"

"தருமத்தைப் பற்றி எனக்குத் தெரியும். இவளை மறந்துவிடு.

"மீண்டும் இதைப் பற்றிப் பேசினால்—அல்லது யாரிடமாவது பேச நினைத்தால் உனக்குச் சிறைவாசம்தான் கிடைக்கும்!"

"இதுவரை நான் காட்டிய வீர விசுவாசத்துக்குச் சிறைவாசந்தான் பரிசு என்றால் — அடுத்தவன் சொத்தை அபகரிப்பது தான் அரச தருமம் என்றால், நான் நன்றி



தீபாவளி வரையில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் விற்பனை உண்டு.

கெட்டவகை மாறுவதில் எந்த விதப் பாவமும் இருக்க முடியாது; நான் என் முத்துநகையை மீட்டே தீருவேன்; அவளுடன் எப்படியும் வாழ்ந்தே தீருவேன்; இது சத்தியம்; சபதம்!''

அதற்கு மேல் வீரய்யன் அங்கு ஒரு கணமும் தாமதித்து நில்லாமல் புயலாய்ச் சீறி வெளியேறினான். அவனுடைய அந்தச் செருக்கார்ந்த சபதமும், சீற்றமும் மன்னர் அச்சுதப்ப நாயக்கரைப் பொறிகலங்கச் செய்து விட்டன. அடுத்து சேவகர்களை அழைத்து வீரய்யனைப் பிடித்து விலங்கிட்டுக் கொண்டு வருமாறு சினமார்ந்த தோரணையில் கர்ஜனையுடன் ஆணை பிறப்பித்தார்.



'' அப்பா! தந்தையே! பிச்சை போடுங்க, அப்பா!''

அதுவரை நடப்பதைக் கவனித்துக்கொண்டிருந்த திருமலாதேவி அப்போது பார்த்து அங்கு பிரசன்னமானாள். ''பிரபோ! வீரய்யனைச் சிறையிலடைப்பது பிறகிருக்கட்டும்; நீங்கள் அழிவைச் சிறையெடுத்திருக்கிறீர்கள். இந்திரனுக்கும், சந்திரனுக்கும், ராவணனுக்கும் கிடைத்த முடிவு உங்களை நெருங்குகிறது. மீள வழி தேடுங்கள்; பிறகு உங்கள் விருப்பம்!''

திருமலாதேவியாரின் கண்களில் அவல நீர் துன்பியல் கீதம் இசைத்தது.

ஒவ்வோர் இரவும் மன்னர் அச்சுதப்ப நாயக்கர் அந்தப்புரத்துத் தனி மாளிகைக்கு வருகை தருவார். அகம் குளிரச் சமாதானம் செய்வார். ஆனால் முத்துநகை அவரை நிமிர்ந்து பார்க்கவே யில்லை. அச்சுதப்ப நாயக்கருக்குக் கடுங் கோபம் வந்துவிட்டது. 'நீ அடம் பிடிக்கிறாய். உன்னை முத்தமிழ் மரபுப்படி மூன்று முடிச்சுகள் போட ஆசைப் படுகிறேன்.''

''இது அறமா? என் சொர்க்கம் மண் குடிசையின் அகல் விளக்கில் ஒளி விடுகிறது! தயவுசெய்து என்னை விட்டு விடுங்கள்!''

''திமிர் பிடித்தவளே! மயிலிடம் இறகு கேட்கும் மடையன் என்று நினைத்துவிட்டாய்? பலவந்தமாக உன் தோகையைப் பிடித்து விசிறச் சொல்லிக் காற்று வாங்க எனக்கு எந்நேரம் பிடிக்கும்? அடுத்த மாதம், முதல் முகூர்த்தத்தில் நமது திருமணம். ஆயத்தமாக இரு!''

வேகமும் கோபமுமாக விரைந்து செல்லும் மன்னரைக் கலங்கிய கண்களுடன் நின்று கவனித்தாள் முத்துநகை. தன்னை வீரய்யன் வந்து எந்த வகையிலும் மீட்டுச் செல்ல மாட்டானா என்று ஏங்கிப் பெருமூச்சு விட்டாள். வீரய்யனும் தனக்கு உடந்தையாக இருந்த வீரர்கள் மூலம் எவ்வளவோ முயன்று பார்த்தான். சிறைப்படாமல் அவனால் தப்ப முடிந்ததே யொழிய, முத்துநகையை மீட்பது எளிதான காரியமாகத் தெரியவில்லை.

மன்னரிடம் சபதம் செய்து திரும்பிய அன்றிரவே ஒரு நண்பனிடம் ஓலை கொடுத்துத் தஞ்சையை நோக்கி அனுப்பி வைத்தான். வீரமைந்தன் – பேராளன் ரகுநாத நாயக்கனுவது இது பற்றியதில் தலையிட்டுச் சாதகம் தேடித் தரமாட்டானா என்று எதிர்பார்த்தான். வெற்றி கிட்டவில்லை.

'நல்லவிதமான முயற்சிகள் யாவும் பயனற்றுப் போய்விட்டன. பிறந்த மண்ணே! உன்னைக் காட்டிக் கொடுத்துத்தான் என் காதலியை மீட்க வேண்டும்!' என்ற வருத்தமான முடிவுடன் தன்னந் தனியனாய்த் திடமான புரவியொன்றுடன் வடக்கு நோக்கிப் புறப்பட்டு விட்டான் சுத்த வீரன் வீரய்யன். புரவி பறந்தது.

பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் எந்த நேரமும் பெனுகொண்டாவை விழுங்க வாய் திறந்து காத்துக் கொண்டிருந்த பயங்கரமான நேரம் அது. தலைக்கோட்டைப் போரில் விஜயநகரம் வீழ்ந்து விட்டது. பெனுகொண்டாவும், சந்திரகிரியும் விழுந்து விட்டால், பிறகு மெல்ல மெல்ல வேலூர்க் கோட்டை, ஆர்க்காட்டுக்கோட்டை, செஞ்சி, திருவண்ணாமலை என்று குமரி வரை சென்று விடலாம் என்பது அவர்களுடைய மண்ணாசைக் கனவு. முதலில் நடந்த போரில் ரகுநாத நாயக்கன் மட்டும் படை கொண்டு வந்து விரட்டி யிராவிட்டால் இந்நேரம் சந்திரகிரியும் சரணாகதி பாடியிருக்கும்!

போர் இரகசியங்கள் தெரிந்த வீரய்யனுடைய வருகை பீஜப்பூர் சுல்தானுக்கும், கோல்கொண்டா சுல்தானுக்கும் பெரும்சாதகமாக அமைந்து விட்டது. முதலில் அவர்கள் வீரய்யனை நம்பவில்லை. அவனுடைய காதல் கதையைக் கேட்ட பின்னரே ஒருவிதப் பிடிப்பான நம்பிக்கை ஏற்பட்டது.

இன்னும் மூன்று தினங்களில் திருமணம் நடக்கவிருந்தது.

அரண்மனையில் ஏற்பாடுகளை வெங்கடபதி ராயர் விரைந்து கவனித்தார். ஆனால் ஆயிரமாயிரம் ஆந்திரப் போர்வீரர்களுக்கு மட்டும் மனம் குமுறிய வண்ணமிருந்தது. தங்களைப் போல் ஒரு போர்வீரன்தானே வீரய்யன்? அவன் ஆசையாகக் காதலித்து, காப்பாற்றிக் கைப்பிடித்து, தஞ்சாவூரிலிருந்து கொண்டு வந்த அழகுப் பதுமையை மன்னர் கொஞ்சமும் இதய மில்லாமல் அபகரித்துக் கொள்வதாவது என்று எண்ணினர்.

நாளைப் பொழுது விடிந்தால் முத்துநகை நாயக்கன் தேவியாக வேண்டியதுதான். 'தன்னைக் காக்க வராத காதலன், தாலி கட்டும் அந்தக் கேலிக் கூத்தைப் பார்க்க வருவாரா?' என்று நினைத்துத் தரை மீறயத் துடிக்கலானாள்.

பொல்லென்று விடிந்தது பொழுது. கொல்லெனச் சிரித்தன பறவைகள்!

யார் வந்தாலும் வராவிட்டாலும் கவலை யில்லை. மகனுடைய வருகையைக் காணாது மனத் துயருடன் மண மேடையில் அமர்ந்தார் அச்சுதப்ப நாயக்கர். அந்த நேரத்தில்—

மகனிடமிருந்து ஓலை வந்தது: 'தாங்கள் திருமணம் புரிந்து கொள்வது அடாத செயல். நான் இதனை வெறுக்கிறேன். வீரய்யன் நமக்காகப் பல போர்க் களங்களில் ரத்தத் தியாகம் செய்து வீரக் கடமையாற்றியவன். பிறகு தங்கள் விருப்பம்.' —ரகுநாதன்

எதிரே எரிந்து கொண்டிருந்த ஓமகுண்டத்தில் ஓலையைப் போட்டார் அச்சுதப்ப நாயக்கர். அவருடைய முகத்தில் சினம் வெள்ளித் தாண்டவம் புரிந்தது.

வேதியர்கள் மந்திரம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். முத்துநகையின் இதயமே வெடித்து விடும்போல் இருந்தது. அவளுடைய கண்கள் சுற்று முற்றும் நோக்கின. வீரய்யனைக் காணேம்.

நாதசுரத்தின் இசை உச்சஸ்தாயியில் மிதந்தது. கெட்டி மேளத்தின் ஓசை செவிகளைச் செவிடுபடச் செய்தது. முத்துநகையின் கழுத்தில் மூன்று முடிச்சுகள் விழுந்தன. அந்த நேரத்தில் ஏனைய அறுபத்தொன்பது தேவிமார்களும் அருகில் இருந்தாக வேண்டும். ஆனால் அறுபத்தெட்டுப் பேர்கள்தான் நின்றிருந்தனர். பட்டத்து அரசி திருமலாதேவியாரைக் காணவில்லை.

அடுத்த கணம்—

'வீல்' என்று அலறியவளாய் மயங்கித் தரையில் சாய்ந்தாள் முத்துநகை. 'இப்போது நான் போர் வீரன் காதலியல்ல; நாயக்கன் தேவி' என்ற எண்ணம் முகிழ்த்த நடுக்கமோ? அதனால் ஏற்பட்ட மயக்கமோ?

டம டம டம் டம்...

போர்ப் பேரிகையின் முழக்கம்! போர் வீரர்களின் தயக்கம்!

அப்போது—

அச்சுதப்ப நாயக்கருக்கே மயக்கம்!

செய்தி வந்தது: செவிகள் நொந்தன!

கடமை வீரர்கள் அணி வகுத்தனர்; மன்னரே தலைமை தாங்கினார். அதற்கு மட்டும் பட்டத்தரசி வந்து வெற்றித் திலகமிட்டாள். அவளுடைய கருவிழிகளில் இரண்டு முத்துத் துளிகள்!

சமுத்திரம் போல் பொங்கி வந்த முகம்மதிய சேனைக்கு வீரய்யன் தலைமை தாங்கிய கோலத்தைக் கண்டு பலரும் வியந்தனர். மன்னரோ மருண்டார்!

மூன்று முடிச்சுகளுக்கு ஒப்ப மூன்று நாழிகைப் போதுகூடப் போர் நிலைத்து நிற்கவில்லை. நாயக்கர் படைகள் நாசமடைந்தன. அச்சுதப்ப நாயக்கரின் இடப்புயத்தில் அம்பொன்று பாய்ந்தது. அடுத்தகணமே நாயக்கப் படைகள் கோட்டையை நோக்கிப் புறமுதுகிட்டு ஓடலாயின.

திருமணம் கழிந்த மூன்றாம் நாள் பொழுது போர் முரசப் பொழுதாக முடிந்ததை எண்ணி, கழுத்திலிருந்த மூன்று முடிச்சுக்களை நோக்கிக் கொண்டாள் முத்துநகை.

சற்றைக்கெல்லாம் மன்னர் அச்சுதப்ப நாயக்கர், மாரடைப்பால் மாண்டு விட்டார் என்ற செய்தி காட்டுத் தீப்போல நகர் முழுவதும் பரவியது.

அரண்மனை முகப்பு வாயிலில் மரணமடைந்த அச்சுதப்ப நாயக்கரின் சடலம் கிடத்தப் பட்டிருந்தது. முகம்மதியர்கள் கோட்டைக்குள் நுழையு முன்னர் தன்னுடைய பிணம் கூட அவர்களுக்குக் கிடைக்கக் கூடாது என்று முன்னமேயே எச்சரித்துவிட்டார் அச்சுதப்ப நாயக்கர். அத்துடன் தன்னுடைய தேவிமார்களும், காமக் கிழத்திகளும் சம்மதித்தால் முகம்மதியர்களின் கையில் சிக்காமல் உடன்கட்டை ஏறட்டும் என்றும் உத்தரவிட்டிருந்தார்.

வெளியே கோட்டை வாயில் அதாகதப் பட்டுக் கொண்டிருந்தது.

தீநாவுகளை வானுயரத்துக்கு எழுப்பிய நெருப்புக் குண்டத்தில் மன்னர் அச்சுதப்ப நாயக்கருடைய மனைவிமார்களும், காமக் கிழத்திகளும் கண்களை இறுகப் பற்றிக் கொண்டு விழத் தொடங்கினர். அந்தக் காட்சியைக் கண்டு ஒரு கணம் மலைத்து, மறுகணம் நிலைத்து அருகே வந்துவிட்டான் வீரய்யன். புரவியிலிருந்து அப்படியே தாவிக் குதித்தான். அச்சமயம் நெருப்புக் குண்டத்தில் விழவிருந்த முத்துநகையை எட்டிப் பிடித்துத் தடுத்து நிறுத்தினான்.

முத்துநகை திரும்பிப் பார்த்தாள். சாம்பிக்கிடந்த முகம்; சஞ்சலத்தால் இளைத்த மேனி; சவமாகிப் போன மனநிலையால் ஏற்பட்ட மாற்றம்!

அவள் சூன்யமாகச் சிரித்தாள். "யார் நீங்கள்?"

"முத்து, என்னைத் தெரியவில்லை? உனக்காக எடுத்துக் கொண்ட இந்த முயற்சிக்கு நீ கேட்கும் கேள்வியா இது? உன்னை மீட்க நான் எத்துணை பாடுபட்டு முயன்றேன்? மீட்டுவிட்டேன்! வா, முத்து, வா!"

முத்துநகை மீண்டும் வெளிறிய சிரிப்பொன்றை இதழ்களில் நெளிய விட்டாள்.

"வீரய்யரே! மூன்று நாட்களுக்கு முன் வந்து என்னை மீட்டிருந்தால் நான் பரிபூரண மகிழ்ச்சி யடைந்திருப்பேன். இப்போது நான் மன்னரின் மனைவி. கழுத்திலே தொங்கும் தாலியில் எங்கள் மரபு தொங்கி நிற்கிறது. நான் தமிழ் மகள். என்றைக்குக் கழுத்தை நீட்டியாகி விட்டதோ அன்று முதல் அவர் என் கணவராகி விட்டார். உடல் உறவோ, மன ஒப்புதலோ, வாக்கின் சுத்தமோ எது எப்படியாயினும் — அவர் என் கணவர்; அவரே என் கணவர்! என்னை மன்னியுங்கள்!"

அடுத்துக் கொஞ்சமும் தாமதியாமல் எரிசிதையில் விழுந்து விட்டாள் முத்துநகை!

"ஐயோ!!" என்று கதறினான் வீரய்யன்.

முகம்மதியர்களுக்கு வெற்றி தேடித் தந்த வீரய்யன் தன்வரை அடைந்த தோல்வியைத் தாளாமல் எங்கோ அடிவானத்தை நோக்கிப் புரவியைச் செலுத்திக் கொண்டிருந்தான். மனத்தளவில் நின்ற காதலியையும், அவளுடைய மரபு வழுவா இலட்சியத்தையும் நினைக்கும்தோறும் நெஞ்சு குமுறினாலும், மெய்யெல்லாம் அவ்வப்போது சிலிர்க்கத்தான் செய்தது.



விக்ஸ் வேபோரப் மூக்கு அடைப்பை உடனே போக்குகிறது. தாராளமாக மூச்சுவிட உதவுகிறது. குழந்தை சுகமடைந்து நிம்மதியாகத் தூங்குகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சிறப்பு. அதை ஜலதோஷம் பிடிக்கும் இடங்களான மூக்கு, தொண்டை, மார்பு, முதுகு, இங்கெல்லாம் நேரடியாகத் தடவலாம். ஜலதோஷத்தின் தொல்லைகளிலிருந்து குழந்தை உடனே நிவாரணம் பெறுகிறது. தாராளமாக மூச்சுவிடுகிறது. சுகம் அடைகிறது. விக்ஸ்வேபோரப் குணமளிப்பதன் காரணம் அது ஜலதோஷத்தை எதிர்த்து உள்ளும் புறமும் இரு வழிகளில் போராடுகிறது.

1) 

உடம்பின் மேலே

2) 

உடம்பின் உள்ளே

1) விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்தால் ஏற்படும் உடல்வலியைப் போக்குகிறது.

2) வேபோரப் ஆவியாக மாற்றப்படுகிறது. இந்த ஆவியில் மருந்து இருக்கிறது. ஒவ்வொரு முறை சுவாசிக்கும்போதும் இது உள்ளே ஆழச் சென்று, மூக்கு அடைப்பைப் போக்குகிறது. தொண்டைக் கரகரப்பை நிறுத்துகிறது. மார்பு கபத்தை நீக்குகிறது. ஜலதோஷத்தின் தொல்லைகள் மறைகின்றன.

முக்கியமான குறிப்புகள்



விரைவாக குணம்பெற, மூக்கு, தொண்டை, மார்பு, முதுகு இங்கெல்லாம் விக்ஸ் வேபோரப்பை நன்கு தேயுங்கள்.


ஜலதோஷம் தீரும்வரை இதைத் தொடர்ந்து செய்து வரவும்.



ஜலதோஷத்திற்கு மருந்து விக்ஸ்வேபோரப்.

57


படைக்கு முந்திக்கோ !



பம்பாயில் ஒரு பஸ் ஸ்டாப்பில் நீளமான கியூ வரிசையில் கடைசியில் ஒரு ராணுவ உடை அணிந்த சீக்கியர் வந்து நின்றார். பஸ் வந்ததும், எல்லோரையும் தள்ளிக் கொண்டு அவர் வண்டியில் ஏற முயன்றார். வரிசையாக நின்று இருந்தவர்கள் "சர்தார்ஜி பின்னால் போ, பின்னால் போ" என்று கத்தினார்கள். அவர் அதை லட்சியம் செய்யாமல் பஸ்ஸின் படிகளில் கால் வைத்துக் கொண்டே, "இப்போது சொல்லுகிறீர்கள் பின்னால் போ என்று. யுத்தம் வந்தால் சர்தார்ஜி முன்னால் போ என்று சொல்வீர்கள்" என்றார். அதைக் கேட்டதும் கூட்டத்தினர் சிரித்துக் கொண்டே, அந்த ராணுவ வீரரை வண்டியில் ஏற அனுமதித்தனர்.

- சரோஜா சிம்ஹன்


நல்ல ஏற்பாடு!



ஹாலந்தில் இப்போது ஒரு புது வழக்கம் வந்திருக்கிறது. அங்கு நாடகம் பார்க்கச் செல்பவர்கள் டிக்கட் வாங்காமலே தியேட்டருக்குள் நுழைந்துவிடலாம். இடைவேளையின் போது, நாடகம் பிடித்திருந்தால் டிக்கட் வாங்கிக் கொள்ள வேண்டும். பிடிக்கா விட்டால் வெளியேறி விடலாம் !

ஆதாரம்: டெக்கான் ஹெரால்ட்
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

வாழ்வின் உண்மைகள்



"நம்மிடையே உழைக்காது வாழ்பவர்களும் இருக்கிறார்கள். வாழாது உழைப்பவர்களும் இருக்கிறார்கள். இதுதான் தொல்லை."


-- கோல்டன் காம்மெண்ட் தகவல்: "ரமணன்"



சரித்திரம் சொல்லும்!

"உலக சரித்திரத்தை மாற்றி அமைப்பதில் பெரிய தலைவர்களுக்கும் மேதைகளுக்கும் எவ்வளவு பங்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு ஆஸ்வால்ட் போன்ற கொலைகாரர்களுக்கும் பங்கு இருக்கிறது." - "ட்ரூ" - "முத்து"

படுத்தும் பேசலாம்!



இது என்ன புது மாதிரி டெலிபோன்? அதெல்லாம் ஒன்றுமில்லை. நியூயார்க் நகரில் நடந்த கலவரத்தில் இந்த டெலிபோன் 'பூத்' கீழே விழுந்து விட்டது. அப்படியும் நன்றாக வேலை செய்தது. ஆனால் படுத்துக் கொண்டுதான் பேச முடியும்!

"வீக்கெண்ட்" -- "நாயக்"



தக்காளிப் பிரச்னை

1850ம் ஆண்டு வரையில் தக்காளி அமெரிக்காவில் கேள்விப்படாத ஒன்று. பிறகு அது சர்ச்சைக்கும் இடமாகிவிட்டது. தக்காளி காய்கறி வகையா, பழ வகையா? சண்டை தீரவில்லை. சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்குப் போனது. ஒன்பது நீதிபதிகள் சேர்ந்து வழக்கை விசாரித்துத் தீர்ப்பு வழங்கினார்கள். தீர்ப்பு - தக்காளி சட்டப்படி ஒரு காய்கறி வகையே.

'கரோனெட்' - 'பாபு'.

பூவும் கனியும்

டி. எஸ். கோதண்டராமன்

புஷ்பம் வீட்டுக்குள் நுழையும்போதே வாய் நிறையச் சிரிப்பும் உள்ளம் வழியக் குதூகலமுமாய்த் தான் நுழைந்தாள். காலணிகளைக் கழற்றி உரிய இடத்தில் வைத்துவிட்டு உள்ளே வரும் வரையில் அவளால் தன் உணர்ச்சிப் பெருக்கினைக் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை.

''மம்மீ.... இன்னிக்கு எங்க இனாகக்கு 'மதர்' வந்திருந்தாங்க! ஆமாம். இந்தத் தடவையும் நான் நாடகத்திலே நடிச்சு, கான்வெண்டுக்கு நல்ல பேரை வாங்கிக் கொடுக்கணும்னு சொன்னாங்க!''

''வெரி குட்!....'' என்றவாறே ஒரு முத்தம் கொடுத்தாள் செல்வமணி.



புஷ்பம் 'குட் – ஷெப்பர்டு கான்வெண்'டில் இரண்டாம் வகுப்பில் படிக்கிறவள். வகுப்பிலுள்ள முதல் மூன்று மாணவிகளில் அவள் ஒருத்தி.

நாலைந்து மாதங்களுக்கு முன்னால் பள்ளிக்கூடத்தில் ஏதோ விழா நடைபெற்றது. பல்சுவைக் கதம்ப நிகழ்ச்சியில், இரண்டாம் வகுப்பு டீச்சர் மிஸ் சோபனா தயாரித்தளித்த ஓர் அரங்க நாடகமும் இடம் பெற்றிருந்தது. நாடகத்தில் புஷ்பத்துக்குப் பெரும் பங்கு அளிக்கப்பட்டிருந்தது. கூட்டத்தைக் கண்டு பயப்படாமலும் கூச்சமில்லாமலும் வெகு நாட்கள் பழக்கப்பட்டவள் போலப் புஷ்பம் நடித்ததைப் பாராட்டாதவர் எவருமில்லை. ஏழு வயதுக் குழந்தையாகவா, அது நடித்தது?... என்ன மெருகேறிய நடிப்பு!.... என்ன கண் உருட்டல்! கழுத்து வெட்டல்! அங்க அசைவு!' என்று ஒருமுகமாய்ப் பாராட்டினார்கள். விழாவுக்கு வந்திருந்த பெற்றோர்களுக்கெல்லாம், திடீரென்று ஒரு கௌரவம் தம்மைத் தேடி வந்து விட்டாற் போல் இருந்தது. 'என் குழந்தையைத்தானே கேட்கிறீர்கள்? புஷ்பம் படிக்கிற அதே கான்வெண்டில்தான் படிக்கிறாள்!' என்று உரக்கக் கூவ வேண்டும் போல் இருந்தது, ஒவ்வொருவருக்கும்.

சோபனா அப்படியே புளகித்துப் போனாள். மற்ற டீச்சர்களெல்லாம் அவளை ஒருவிதப் பொறாமைக் கண்ணோடு பார்க்கத் தொடங்கினார்கள். சட்டைக்காரியான மிஸ் கிரேஸிக்கோ ஆத்திரமே பற்றிக் கொண்டு வந்தது. அவளும்தான் ஒரு நிகழ்ச்சி தயாரித்து அளித்திருந்தாள். அதுவும் நன்றாகத் தான் இருந்தது. ஆனால் சோபனாவின் நிகழ்ச்சிக்கு முன் அது ஒளி மங்கிப் போய் விட்டது!

'நல்மேய்ப்பர் மடாலயம்' திருவிழாக்கோலம் பூண்டு விளங்கியது. மந்திரி வருகிறார் என்பது இவ்வாண்டு விழாவுக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்திருந்தது.

மாலை ஆறு மணிக்கு விழாத் தொடக்கம். முதலில் அன்னையை அழைத்து வந்து கோஷ்டி அஞ்சலி. பின், மண்டபத்தில், பிரார்த்தனை. ஏழு மணிக்கு மந்திரி வருவார். கதம்ப நிகழ்ச்சிகள் ஆரம்பம். இப்படித் திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

நிகழ்ச்சிகளில் பங்குகொள்ளும் குழந்தைகள் கண்டிப்பாய் ஐந்தரை மணிக்கே வந்துவிட வேண்டும் என்றும் அவர்கள் நேரே ஒப்பனை அறைக்குப் போய்விடலாம் என்றும் அஞ்சலியிலும் பிரார்த்தனையிலும் அவர்கள் கலந்துகொள்ளத் தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

''டிங்.....''

மணி ஐந்தரை.

மிஸ்டர் மாடி அறையை விட்டுப் பால்கனி கைப்பிடிச் சுவர் அருகே வந்தார்.

என்ன அங்கே? இந்தக் குழந்தைகள் கூட்டமாய்க் கூடி நின்று...? தோட்டக் காரனைச் சுற்றி... மோகன், ரமா, கல்யாணி, புஷ்பம், ராஜா, நிருமலா....?

ஸிஸ்டர் மேலிருந்தபடியே கையைத் தட்டினார். தவித்துக் கொண்டிருந்த குழந்தைகள் நிமிர்ந்தன. ''ஸிஸ்டர், ஸிஸ்டர்... தோட்டக்கார அற்புதத்தைப் பாம்பு கடிச்சுடுத்து.''

ஸிஸ்டர் இறங்கி அவ்விடம் வந்து சேருவதற்குள் நாலைந்து பெரியவர்கள் அவ்விடம் வந்து விட்டார்கள். அற்புதம் துடித்துக் கொண்டிருந்தான். இடது குதிகாலில் பல்லைப் பதித்திருந்தது, நச்சரவம். தோட்டத்தின் அந்த மூலையில் கிடந்த உடைந்த மண் சட்டியை அப்புறப்படுத்துவதற்காக அங்கே போனானாம். அடர்ந்த புற்களின் மத்தியில் மறைந்திருந்த பாம்பு, ஆளரவம் கேட்டுப் பயந்து.... போட்டு விட்டது. போட்டு விட்டுப் போயே விட்டது.

''என்ன செய்யறது, ஸிஸ்டர் இப்ப? நேரமாயிடுச்சே? வான்லே, அவன் வீட்டுக்கு அனுப்பிடட்டுமா ?''

'' நோ.... நோ.... ஹாஸ்பிடலுக்கு அனுப்பிவிடு.... !''

ஸிஸ்டர் திரும்பினார். நிறைந்த மனத்தில் துளி விரிசல். இது இன்றைக்கா நிகழ வேண்டும் ? இந்தச் சந்தர்ப்பத்திலா ?

அறைக்குத் திரும்பியதும் அன்னையின் கண்கள், 'வாட்?' என்று வினவின:

நெஞ்சடைக்க ஸிஸ்டர் கூறினார் நடந்ததை.

''ஹாஸ்பிடலுக்கு அனுப்பி விட்டாய் அல்லவா ? பேசாமல் போய் மேலே ஆக வேண்டியதைப் பார். மேக்—அப்புக்குக் குழந்தைகள் வந்து விட்டார்களா ? இன்று எல்லாக் காரியங்களும் நேரப்படி நடைபெற்றாக வேண்டும். பெரிய மனிதர்களையெல்லாம் அழைத்திருக்கிறோம். ஆமாம், புஷ்பம் வந்தாச்சா?''

''இதோ போய்ப் பார்த்து விட்டு வருகிறேன்.....''

பார்த்தாயிற்று. புஷ்பத்தைக் காணவில்லை !

''நான் பார்த்தேனே, அவளை....'' என்றான் மோகன்.

''என் பக்கத்திலே நின்னுட்டிருந்தாளே?'' என்றாள் கல்யாணி.

''ஆமாம், ஸிஸ்டர் !'' என்றான் ராஜா.

ஆனால் இப்போது காணவில்லை புஷ்பத்தை! அதற்குள் அவள் எங்கே போயிருக்க முடியும் ? — ஏழெட்டு நிமிஷங்களுக்குள்ளாக ?



நாலு ஆசிரியைகள் மூலைக்கொருவராய்த் தேடிக் கொண்டு போனார்கள். வாயில் காப்போனிடம் ஸிஸ்டரே சென்றார். புஷ்பம் உள்ளே நுழைந்ததைப் பார்த்திருந்தான் அவன். ஆனால் திரும்பி வெளியே போகவில்லையே.

என்ன ஆச்சரியம் ! ஆச்சரியமா ? சொல்லொணாத வேதனை !

பள்ளிக்கூடச் சுற்றுச் சுவர் எல்லைக்குள் தான் அவள் இருக்கிறாளா ? ஒவ்வோர் அறைக்குள்ளும் புகுந்து பார்த்தாகி விட்டது. அவளைத் தேடிக் கொண்டு போனவர்கள் கூடத்தைப் பிதுக்கிக் கொண்டு வந்தார்கள்.

இது என்ன சோதனை, கர்த்தரே ?

இந்தக் குழந்தை எங்கேனும் ஒளிந்து கொண்டு விளையாட்டுக் காண்பிக்கிறதா? அவள் ஒப்பனை செய்து கொள்ளவேண்டாமா ?.... நாடகம் கிடக்கட்டும். அவள் பெற்றோர்களுக்கு என்ன பதில் சொல்வது ?

மணி ஐந்து ஐம்பத்தைந்து.

"சந்தேகாஸ்பதமான நபர்கள் யாரேனும் இங்கே தென்பட்டார்களா ?...."

ஸிஸ்டர் திரும்பினார். மதர் !

"இல்லே மதர், இல்லே. அன்னியர் யாருமே வரவில்லே..... அற்புதத்தைக் காரில் ஏற்றி அனுப்பிய அந்த ஐந்து நிமிஷ நேரத்தைத் தவிர மற்ற நேரமெல்லாம், எல்லோர் கவனமும் இங்கேதான் இருந்தது. வாசலில் ஜோசப் நிற்கிறான்.... அவனுக்குத் தெரியாமல் யாரால் உள்ளே நுழைய முடியும் ?"

பரம சாந்தத்தையன்றி வேறெதனையும் கண்டறியாத அன்னையின் மனத்தில் சிறு சலனம்.

"டிங்...டிங்...டிங்..."

ஆறு.

கூட்டு அஞ்சலி தொடங்க வேண்டிய நேரம். ஆனால், கூட்டு ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது !

அன்னை எதிரே பார்த்தார். நூற்றுக் கணக்கான மாணவ மாணவியர்கள் விதம் விதமாய் ஆடையும் அணிகலனும் பூண்டு நிற்கிறார்கள்.

மாணவிகள் இன்னும் ஒப்பனை அறைக்குள் போக வில்லே. எல்லோரும் இங்கேயே குழுமியிருந்தால், நடக்க வேண்டியவைகளை யார்தான் முன்னின்று செய்வது ? இந்தச் சோபனா எங்கே போய் விட்டாள்?

அதோ.....

சோபனா எங்கேயும் போய் விடவில்லே. அன்னையை நோக்கி, ஓடி வராத குறையாய், நடந்து வருகிறாள். அவள் முகத்தில் வியப்பா? சினமா? ஆச்சரியமா ?

"மதர் !.... புஷ்பத்தைக் கண்டுபிடித்து விட்டேன் !"

அன்னை மெல்லத் தலையசைத்தார்.

"எங்கே இருக்கிறாள்?" என்றார் ஸிஸ்டர்.

"வாருங்களேன், என்னுடன்.... ப்ளீஸ், மதர்....: நீங்களும்தான்...." சோபனாவின் குரல் மீற முடியாத ஆணை போலவும் ஏற்றுக் கொள்ளத்தக்க வேண்டுகோள் போலவும் இருந்தது.

சோபனா முன் செல்ல ஸிஸ்டரும் மதரும் பின்சென்றனர்.

கான்வென்டின் நுழை வாயில்: இடப் பக்கமாய்க் கட்டுமான மலை. இருபதடி உயரமுள்ள சிகரப் பகுதியில், ஓர் இளம் ஆட்டுக் குட்டியினை மார்போடு அணைத்துக் கொண்டு நல்மேய்ப்பர் மலையின் கீழ்ப் பாகத்தில் குடைவரை போன்ற ஓர் அமைப்பு. உட்புறத்தில் மேரி அன்னையின் அழகிய உருவச் சிலை. அதன் எதிரே, குகைச் சுவரை ஒட்டினாற் போல், மண்டியிட்டு, கண்மூடி.... புஷ்பம்!

புஷ்பம் எவர் கண்ணிலும் படாத இடமாகத் தேர்ந்தெடுத்து ஜபம் செய்து கொண்டிருந்தாள். அது நல்ல பழக்கம்தான். ஆனால் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நேரம் இதுவா?

"புஷ்பம்...." என்று அழைத்தார் அன்னை.

தேவனோடு உறவாடிக் கொண்டிருந்த அச்சிறு மலரின் இளமொட்டுக் கண்கள் மெல்ல மலர்ந்தன. எதிரே அன்னை, சகோதரி, ஆசிரியை.

புஷ்பம் விக்கித்துப் போய் விட்டாள்.

"புஷ்பம், என்ன பண்ணிண்டிருக்கே இங்கே?.... இம்ம்? மேக்கப் போட்டுக்கணும்ங்கிற ஞாபகமில்லே, உனக்கு? உன்னே எங்கெங்கெல்லாம் தேடறது?" என்று அதட்டினாள் சோபனா.

மெல்ல எழுந்தாள் புஷ்பம். தான் தவறு செய்து விட்டோமோ என்ற கலக்கம். அன்னை என்ன சொல்வாரோ என்ற அச்சம்.

"மதர்.. மதர்... மாணிக்கத்தோட டாடி செத்துப் பூட்டாங்கன்னு, அவ ரொம்ப அழுவா. இல்லே?...." புஷ்பம் நெஞ்சடைக்கக் கேட்டாள்.

"அவன் ஏன் சாகணும்?" என்றார் சகோதரி.

" அவனைத்தான் பாம்பு கடிச்சுட்டுதே, ஸிஸ்டர்?.... நல்ல பாம்பு கடிச்சா, பிழைக்க மாட்டாங்களாமே?"

"ஓ! அற்புதத்தைப் பற்றிச் சொல்கிறாளா, இவள்?"

"அவனைத்தான் ஆஸ்பத்திரிக்கு அனுப்பியாகிவிட்டதே ? டாக்டர்கள் பார்த்துக் கொள்வார்கள் அவனை...."

"டாக்டரால் முடியாமல் போனால்....?"

சோபனாவுக்கு எரிச்சல் பொங்கிற்று.

" உன்னால் முடியுமா?"

இகழ்ச்சியாய்க் கேள்வி கேட்டவரை இரக்கத்தோடு பார்த்தாள் புஷ்பம்.


"என்ன டீச்சர், அப்படிக் கேட்கிறீங்க? நம்ம மதர்கூட அடிக்கடி சொல்லுவாங்களே? பிரார்த்தனையால் செய்ய முடியாத காரியமே இல்லேன்னு. எங்க மம்மிகூடச் சொல்லுவாங்க— ஜபம் பண்ணினால் எல்லாக் கவலையும் தீரும்னு. நம்ம கிளாஸ் ரூம்லே கூட, சின்னச் சின்னதா எழுதிப் போட்டிருக்கே டீச்சர் ?"

'இயேசு நேற்றும் இன்றும், நாளையும் மாறாதவராயிருக்கிறார்', 'என்னை விசுவாசிப்பவர்களை நான் நேசிக்கிறேன்', 'என்னை நாடி வருபவருக்கு, நான் இளைப்பாறுதல் தரு

துடிப்புடன்
துள்ளும்
சக்தி



அளிப்பது பிரிட்டானியா ஹார்லிக்ஸ் பிஸ்கட்டுகள்



துடிப்பும், சுறுசுறுப்பும், ஊக்கமும், உற்சாகமும் உள்ள சிறுவர்கள் துள்ளி விளையாடுவது இயல்பு. அதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் அவ்விளையாட்டுகளினால் விரயமாகும் சக்தியை ஈடு செய்ய ஊட்டமுள்ள பிரிட்டானியா ஹார்லிக்ஸ் பிஸ்கட்டுகளைக் கொடுக்கலாம். அதுவே தாய்மார்கள் பொறுப்பு. உங்கள் சிறுவர்கள் விளையாட்டிலிருந்து வீடு திரும்பும் ஒவ்வொரு முறையும் அவர்கள் முகத்தில் புன்முறுவலுக்கான பிரிட்டானியா ஹார்லிக்ஸ் பிஸ்கட்டுகள் கொடுக்கத் தவறாதீர்கள்.

பிரிட்டானியா என்றாலே உயர்தரம்

கிறேன்', 'அடைக்கலம் நாடுகிறவன் ரட்சிக்கப்படுகிறான்'....

''அதனாலே, என்ன?''

''....மாணிக்கம் ரொம்ப நல்ல பொண்ணு மச்சர்..... அதனாலே அவ டாடி செத்துப் போகக் கூடாதுன்னு... பிரார்த்தனை... பண்ணிக்கிட்டிருந்தேன்.... மச்சர்.....''

அந்தூரா மனத்தின் மென்குரல் அங்கே ஒரு தெய்வீக மாறுதலைத் தோற்றுவித்துக் கொண்டிருந்தது.

''அற்புதம் பிழைத்துக் கொண்டு விட்டாளாம். ஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோனில் சொன்னார்கள்'' என்று கூறிக் கொண்டு வந்தாள் கல்யாணி.

அன்னை என்ற அருளுருவம் பெருமூச்சு விட்டது. பின் மெல்ல அசைந்தது. புஷ்பத்தை நோக்கி வந்தது. மனமும் தோலும் உடையும் துல்லியமான அப்பெரு மாட்டி புஷ்பத்தை அள்ளி அணைத்து உச்சி முகர்ந்தார். அரசந் தளிர் போன்ற கன்னத்தை ஆலஞ் சருகு போன்ற கன்னத்தோடு இணைத்துக் கொண்டார். கண்கள் பனித்தன. நெஞ்சு பாகாயது.

''புஷ்பம்... புஷ்பம்.... உண்மையில் நீதான் கனி. நான்... வெறும் புஷ்பம்.... இல்லை. புஷ்பம்கூட இல்லை. வெறும் மொட்டு. பச்சை நிறம் மாறாத மொட்டு.

''இங்கே ஓர் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கையில் — அதைச் சார்ந்த ஒரு குடும்பம் தவித்துக் கொண்டிருக்கையில் — மந்திரியின் நன்மதிப்பைப் பெறுவதற்காக நான் முயன்று கொண்டிருக்கிறேனே. என்ன, இது ?

'' எத்தனை பிரசங்கங்கள், ஜபங்கள்.... செய்திருக்கிறேன். நம்பிக்கை வரவில்லையே, புஷ்பம். தெளிவு ஏற்படவில்லையே ?

''உண்மையில், நீதான் அன்னை. நான்.... சிசு..... ஞான ஒளி பெறாத குழவி....''

''டிங்.... க்.....''

ஆறரை.

''ஓ ! நேரமாகி விட்டதில்லையா?.... வாருங்கள், போவோம். முதலில், அற்புதத்தைக் காப்பாற்றிக் கொடுத்ததற்காகக் கர்த்தருக்கு நன்றி தெரிவிப்போம். பிரார்த்தனையைப் புஷ்பம் நடத்துவாள்....''

அமைச்சரின் வருகைக்கு முன்னோடியாகப் போலீஸ் ஜீப் ஒன்று கான்வெண்டுக்குள் நுழைந்தது.

''மதர்... மினிஸ்டர் '' என்று இரைத்தாள் சோபனா.

''வரட்டுமே. நீ வரவேற்று அவர்கள் எல்லோரையும் ஆபீஸ் அறையில் உட்கார வை. பிரார்த்தனை முடியும்வரை அவர்கள் காத்திருக்கட்டும். கான்வெண்டைக் கர்த்தர் பரிபாலிக்கிறார்; மந்திரியோ மற்றப் பெரிய மனிதர்களோ அல்ல....'' என்று கூறி விட்டுத் திரும்பினார் அன்னை.

பூவின் அடியொற்றிக் கனி நகர்ந்தது.

அட்டைப்பட விளக்கம்:

இசை, கலை, இலக்கியம் - இவற்றில் நாட்டமின்றி இருப்பவர்களை வாலும் கொம்பும் இல்லாத மிருகமெனக் கூறுகிறது கவி மரபு.

ஆனால், நமது பாரதம் இம்மூன்றிலும் எந்த நாட்டைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறது. குறிப்பாக நம் தமிழ் நாடோ இவற்றுக்கு உறைவிடமாகவே விளங்குகிறது.

நமது நாட்டுப் பண்டிகைகள் இம்மூன்றின் அஸ்திவாரத்திலேயே பரிமளிக்கின்றன. உதாரணத்துக்கு நவராத்திரி பண்டிகை ஒன்று போதும்.

நம் தமிழ் நாட்டின் ஒவ்வோர் இல்லமும் கலை இல்லமாகத் திகழ்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் வைக்கப்படும் கொலு ஒன்று போதுமே, கலை உணர்வுக்கு! மாலை நேரம் வந்தால், கொலுவைக் காணப் போகும் பெண்களுக்குத்தான் என்ன சோதனை? என்ன பாட்டுத் தெரியும் என்று கேட்டுத் துளைத்து எடுத்து விடுவார்களே! இசைக்காத பெண்ணானாலும் இசையறிவில்லாத பெண்கள் வெகு வெகு குறைவு.

இலக்கியம்:....? ஒன்பது நாட்களும் பாராயணம் செய்யப்படும் நூல்கள் அனைத்துமே இலக்கிய நயம் படைத்தவை. துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி ஆகிய சக்தி தேவதைகளின் கதைகள் எத்தனை இனிமையானவை! படிக்கப் படிக்கத் தெவிட்டாதவையாயிற்றே!

வெள்ளைத் தாமரைப் பூவிலும் வீணை செய்யும் ஒலியிலும் உறைந்திருக்கும் சரஸ்வதிதேவி கல்விக்கு அதிதேவதை. கையில் சுவடியும் வீணையும் துலங்கக் காட்சியளித்தாலும் எல்லாக் கலைகளுக்கும் உறைவிடமான அவள் நடனத்துக்கும் நேரம் ஒதுக்கி யிருக்கிறாள் என்பதை இந்த ஹொய்சலச் சிற்பம் எடுத்துக் காட்டுகிறது. அந்த நர்த்தன சரஸ்வதியே 'கல்கி' நவராத்திரி இதழின் அட்டைப்படமாகத் திகழ்கிறாள். புகைப்படம்: ஸ்ரீ அ. ரா. கிருஷ்ணமூர்த்தி



மேலே உள்ள சரஸ்வதி ஆபூமலை, தில்வாரா ஆலயத்தைச் சேர்ந்தவள். படம் உதவி: தமிழக தொல் பொருள் இலாகா

போலோ சலோ!



☐ போலோ ஆட்டக்காரர்கள் மட்டக் குதிரைகள் மீது அமர்ந்து நீண்ட கழியால் பந்தைத் தட்டிக் கோலில் போடுவார்கள். ஆட்டம் சுவாரசியமாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கும்.

☐ கி.மு. 600ம் ஆண்டில் பாரசீகர்களும் துருக்கியர்களும் போலோ பந்தயம் ஆடியதாகப் பாரசீகக் கவி ஃபிர்தூசி குறிப்பிட்டிருக்கிறார்.

☐ இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் ஆங்கில ராணுவ அதிகாரிகளும் சமஸ்தானாதிபதிகளும் சுடுபாடு காட்டி இதனை வளர்த்தார்கள்.

☐ போலோ விளையாட்டு முந்நூறு கஜம் நீளம், இருநூறு கஜம் அகலம் உள்ள மைதானத்தில் ஆடப்படுகிறது. பந்து மூங்கில் வேரிலிருந்து மூன்று அங்குல கனத்தில் தயாரிக்கப்பட்டதாகும். ஒரு கோஷ்டிக்கு நான்கு குதிரை ஆட்டக்காரர்கள் வீதம் இரு அணிகள் போட்டியிடும். ஆட்டம் ஏழரை நிமிடங்களுக்குத் தொடர்ந்து நடக்கும். இதற்கு சக்கர் **(Chukker)** என்று பெயர். இப்படி ஒரு பந்தயத்தில் நாலிலிருந்து எட்டு 'சக்கர்' வரை ஆடுவார்கள். ஒவ்வொரு சக்கருக்கும் குதிரைகளை மாற்றிக் கொள்வார்கள். இந்தப் போலோ பந்தயத்தில் இரு அம்பயர்களும் குதிரைகள் மீது அமர்ந்து ஆட்டத்தைக் கண்காணிப்பார்கள்.


☐ ஒவ்வொரு போலோ ஆட்டக்காரருக்கும் தர நிர்ணயம் முந்தைய ஆட்டச் சாதனைகளின்படி நிர்ணயிக்கப் படுகிறது. நல்ல ஆட்டக்காரர்களுக்கு பிளஸ் 1, பிளஸ் 2, பிளஸ் 3 என்று வழங்கப்படும். ஆரம்ப ஆட்டக்காரர்கள் மைனஸ் 2லிருந்து ஆரம்பித்து மைனஸில் முன்னேற வேண்டும்! இந்தத் தர நிர்ணயப்படி **(Handicap)** ஆட்டத்துக்கு முன்பே கோஷ்டியின் தரம் பிளஸ்ஸா, மைனஸா என்று கணக்கிடுகிறார்கள். பிறகு ஆட்டம் நடக்கிறது! குதிரைகள் கால் தட்டிக் கோல் போனால் போனி கோல் **(Pony Goal)** என்று வழங்குகிறார்கள்!

☐ பரங்கிமலை நம்பியார் மைதானத்தில் நடந்த போலோ மாட்சில் தேசிய ராணுவ அகாடமியைச் சேர்ந்த மேஜர் ககாக் குதிரையைச் சக்கரவட்டமாகச் சுழற்றிப் பந்தைக் கொண்டு சென்ற அழகே பிரமாதமாயிருந்தது. தேசிய ராணுவ அகாடமியே, ஐந்து அடி உயரமுள்ள பிரும்மாண்டமான கோலங்கா கோப்பையை இறுதி ஆட்டத்தில் பெற்றது. தேசிய ராணுவ அகாடமி குழுவே ராமராவ் நினைவுக் கோப்பையையும் பெற்றுக் கொண்டது.

☐ தமது விறுவிறுப்பான ஆட்டத்தால் நமது மனத்தைக் கவர்ந்தவர் திரு ஏ. வி. முத்தையா. குதிரை அவர் சொன்னபடி ஆடியது. பந்தும் அவர் கையில் படாத பாடு பட்டது. மெட்ராஸ் போலோ ரைடர்ஸ் கிளப்பைச் சேர்ந்த எம். வி. பிரகாஷின் ஆட்டம் கலையாயிருந்தது. இவருக்கு இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியளித்த கோப்பை பரிசாகக் கிடைத்தது. இந்தப் போலோ பந்தயத்தில் இளைஞன் பிரகாஷ் வருங்காலத்தில் சிறந்து விளங்குவதற்கான அறிகுறியைக் கண்டோம். —குண்டுமணி

---

1. தேசிய ராணுவ அகாடமியைச் சேர்ந்த மேஜர் ககாக். 2. நேரம் கண்காணிப்பவர். 3. பிரதம ரெபரி 4, 5. போலோ அறிவிப்பாளர்கள்.




ஜப்பானியக் குட்டிக் கதைகள்

1

ஓர் இளம் சந்நியாசி ஒரு நாள் நட்சத்திரங்கள் நிறைந்த இரவில் நீண்ட மூங்கில் கழியை எடுத்துக் கொண்டு தோட்டத்துக்குச் சென்றான். பெரிய சந்நியாசி அவன் என்ன செய்கிறான் என்று பார்ப்பதற்காகப் பின்னால் சென்றார். இளம் சந்நியாசி மூங்கில் கம்பை வேகமாகச் சுழற்றியவாறு நின்றான்.

''அப்பனே! என்ன செய்கிறாய் நீ?'' என்று வினவினார் மூத்தவர்.

''அதோ அந்த ஆகாசத்தில் உள்ள நட்சத்திரங்களை அடித்து உதிர்க்க முயற்சி செய்கிறேன்'' என்று பதில் வந்தது அவனிடமிருந்து.




இதைக் கேட்டதும் 'ஓஹோஹோ' என்று பலமாகச் சிரித்தார் பெரிய சந்நியாசி.

''அப்பனே! எவ்வளவு பெரிய முட்டாள் நீ! இவ்வளவு சின்னக் கம்பால் அவ்வளவு தூரத்தில் உள்ள நட்சத்திரங்களை உதிர்க்க முடியுமா? ஓடு அப்பனே, மொட்டை மாடிக்குப் போய் நின்று கொண்டு கம்பை வீசு'' என்று கூறினார்.

2

ஒரு கிராமத்தில் கருமி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் தன் மகனைக் கூப்பிட்டுப் பக்கத்துக் கிராமத்துக்குப் போய், அங்குள்ள மற்றொரு கருமியைப் பார்த்து வரச் சொன்னான். போகும் இடத்துக்குச் சும்மா போவார்களா? ஒரு பன்றிக் குட்டியின் படம் வரைந்து அதைத் தனது அன்பளிப்பாக இரண்டாம் கருமியிடம் கொடுத்துவிடும்படி கூறினான்.



மகன் பக்கத்துக் கிராமத்துக்குச் சென்றபோது இரண்டாம் கருமி வீட்டில் இல்லை. அவனுடைய மகன்தான் இருந்தான்.

அவன் அன்பளிப்பை வாங்கிக் கொண்டு, ''நான் உனக்குப் பிரதியாக ஏதாவது அன்பளிப்புத் தரவேண்டும். இந்தா இந்த ஐந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்துச் செல்'' என்று கைகளைக் குவித்து ஆரஞ்சுகளை உருட்டிவிடுவது போல் சைகை காட்டினான். 'ஆரஞ்சுகளை'ப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பினான் முதல் கருமியின் மகன்.

வீட்டுக்குத் திரும்பி வந்த இரண்டாம் கருமியிடம் அவனது பிள்ளை நடந்ததைச் சொன்னான். உடனே, தகப்பன் தலையில் அடித்துக் கொண்டே, ''அடே, இப்படி இருந்தால் நீ எப்படி உருப்படுவாய்? ஐந்து ஆரஞ்சு எதற்கு? இரண்டு கொடுத்தால் போதாதா? அதுவும் நீ காட்டும் சைகையைப் பார்த்தால் பெரிய பெரிய ஆரஞ்சுகளாக உருட்டி விட்டிருப்பாய் போலிருக்கிறதே!'' என்று பிரலாபித்தான்.

- என். ராஜாமணி

திருமணத்தில் களவு

• சரவணன் •

(கல்யாண வீடு. காலை முகூர்த்த நேரம். மேள வாத்தியம் முழங்குகிறது. விருந்தினர் வந்தவண்ணம் இருக்கிறார்கள். ஒரே அமளி!)

பெண்ணின் தந்தை சாந்தலிங்கம்: வாங்க! வாங்க! மிஸ்டர் விசய மூர்த்தி! ஏன் உங்கள் வீட்டிலே வரவில்லையா? டேய்! ராஜா! இவரை அழைத்துப் போய் டிபன் பண்ணி வை. ஓ! ஞானகியம்மாவா? வாங்க. உமா! இவர்களை உள்ளே அழைத்துக் கொண்டு போ!

நண்பர் நமச்சிவாயம்: சாந்தலிங்கம்! எனக்கு அவசரமான வேலை இருக்கிறது! நான் பிறகு வருகிறேன். இந்தா! இதை என் பெயரால் பெண்ணுக்கு ஓதிவிடு!

உமா: என்ன? சமையற்கட்டில் ஒரே கலாட்டா? வந்து பாருங்க!

சாந்தலிங்கம்: ஏ, கப்பையா! என்ன ஒரே கலாட்டா இங்கே?

சமையற்காரச் கப்பையா: ஒன்றுமில்லே, சார்! இதோ இவர் பிள்ளை வீட்டு மூன்றும் மாப்பிள்ளையின் நண்பருக்கு நண்பராம்! எனக்கு அது எப்படித் தெரியும்! யாரோ தண்டச் சோத்துக்காரராக்கும் என்று எண்ணி விட்டேன். என் பதினெட்டு வருஷத் தொழில் அனுபவத்திலே, பல தண்டச் சோத்துப் பட்டாளங்களைக் கண்டிருக்கிறேன். கண்டுபிடித்து வெளியேற்றியுமிருக்கிறேன். சார், ஒரு யோசனை...

சாந்: என்ன?

கப்பையா: நீங்கள் ஒன்று செய்தால் தேவலை. அதாவது, பெண் வீட்டாருக்கும், பிள்ளை வீட்டாருக்கும் ஓர் அடையாள பில்லை கொடுத்து, அதை அவர்கள் சட்டையிலோ, புடவையிலோ குத்திக் கொள்ளச் செய்தால், குழப்பத்துக்கோ தகராறுக்கோ இடமிருக்காது. போன மாதம் வக்கீல் விக்னேசுவரன் வீட்டுக் கல்யாணத்திலே அப்படித்தான் நடந்தது!

மணப்பெண் பவானி: அப்பா! எங்கள் ஆபீஸ் காஷியர் அதோ நிற்கிறார். அவரை யாரும் வரவேற்கக் காணோம். நாளைக்கு ஆபீஸில் என் மானத்தை வாங்கி விடுவார். போய் அவரை ரிஸீவ் பண்ணுங்கோ அப்பா!

சாந்த: இதோ நான் கவனிக்கிறேன். அவர் பெயர் என்ன அம்மா?

பவானி: டேனியல்!

சாந்த: வாங்க மிஸ்டர், டேனியல்! வணக்கம். டேய், கிட்டு. இவரைக் கவனி முதலில்.

ரங்கசாமியின் குரல்: களவு! களவு!

உமா: (பரபரப்புடன்) ஐயோ! களவா?

சாந்: என்ன போயிடுத்து? ஆமாம், என் தோல் பை எங்கே? உன்னிடம்தானே கொடுத்தேன்?

உமா: ஐயையோ! எங்கே வைத்தேன்? நினைவுக்கு வரவில்லையே! ஏ, லட்சுமி! தோல் பையைப் பார்த்தாயா? ஏ, ருக்கு! நீ கண்டாயா? அடே, சந்துரு, நீ பார்த்தாயாடா பையை! பாருங்களடா! இரண்டாயிரமடா!

ஒருவர்: இம்மாதிரி கூட்டங்களில் இதற்கென்றே ஒரு கூட்டம் வருகிறது, சார்! இப்படித்தான் போன வாரம் என் மைத்துனர் வீட்டுக் கல்யாணத்திலே பெண்ணின் கூரைப் புடவையே திருட்டுப் போயிடுத்து.

இன்னொருவர்: அபசகுனமாச்சே!

இரண்டாமவர்: திருட வருகிறவனுக்கு அதைப் பற்றி என்ன கவலை? அவனுக்குச் சுப சகுனம், புடவை கிடைத்தது.

நண்பர்: சார்! உடனே போலீசுக்குத் தகவல் கொடுங்கள் சார்!

உமா: எங்க! நம் குழந்தையின் கழுத்துச் செயினைப் பார்த்தீங்களா?

சாந்: ஐயையோ! செயினா? நான் பார்க்கவில்லையே, உமா!

(சமையற்காரச் கப்பையா பரபரப்புடன் ஓடி வருகிறார்.)

கப்பையா: சார்! சார்! அக்கிரமம் சார்! என் டெரிலின் சட்டையை எவனோ அபேஸ் பண்ணிவிட்டான் சார்!

சாந்: எங்கே வைத்திருந்தீர்?

கப்பையா: சமையற்கட்டில் ஒரு பைக்குள் வைத்து ஆணியில் மாட்டியிருந்தேன்,



சார் ! வாங்கி முதன் முதல் உங்கள் வீட்டுக் கல்யாணத்துக்குத்தான் போட்டுக் கொண்டு வந்தேன். நாற்பது ரூபாய் சார் ! நாற்பது ரூபாய் !

சாந்: கப்பையா ! கவலைப்படாதீர்கள் ! நான் உங்களுடைய நஷ்டத்தை ஈடு செய்து விடுகிறேன். நீர் போய் வேலையைக் கவனியும்!

(அச்சமயம் மணப்பெண் பவானி எழுந்து பர பரப்புடன் ஓடி வருகிறாள்.)

பவானி: நகைப் பெட்டி....

சாந்: காணுமா? தெய்வமே! என்னைச் சோதிக்கிறாயா? முருகா!

சத்திரத்தின் மானேஜர்: சார்! சார் ! ஹாலில் போட்டிருக்கும் விளக்குகளில் மூன்று பல்புகளைக் காணவில்லை. இது உங்கள் கைப் பொறுப்பு! இப்போதே உங்களிடம் சொல்லி விட்டேன்! பிறகு தகராறு செய்யக் கூடாது! ஆமாம் !

உமா : (மகிழ்ச்சி கொந்தளிக்க) இப்படி வாங்க !

சாந்: என்ன, உமா ?

உமா: உங்கள் தோல் பை கிடைத்து விட்டது.

சாந்: ஆ! கிடைத்துவிட்டதா? அப்பாடா! முருகா! முருகா! ஆமாம்! எங்கே இருந்தது?

உமா: என் தங்கை சாந்தாவிடம் கொடுத்திருந்தேன். கல்யாணச் சந்தடியில் அதை மறந்தே போய் விட்டேன்!

கப்பையா: சார் ! கிடைத்து விட்டது. என் டெரிலின் சட்டை !

சாந்: எங்கே இருந்தது ?

கப்பையா: என் அஸிஸ்டெண்ட் அண்ணு சாமி பத்திரமாய் எடுத்து வைத்திருந்தான். என்னிடம் வேலை செய்யும் ஆட்கள் அத்தனை நாணயமுள்ளவர்கள். பெருமைக்குச் சொல்லவில்லை, சார் !

சாந்: நல்ல வேளை! போ ! உழைத்துச் சம்பாதித்த சொத்து, என் சொத்து !

பவானி: அப்பா ! அம்மா ! குழந்தை லதாவின் செயின் கிடைத்து விட்டதாம்.

உமா: எங்கே இருந்தது ?

ராதா: நீயே கழற்றிப் பெட்டியில் வைத்து விட்டு, ஞாபக மறதியில் கலாட்டா செய்து விட்டாய் !

உமா: ஆமாண்டி ! மறந்தே போய்விட்டேன் !

சாந்: நல்ல ஞாபக மறதி போ! கல்யாணக் கலாட்டாவில் தாலி கட்ட மறந்த கதையாக இருக்கிறது !

புரோகிதர்: சார் ! சார் ! அது நூற்றுக்கு நூறு உண்மை !

சாந் : எது நூற்றுக்கு நூறு உண்மை ?

புரோகிதர் : தாலி கட்ட மறந்த விஷயம்!

சாந்: நல்ல வேளை! சத்திரத்தின் மானேஜர் மூன்று பல்புகளைக் காணவில்லை என்றீரே !

மானேஜர்: சார் ! பல்புகள் கிடைத்து விட்டன. வேலைக்காரப் பையன் கழற்றி வைத்திருந்தான்.

தங்கை : அண்ணு! நகைப் பெட்டி கிடைத்து விட்டது.

சாந்: ஆ! கிடைத்து விட்டதா ?

தங்கை: ஆமாம், அண்ணு ! அந்தப் பெட்டியின் மேலே கறிகாய் மூட்டையைத் தள்ளி விட்டார்கள் யாரோ ! பெட்டி

வறுமை ஒழிய வழி என்ன?



–அமெரிக்கத் தூதர் கீட்டிங் நிகழ்த்திய ஒரு சொற்பொழிவிலிருந்து

அமெரிக்காவில் பத்து முதல் பதினைந்து சத விகிதம் ஜனத்தொகையினர் ஏழைகள் என்று கருதப்படுகிறார்கள். ஆண்டொன்றுக்கு 23,000 ரூபாய்க்குக் குறைவாக ஒருவரின் வருமானம் இருந்தால் அவர் ஏழை!

ஆகவே இன்று அமெரிக்காவில் ஏழைமையை எதிர்த்தும் போராட்டம் என்னும் போது ஏற்றத் தாழ்வுகளை ஒழிப்பது என்பதே அதன் உண்மைப் பொருளாகும்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், பொருளாதார ரீதியில் அடிமட்டத்தில் உள்ளவர்களை உயர்த்த அமெரிக்காவின் மத்திய, ராஜ்ய அரசாங்கங்கள் இருபத்தையாயிரம் கோடி டாலர்களை அதாவது நூற்று எண்பத்து ஏழாயிரம் கோடி ரூபாய்களைச் செலவழித்திருக்கின்றன. ஆனால் இன்னமும் ஏழைகள் அமெரிக்காவில் இருக்கிறார்கள் ! ஆகவே பண உதவி மட்டும் ஏழைமையை ஒழித்துவிடமுடியாது எனக்கண்டோம்.

ஏழைமையை ஒழிக்க நிக்ஸனின் புதிய கொள்கை, அமெரிக்க மக்கள் எல்லாருக்கும் குறைந்த பட்ச வருவாய் கிடைக்கச் செய்வதேயாகும். வேலையிலும் தொழிலிலும் மக்களின் திறமையை அதிகரிக்கச் செய்வது திட்டத்தின் மற்றொரு அம்சம். இதன் மூலம் அதிக வருவாய் தேடிக் கொள்ள அவர்கள் ஊக்குவிக்கப் படுகிறார்கள்.



கோட்டமருதூர் கிராமாதிகாரியும், பிரபல ஜோதிடருமான ஸ்ரீ பாரத்வாஜ ஜெயராமய்யரின் புதல்வி சௌ. மங்களாம்பிகைக்கும், சேலம் ஸ்ரீ நரசிம்மய்யர் குமாரர் சிர. பாலசுப்ரமணியனுக்கும் (ஸதர்ன் ரெயில்வே குண்டக்கல்) 21-9-69ல் கோட்டமருதூரில் விவாகம் சிறப்பாக நடைபெற்றது.

"வாழ்க மணமக்கள்!"

KS,G,14,68 TM

க்ருஷன்

எந்த வயதிலும் உங்களை 'இளமையோடு' இருக்கச் செய்கிறது

தினமும் க்ருஷன் சாப்பிட்டு என்றும் இளமையோடு விளங்குங்கள். க்ருஷனில் சரிசமமாகச் சேர்ந்துள்ள முக்கியமான ஆறு தாது-உப்புகள் மலச்சிக்கல், மூட்டுவலி, ஈரல் மற்றும் மூத்திரப்பைக் கோளாறுகள், பிடிப்பு வலி முதலியவை வராமல் தடுக்கின்றன.

க்ருஷன் உங்களை இளமையோடு வைத்திருப்பதன் விதம் இதுதான்: மூத்திரப் பைகளைக்கழுவுகிறது • ஈரலை நன்றாக இயங்கச் செய்கிறது • இரத்தத்தை சுத்தமாக்க உதவுகிறது • மலச்சிக்கல் அகல உதவுகிறது • ஜீரண சக்தியைப் பெருக்குகிறது • பசி யெடுக்க வைக்கிறது • மூட்டுவலிகளை அகற்றுகிறது.

எளிய முறையில் என்றும் இளமையோடு விளங்க தினந்தோறும் ஒரு ஸ்பூன் **க்ருஷன்** சாப்பிடுங்கள்.



ராம்தீர்த் பிரஹமி ஆயில்

(ஸ்பெஷல் நெ. 1) (ரிஜிஸ்டர்டு)



கூந்தல் உதிர்வதையும், பொடுகையும் தடுத்து கேசத்திற்கு கரு நிறத்தையும், பளபளப்பையும் அளிக்கும் ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம். பல உயர்ந்த மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. மூளைக்குக் குளிர்ச்சி யளித்து, ஞாபக சக்தியை அதிகரித்து, கண் எரிச்சலேயும், அடிக்கடி ஏற்படும் தலைவலியையும் போக்கி நிம்மதியான நித்திரையை அளிக்கிறது.

SHRI RAMTIRTH YOGASHRAM

DADAR – BOMBAY-14

"YOGIC CLASSES"

எமது சென்னை ஆபிஸில் யோகாசன வகுப்புகள் நடத்தப்படுகின்றன

மதராஸ் பிராஞ்சு: 25, நைனியப்ப நாயக் தெரு, சென்னை-3

போன்: 34258

அதன் அடியில் மறைந்து கிடந்தது. அவ்வளவுதான்.

மருமகள் சேகர்: எல்லாம் சரியாக இருக்கும் போது, யார் இப்படிக் கலாட்டா செய்தது ?

பெண் பவானி: எல்லாம் மாமா ரங்கசாமி தான் ! அவர் செய்த புரளிதான்!

உமா: எங்கே என் அண்ணா ?

சாந்: ரங்கசாமியா ? அவன் மாடியிலே சீட்டாடிக் கொண்டிருக்கிறார்.

உமா (மாடிக்குப் போய்) : அண்ணா !

ரங்க: என்ன உமா? என்ன சேதி ?

உமா: என்ன களவு போச்சு? நீ புரளி பண்ணி விட்டாயாமே! உன் மருமாள் உமா சொல்கிறாள் !

ரங்கசாமி: இதோ பார், உமா ! நான் புரளி கிரளி பண்ணவில்லை. நான் கண்ணால் பார்க்காத ஒன்றைச் சொல்லவே மாட்டேன். என் சுபாவம் உனக்குத் தெரியாதா ?

உமா : தெரியும், அண்ணா! ஆனால் ஒன்றும் திருட்டுப் போனதாய்த் தெரியவில்லையே !

ரங்கசாமி: களவு போனது உண்மைதான். ஆனால் போன பொருளைத் தேடாமல் போகாத பொருள்களைத் தேடியிருக்கிறீர்கள். இப்பொழுது புரியவைக்கிறேன். குருசாமியின் மகள் தங்கத்தைக் கூப்பிடுங்கள் !

தங்கம்: என்னைக் கூப்பிட்டீர்களா?

ரங்க: ஆமாம், களவு கொடுத்தவள் இவள்தான் ! என்னம்மா, குழந்தை ! உண்டா, இல்லையா?

(தங்கம் மௌனமாய் நிற்கிறாள்.)

சாந்: சொல்லம்மா ! உன் உடைமையும் கிடைத்து விடும்.

உமா: ஏண்டி, தங்கம்! சும்மா மௌனமாய் நிற்கிறாய்? பொருளைப் பறி கொடுத்து விட்ட பரபரப்போ துக்கமோ ஏதும் துளிக் கூட உன் முகத்திலே காணோமே !

ரங்க: தங்கம் கூச்சப்படுகிறாள்! பாவம்! என்ன இருந்தாலும் சிறிசுதானே ?

உமா: களவு போனதைப் பற்றிக் கூறுவதில் கூச்சம் என்னவாம்? சொல்லடி, தங்கம்!

ரங்க: ஏதாவது நகை நட்டாக இருந்தால் கூச்சத்துக்கு இடமில்லை. அவள் பறி கொடுத்து விட்டது வேறொன்று ஆயிற்றே !

(நகைக்கிறார்.)

உமா: என்ன புதிர் போடுகிறீர்கள் ?

சாந்: நான் புதிரை அவிழ்க்கட்டுமா?

ரங்க: உமக்கும் தெரிந்து விட்டதா அது?

சாந்: ஏன் தெரியாமல்? நான்தான் நேற்று மாலையிலிருந்தே கவனித்து வருகிறேனே !

ரங்க: தங்கத்தின் மனத்தை ஒருவன் களவாடி விட்டான். களவாடியவன் யார் தெரியுமா ? உன் தங்கை அபிராமி இருக்கிறாளே! அவளுடைய மகன் பிரபாகர் !

உமா: அப்படியா சமாச்சாரம் ? ஏண்டி, தங்கம்! இதை முன்பே சொல்லக் கூடாதோ?

தங்கம்: அவங்க அப்பாவும் எங்க அப்பாவும் ஏதோ அற்ப விஷயத்துக்காகப் பேசாமல் இருக்கிறார்களே! சொன்னால் எதில் கொண்டு போய்விடுமோ ?

உமா: அட, பிரபாகர்!

பிரபாகர்: ஏன் பெரியம்மா! நான் தங்கத்தின் மனத்தைக் களவாடியது இருக்கட்டும்! அவள் மட்டும் என் மனத்தைக் களவாடலாமா ?

ரங்க: அப்படியானால் இரண்டு பேரும் பெரிய குற்றம் செய்தவர்களாகிறீர்கள் !.... எனவே, அடுத்த முகூர்த்தத்தில் தண்டனை நிறைவேற்றப்படும்.

சாந்: இதே சத்திரம், இதே கப்பையா, இதே புரோகிதர் சாட்சியாக !


புரோகிதர் : பேஷா ! இந்த மாதம் இருபத்தெட்டாம் தேதி பேஷான நாள் இருக்கிறது!

மூன்று வயதுக் கிதாசிரியர்!

புகழ்பெற்ற ஆமதாபாத் ஓவியர் திரு பானு ஷாஹா ஒரு நாள் சில நண்பர்களைத் தம் இல்லத்துக்கு அழைத்திருந்தார். அவ்வமயம், ஷாஹாவின் மூன்று வயதுக் குமாரன் சூரஜித் தன் பெற்றோர்களைப் பற்றிச் சில கதைகளைச் சொல்லி விருந்தினர்களை மகிழ்வித்தான். மகன் குஜராத்தி மொழியில் கூறியவற்றை பானு ஷாஹா சுருக்கெழுத்தில் குறிப்பு எடுத்துக் கொண்டார். அந்தக் கதைகள் 'பெரிய கரிய மழை' என்ற தலைப்பில் நூல் வடிவில் பிரசுரிக்கப் பெற்றன. மூன்றாவது பிராயத்திலேயே நூலாசிரியனாகி விட்டான், சூரஜித் !

அதுமட்டுமா? பக்கத்து வீட்டிலுள்ள ஸொடியா கோஹன் என்ற எட்டு வயது அமெரிக்கச் சிறுமி, அந்தக் குஜராத்தி நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விட்டாள்! அதுவும் நூல் வடிவம் பெற்றுவிட்டது! மூன்று வயது ஆசிரியனின் நூலை மொழிபெயர்த்தவள் எட்டு வயதுச் சிறுமி யென்றால், அவ்விரு நூல்களுக்கும் சிறப்பாகச் சித்திரங்கள் தீட்டியவள் சூரஜித்தின் தமக்கை ஆனந்தி ஷாஹா! இவ்விரு நூல்களும் ஆமதாபாத்தில் வெளியிடப்பெற்றன.

வி. எஸ். வாங்கடன்கர். ❀ தமிழில்: ரா. பா.



வட்ட மேஜை

சென்ற ஓராண்டு காலமாக அமெரிக்காவின் பல மாகாணங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருக்கும் சுவாமி ஸ்ரீ ரங்கநாதானந்தா அவர்கள் அதே காரியம் நிமித்தமாகத் தென் அமெரிக்க நாடுகளுக்கும் விஜயம் செய்தார். அவர் மெக்ஸிகோ, பனாமா, கொலம்பியா, பிரேஸில், வெனிசுவேலா ஆகிய தேசங்களில் பலவேறான சமயத் தலைப்புக்களில் ஆற்றிய சொற்பொழிவுகளை அத்தேசத்து மக்கள் ஆவலுடன் கேட்டனர்.

பிரேஸிலில் அவர் ஒரு வாரம் தங்கியிருந்த போது ரியோடிஜெனிரோவிலும், தொழில் நகரமான ஸாவ் பாவ்லோ (Sao Paulo) விலும் ஆற்றிய சொற்பொழிவுகளைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது எனது பாக்கியம். அவர் ரியோடி ஜெனிரோவில் ''இந்தியக் கலாசாரத்தின் ஆன்மா'' ''தனி மனிதனின் கௌரவம்'' ''நாங்கள் போற்றும் கிறிஸ்து'' என்னும் தலைப்புக்களில் பேசினார். அவருடைய சொற்பொழிவுகள் உடனுக்குடனேயே இந்த ஊர் மக்களின் வசதிக்காகப் போர்த்துகீசிய மொழியில் பெயர்க்கப்பட்டன. அவரை டெலிவிஷனிலும் பேட்டி கண்டனர்.



தென் அமெரிக்காவின் எல்லாத் தேசங்களிலும் கத்தோலிக்க மதமே பெரும்பான்மை மக்கள் பின்பற்றுவது. அப்படியிருக்க அவர், ''நாங்கள் போற்றும் கிறிஸ்து'' என்னும் தலைப்பில் ஆற்றிய சொற்பொழிவு இங்குள்ள மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமல்லாமல் அவர் எடுத்துக் கூறிய விவரங்கள் அவர்களை ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. அவர் விவிலிய நூலிலிருந்தும் மற்ற பல கிறிஸ்துவ சமய நூல்களிலிருந்தும் எடுத்துக்காட்டிய மேற்கோள்கள் அவர் இவ்விஷயம் பற்றி எவ்வளவு தூரம் ஆராய்ந்து சிந்தித்திருப்பார் என்பதைத் தெளிவாக்கின. அவர் எந்த விஷயம் பற்றிப் பேசினாலும் மக்களுக்கு நன்றாகப் புரியும்படியும் மனத்தில் பதியும்படியும் விளக்குகிறார்.

ரியோ டிஜெனிரோ,
பிரேஸில் — கோமளா கிருஷ்ணஸ்வாமி
16-9-69 — இந்திய தூதராலயம்

ஆயிரக்கணக்கான தீவுகளைக் கொண்ட இந்தோனேசிய நாட்டில் சுமத்ரா தீவின் தலைநகரமாகிய மீடான் சுற்றுவட்டாரத்தில் சுமார் இருபதினாயிரம் தமிழ்ப் பெருமக்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர். தாய்நாட்டிலிருந்து சுமார் இரண்டாயிரம் மைல் தூரத்திலிருந்தாலும், தேனினுமினிய நம் தமிழ் பாஷையைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் குறைந்தவர்களில்லை.

அவர்களின் ஆர்வத்துக்கு ஈடாகத் தமிழ்ப் பாட புத்தகங்கள் கிடைப்பது வெகு அரிதாக உள்ளது. சுமார் ஐயாயிரம் குழந்தைகள் பாடப் புத்தகங்கள் இல்லாது தவிக்கின்றனர். இங்குள்ள புத்தகங்கள் எல்லாம் பழையவையாகப் போய் விட்டன. எல்லாக் குழந்தைகளுக்கும் போதவே இல்லை.

ஆகையால் இந்த நல்ல வேண்டுகோளை உயர்ந்த கைங்கரியமாகக் கருதி, கீழ்க் கண்ட முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அரிச்சுவடி முதல் எட்டாம் வகுப்பு வரையிலுள்ள பாட நூல்களையும், இந்து சமய சம்பந்தமான நூல்களையும் தாராளமான மனத்துடன் அனுப்பி வைக்கும் மகா புண்ணியத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

V. Nityananthan,
Djl Ledjen S. Paraman
Lorong, Bulan No. 245
Medan, Indonesia.

''நாத விளையாட்டு'' மிகவும் அழகான முறையில் முடிவுற்றது. நுனிக் கரும்பில் ஆரம்பித்து, அடிக் கரும்பில் முடிந்தது. வாரா வாரம் சுவை அதிகரித்து, பின் இனிய சுவையுடன் முடிந்தது. இவ்வளவு சுவையுள்ள கதையை உருவாக்கிய திரு கு. அழகிரிசாமிக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

அம்பாலா கான்ட் — பெருமாள்
4-10-69 — மூர்த்தி
கே. கி. சுவாமி
இரா. சிவ

காந்தி மலரில் ''ஸ்படிகம்'' என்ற கதையைப் படித்தேன். அண்ணலின் நூற்றாண்டு பிறந்த தினத்தில் இதைவிடச் சிறந்த கருத்துள்ள கதையைப் படிக்க முடியாது. புராதனமான பாரதப் பண்பைப் பிரதிபலிக்கும் ஸ்படிகம்தான் யக்கும்.

நாகை
2-10-69 — எஸ். ஜெயராமன்

''அம்புலிக்கு அப்பால்'' படக் கதை பாராட்டப்பட வேண்டிய ஒன்று. புதிய முயற்சி. ஆசிரியருக்கு எமது பாராட்டுகள். தமிழ் வாசகர் உலகம் வரவேற்க வேண்டிய ஒன்று.

சத்தியமங்கலம் - 2
6 - 10 - 69 — கே. பி. தங்கவேலு பி.காம்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



REGISTERED No. M. 4399
Registered as a Newspaper in Ceylon

